




மூலிகைமணி

மூலிகை வளமே நாட்டு வளம்





உ

இறைவனுய் இருப்பாய்!

முத்தமிழ் உலகு போற்றும் மூலிகை மன்னர் மன்ன !
சித்தரே, நாங்கள் கண்ட செல்வமே, தேவ ரீரே !
இத்தரை உயிரெல் லாமும் இனிதுய்ய வைத்துக் கூற்றைப்
பட்டினி போட்ட தாலே பறித்ததோ உயிரைத் தானே !

தான்தன தில்லா வண்ணம் தணிகைவே லவனே தானுய்
வான்புகழ் கொண்டு சித்த வைத்தியம் தழைக்க வைத்த
கண்ணப்பப் பெரியோய் நீதான் கண்தந்த முனிவ னுமோ
திண்ணப்பன் என்று உன்னைச் சேக்கிழார் பேசு வாரே !

வாரும்நீ மீட்டும் இங்கே......வாரியார் சாற்றும் மன்ன !
சீருற 'சித்தம்' மேன்மேல் செம்மலே பிறப்புக் கொள்க !
மேருவாய் எங்கள் நெஞ்சில் மேவியே குடிகொண் டிட்டாய்
பாருல கெல்லாம் போற்றப் பரவுக 'சித்தம்' நன்றே !

நன்றுநீ நலமே தந்தாய் நந்தமிழ் மருத்து வம்மாம்
குன்றின்மேல் ஏறிநின்ருய் குவலய விளக்காய் மாண்டாய்
என்றும்நீ, எங்கள் உள்ளே இறைவனுய் இருப்பாய் !
[நாங்கள்
ஒன்றியே உன்றன் கொள்கை ஒளியுறச் செய்வோம்தாமே!

—**கவிஞர் க. அ. பிரகாசம்,**
கொடுமுடி-1

உ

மூலிகை வளமே ! முருகா நாட்டு வளம் !!

ஐந்துகரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்று கின்றேனே.

மூலிகை மணி

மலர் 15	சித்நாத்திரி ஹூ மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு'79 வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி இணைப்பிதழ்	இதழ் 7, 8, 9, 10

ஆன்மநேய ஆசிரியர்
அமரர் 'மூலிகை மன்னர்'
'மூலிகை உலகின் வாரியார்'
வேலூர் டாக்டர்
ஏ. ஆர். கண்ணப்பர் அவர்கள்

⊙

நிர்வாக ஆசிரியர் :
மூலிகை ஆராய்ச்சியாளர்
க. வேங்கடேசன் M. A.,

⊙

இணைப்பு இதழ்
விலை ரூ. 3-00

⊙

'மூலிகை மணி' தொடர்பான அனைத்துக் கடிதத் தொடர்பினையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

ஆசிரியர், மூலிகை மணி
22, திருமலைப்பிள்ளை வீதி, எண் 2
தி. நகர், சென்னை-600 017
அஞ்சல் பெட்டி எண். 1406
தொலைபேசி : 442947

அன்பார்ந்த வாசகப்பெருமக்களே

வணக்கம் !

மூலிகை மன்னர், அமரராகிய பின்னர் வரும் முதல் இதழாதலால் அப்பெருந்தகைக்கு,

'வீர வணக்கம் செலுத்தும் புகழஞ்சலி மலராக,' இவ்விதழை வெளியிட்டுள்ளேன். எதிர்பாரா்த இடர்ப்பாடுகளால் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி இதழ்கள் வெளிவருவதுதாமதமாகியது. அவற்றை ஒன்றுக இணைத்து, 140-பக்க அளவில், ஒரே இணைப்பு இதழாக வெளியிட்டுள்ளேன். புரட்டாசி ஐப்பசி இணைப்பு இதழ் இம்மாத இறுதிக்குள் வெளிவரும். அதற்குப்பின் உரிய நேரத்தில் 'மூலிகை மணி' தொடர்ந்து வெளிவரும்,

தாமதத்தினை மன்னித்தருள வேண்டுகிறேன். தொடர்ந்து தங்களின் பேராதரவினை எதிர்நோக்கி **'மூலிகை மணி' மேலும் வலிவோடும், பொலிவோடும் நல்வாழ்வுப் பணியாற்றும்.**

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

HERBS & HEALTH

(Quarterly Siddha Medical Magazine)

Editor

Herbalist **K. VENKATESAN**, M.A., (Ph.D.)

A kind request

Dear Readers,

I am very glad to inform you that another journal in English by name HERBS & HEALTH is going to be released during the Month of February '80, from the House of Mooligai Mani. This is going to be a quarterly Medical journal devoting fully to promote and propagate, the various Medicinal aspects of herbs.

Pictorial illustration of herbs,
Scientific analysis of herbal Medicine,
Collection of home remedies,
Tribal and folk Medicines,

are some of the topics to be discussed in this journal. The aim of the journal,

Primarily is to expose the hidden facts of herbs.

Secondly, to propagate the Siddha system of Medicine (one of the traditional systems of Asian Medicines) so that the system will flourish every where.

Kindly send your subscription to the address given below:—

Single Copy	Rs. 3-00
Annual Subscription	Rs. 12-00

Address :

The Editor, **Herbs & Health,**
22, Thirumalai Pillai Road,
St., (No. II) T' Nagar
MADRAS-600017

Yours Sincerely,
K. VENKATESAN
Editor.



அமரர் மூலிகை மன்னருக்கு வீர வணக்க உரை

வழி நடத்துங்கள் தந்தையே!

அமரராகிவிட்ட எங்கள் குடும்ப விளக்கே!

மூன்ருண்டுகட்கு முன்னர் ஒரு நாள் மாலை என்னை அழைத்தீர்கள்!

''மூலிகை மணியைத் தொடங்கி 12 ஆண்டுகள் முடிந்தன. என் திட்டப்படி, 'தமிழகமெங்கும் மூலிகைகளின் புகழைப்பரப்ப வேண்டும்' என்னும் என் ஆசை பெருமளவு நிறைவேறி விட்டது. மூலிகைகளைப் பற்றி நான் எழுத வேண்டிய முதல் அத்தியாயம் இந்த 12ஆம் ஆண்டுடன் முடிந்துவிடுகிறது.

இனி அடுத்த அத்தியாயத்தினைத் தொடர வேண்டிய பொறுப்பு உன்னுடையதாகும். 13வது ஆண்டிலிருந்து, 'மூலிகை மணி'யைத் தொடர வேண்டிய பெரும் பொறுப்பினை இன்று முதல் உன்னிடம் ஒப்படைக்கின்றேன்.

'உலகெங்கும் மூலிகையின் புகழ் பரவ வேண்டும்' என்பதே நீ எழுதும் இரண்டாம் அத்தியாயத்தின் கருவாக இருக்க வேண்டும். எக்காரணம் பற்றியும் மூலிகை மணியை நிறுத்தாமல் தொடர்ந்து வெளியிடுவது உன் உயிர்க்கொள்கை யாக இருக்கட்டும்.''

—என்று, அன்று, கொள்கை முழக்கம் செய்து, ‘மூலிகை மணி’யை என்னிடம் ஒப்படைத்தீர்கள்.

அன்றிலிருந்து ஒவ்வொரு மாதமும், இதழைத் தயாரித்துத் தங்கள் ‘திருக்கரங்களில்’ அளிப்பேன்.

நீங்கள் வழக்கம்போல், ‘விநாயகர் திருவடி’யில் வைத்து வணங்கிப் பின் ஆர்வமுடன் படிப்பீர்கள்.

படிக்கும்போதே மூன்றும் பக்கம் உள்ள தலையங்கத்தினைப் படித்து உணர்ச்சி வயப்பட்டு நெகிழ்ந்து,

- குலுங்கிச் சிரிப்பீர்கள் !
- ஆனந்தக் கண்ணீர், முத்துக்களாக உதிரும் !!
- அந்தச் சிரிப்பும்,
- ஆனந்தக் கண்ணீர் முத்துக்களும்,

என் பணிக்குக் கிடைத்த ஆனிமுத்துக்கள்—அழியாத சொத்துக்கள் என எண்ணிப் பூரித்து மகிழ்வேன்.

கடந்த மூன்றுண்டுகளாக—முப்பத்தாறு மாதங்களாக நடந்துவந்த இந்த ‘மௌனக் காட்சியை’

இன்று, ‘மனக் காட்சியாக’க் காண வைத்துவிட்டான் இறைவன்.

ஆருயிர்த் தந்தையே !

இதோ ! இன்று புதிதாகத் தயாரிக்கப்பட்ட ‘மூலிகை மணியை’—இரண்டாவது அத்தியாயத்தின் தொடர்ச்சியைத், தங்கள் அடிச்சுவட்டினைப் பற்றி உருவாக்கித் தங்களின் திருக் கரங்களில் அளிக்கத் தேடுகிறேன். ஆனல்……

அந்தோ…. !
நீங்கள் ஆவலுடன் கரம் நீட்டுவதை
மனக் கண்ணல் காண முடிகிறதே தவிர…….
ஊனக் கண்களால் காண முடியவில்லையே
தந்தையே !
காணக் கொடுத்து வைக்காதக்
குருடனுக ஆகிவிட்டேனே….

மூலிகையே வடிவான தந்தையே!

ஃ ஆவலுடன் புத்தகத்தை வாங்கும் தங்கள் திருக்கரங்களெங்கே?

ஃ படித்து மகிழ்ந்து குலுங்கிச் சிரிக்கும் சிரிப்பெங்கே?

ஃ சிரித்து மகிழ்ந்து உதிர்க்கும் கண்ணீர் முத்துக்கள் எங்கே?

ஃ தேடித் தவிக்கின்றேன் தந்தையே!

ஃ காண முடியவில்லையே.... காண முடியவில்லையே....

தெய்வமாகிவிட்ட திருத் தந்தையே!

நேற்று வரை
தங்கள் 'திருக்கரங்களில்' படைத்துவந்த இதழை
இன்று முதல்
தங்களின் 'திருவடிகளில்' படைக்கின்றேன்.

'இரண்டாவது அத்தியாயத்தினை நீ எழுது' என்று கூறி ஆனந்தக் கண்ணீர்விட்டு ஆணையிட்டீர்கள்!

ஆணையை ஏற்று இன்று இதழைத் தயாரித்துத் தங்கள் 'திருவடிகளில்' படைத்துள்ளேன்.

"மூலிகை வளமே! நாட்டு வளம்!!"

என்று நீங்கள் எழுதிய முதல் அத்தியாயத்தின் முழக்கம்
தமிழகம் முழுதும் இன்று ஒலித்துக் கொண்டுள்ளது!
உங்கள் முழக்கத்திற்கு ஜெயபேரிகை கொட்டும் வகையில்

மூலிகை வளர்ப்போம்! உடல் நலம் காப்போம்!!

என்று இதோ இரண்டாம் அத்தியாயம் எழுதும் என் ஆன்மாவின் எதிரொலியை உலகெங்கும் பறைசாற்றுவேன். அதுவரை இந்தக் கரங்கள் ஓயாது எழுதும்!

'மூலிகை மருத்துவம்' கண்ட முதல்வனே!

'பொற்கொடி'—என்று அழகு தமிழ்ப் பெயரைச் சூட்டிப் பாசத்தோடு அழைப்பீர்களே! அந்தப் பொற்கொடியாகிய

'மஞ்சள் கரிசலாங்கண்ணியை' வண்ணப் புகைப்படமாக முகப்பிலே தாங்கிவரும் இந்த இதழினைத் தங்களின்

அழியாத் திருப்புகழுக்கு ஓர் அணிகலனாக,
சலியாத உழைப்புக்கு நினைவுச் சின்னமாக,

கண்ணீர் முத்துக்களுடன்,
தங்கள் திருவடிகளில் படைக்கின்றேன்.

ஆயிரக் கணக்கான வாசகர்களை அரிய சொத்தாக்கி
ஆன்ம வடிவாய் எழுந்தருளியுள்ள எந்தையே!
நீங்கள் விட்டுச் சென்ற பணிகளை வாழையடி வாழை
யெனப் பின்பற்றி வளர்க்க நல்லருள் புரியுங்கள்!

தமிழக அரசின் அமைச்சர் பெருமகனார்,
சமய உலகின் சக்கரவர்த்தியும்
தங்கள் குருநாதருமான வாரியார் சுவாமிகள்,
தங்கள் மீது அளப்பரிய அன்பு கொண்ட
பேராசிரியப் பெருந்தகைகள்,
மனம் திறந்து போற்றும்
சித்த மருத்துவர்கள்,
மற்றும்
தங்களின் மீது பெருமதிப்பு கொண்டுள்ள
வாசகப் பெருமக்கள் போன்றோர்,
தங்களின் அரிய ஒப்பற்றப் பணியைப் பாராட்டிச்
செலுத்தும் 'புகழ் மலர்களை'த்
தொகுத்துத் தயாரிக்கப்பட்டுள்ள

இந்தப் 'புகழஞ்சலி மலரை'—
தங்கள் திருப்புகழிற்கு ஓர் அணிகலனாய் சூட்டி
வீர வணக்கம் செலுத்துகின்றேன்.

வேண்டுதல்

மூலிகை மணியின்
ஆன்ம நேய ஆசிரியராக
எழுந்தருளி
வழி நடத்துங்கள் தந்தையே!
இதுவே
என் பிரார்த்தனை—எனது மட்டுமல்ல!!
தங்களைப் போற்றும் ஆயிரமாயிரம்
வாசகர்களின் வேண்டுதல்!!!

வாழ்க எந்தை புகழ்!
மூலிகை வளர்ப்போம்! உடல் நலம் காப்போம்!!

—க. வேங்கடேசன்

வாசகர்கட்கு வேண்டுகோள்

அருளளம் வாய்ந்த வாசகர்களே, வணக்கம்!

தந்தையாரின் பிரிவாற்ருமையிலிருந்து, ஒருவாறு தேறி வருகிறேன்.

ஆறுதலும் தேறுதலும் நிறைந்த உங்கள் ஒவ்வொருவருடைய கடிதங்களைப்படித்துத் துன்பச்சுமைகளிலிருந்து விடுபட்டு எழுகிறேன்.

என் முன்னர் எழுந்து நிற்கும் இமாலயப் பணிகளை—கடமைகளை எண்ணிப் பார்க்கிறேன்.

1. மூலிகை ஆராய்ச்சிப் பணி
2. மூலிகை மருத்துவ ஆலோசனைப் பணி
3. மூலிகை நூல் வெளியீடு

ஆகிய பணிகளுடன், குடும்பக் கடமைகள், ஆங்கிலத்தில் வெளியிட இருக்கும் காலாண்டு இதழ் வெளியீட்டுப் பணிகள், ஆகியவற்றுடன்,

''உலகஅரங்கில், ஒரு நோய்க்காகவேணும் ஒரு மூலிகை மருந்தைக் கண்டுபிடித்தளித்து சித்த மருத்துவத்தின் பெருமையைப் பறைசாற்ற வேண்டும்''

எனும் தணியாத வேட்கைகாக, அயராது ஆற்றிவரும் பணிகள்............ என்று எத்தனையோ பணிகளை அன்றாடம் சளைக்காமல் சந்தித்து வருகின்றேன்.

இவ்வளவு பணிகளும் தடையின்றி நிறைவேற 'தூண்டுகோலாக' என் தந்தையார் இதுநாள் வரை விளங்கினார். ஆனால் காலதேவன் சதியால் இன்று தூண்டுகோலிழந்த சுடர் விளக்காக—நான் தவிக்கின்றேன்.

இழந்த ஒப்பற்ற அந்தத் தூண்டுகோலினை, வாசகர்களாகிய உங்கள்,

ஆறுதல் கடிதங்கள்
ஆக்கம் தரும் மடல்கள்

மூலம் மீண்டும் பெற முடியும் என்ற 'நம்பிக்கையில்' மீண்டும் 'மூலிகை மணி' எனும் சுடர் விளக்கினை ஏந்தி வருகின்றேன். அதனை 'அணையா தீபமாக்கி' சுடர்விட்டு உலகெங்கும் நல்வாழ்வு ஒளி பரப்பிட, உங்கள் நல்லாதரவு எனும் 'தூண்டுகோலினை' எதிர் நோக்கியுள்ளேன்.

∴ பக்கங்கள் தோறும் நல்வாழ்வுக் குறிப்புகள்

∴ மூலிகை மருத்துவ ஆய்வுக் குறிப்புகள்

∴ 'மூலிகைப் பட ஆல்பம்' தயாரிக்கும் வகையில், மாதந்தோறும் ஒரு மூலிகையின் வண்ணப் புகைப்படத்தினை ஆர்ட் பேப்பரில் அச்சிட்டு வழங்கல்

∴ சித்த மருத்துவ ஆய்வுரைகள்

∴ சித்தர் நெறி பற்றிய அகழ்வாராய்ச்சி—அனுபவ குறிப்புகள்

∴ அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கக்கூடிய நோய்க்குரிய மருந்துக் குறிப்புகள்.

∴ நல்வாழ்வுச் செய்திகள் போன்ற

அரிய பல்வேறு வகையான வடிவில் 'மூலிகை மருத்துவச் செய்திகள்' இனிவரும் இதழ்களில் வெளிவரும்.

அனைத்திற்கும் சிகரமாக ஆராய்ச்சி அனுபவ ரீதியில்
மாதந்தோறும் ஒரு நோய்க்குரிய பல்வேறு
மூலிகை மருந்து முறைகளைத் தொகுத்து—

விளக்கமாக

எளிய நடையில்
அழகு தமிழில்
பழகு முறையில்

பல்லோரும் படித்துப் பயன்பெறும் வகையில், 'இலவச இணைப்பு நூலாகத்' தரப்படும்.

அடுத்த இதழுடன்

மூல நோய்க்கு மூலிகை மருந்து

எனும் 'இலவச இணைப்பு' அனுப்பப்பெறும்.

கார்த்திகை இதழுடன்

'எளிய சத்துணவுத் திட்டம்'

எனும் நூல் அனுப்பப்படும்.

அத்துணையும் நல்வாழ்வு முத்துக்கள்!
உங்களுக்கு நிலையான சொத்துக்கள்!!

புதிய பொலிவுடன் வர இருக்கும் 'மூலிகை மணி' யின் விலை வருகின்ற 16-வது ஆண்டு இதழிலிருந்து ரூ. 1-00 ஆக உயருகின்கிறது. தரமும், பக்கமும் உயர்வதால் — விலை ஏற்றம் தவிர்க்க இயலாததாகும். ஆண்டுச் சந்தா 16-வது ஆண்டு துவக்கம் முதல் (கார்த்திகை இதழ் முதல்) ரூ. 12-00 ஆகும்.

சனவரி 31-வரை சந்தாவில் சலுகை

ஜனவரி 31-க்குள் சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு மட்டும் சலுகை சந்தாவாக ரூ. 9-00 பெறப்படும். இந்தச் சலுகை, சனவரி 31-க்குள் சந்தா செலுத்தும் அன்பர்கட்கு மட்டுமே பொருந்தும்.

மூவாண்டுச் சந்தா ரூ. 27-00 செலுத்தினால் 'நோயும்-மருந்தும்' எனும் கண்ணப்பரின் அரிய நூல், ரூ. 8-00 விலையுள்ளது அன்பளிப்பாகத் தரப்படும்.

ரூ. 251 ஆயுள் சந்தாவாக செலுத்தினால், ரூ. 180 மதிப்புள்ள எமது வெளியீடுகள் அனைத்தும் இலவசமாக அனுப்பப்படும்.

ஆயுள் சந்தாவை தவணை முறையிலும் செலுத்தலாம். மாதம் ரூ. 50 விதம் 5 தவணை முறைகளில் செலுத்தலாம்.

நினைவிருக்கட்டும்! பிப்ரவரி 1 முதல் சந்தா சேருவோர் கீழ்க்கண்டவாறு சந்தா செலுத்த வேண்டும்.

சந்தா புதிய விகிதம்

தனி இதழ்	ரூ. 1-00
ஓராண்டுச் சந்தா	ரூ. 12-00
மூவாண்டுச் சந்தா	ரூ. 36-00
ஆயுள் சந்தா	ரூ. 251-00

ஃ ஏற்கனவே சந்தா செலுத்திய அன்பர்களும் மேலும் இரண்டு மூன்று ஆண்டுகட்கு சந்தா செலுத்தலாம். அல்லது உங்கள் நண்பர்கள் உறவினர்க்கு

ஃ திருமண அன்பளிப்பாக,

ஃ பிறந்த நாள் பரிசாக,

மூலிகை மணி சந்தா செலுத்தி உதவுங்கள்.

மூலிகை வளர்ப்போம்!

உடல்நலம் காப்போம்!!

அன்புடன்,

க. வே.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

மூலிகை மணி அலுவலகம்

22, திருமலைப்பிள்ளை வீதி எண்-2,

தி. நகர், சென்னை-600 017.

அஞ்சல் பெட்டி எண் - 1406

பணிவார்ந்த வணக்கமும், நன்றியும்

அமரர் கண்ணப்பரின் மறைவு குறித்து வருந்தி மடல் எழுதி ஆறுதல் அளித்தும், ஆக்கம் பெறும் வகையில், ஆதரவு தெரிவித்தும் கடிதங்கள், தந்திகள் அனுப்பிய வாசகர்கள்,

நேரில் வந்து அஞ்சலி செலுத்திய பெருமக்கள், குறிப்பாக வருத்தம் தெரிவித்து தந்தி அனுப்பிய தமிழக அரசின் அறநிலைய—செய்தி மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கட்கும், நேரில் வந்து அஞ்சலியும், ஆறுதலும் அளித்த சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் டாக்டர் ந. சஞ்சீவி, பேராசிரியை திருமதி. கிருஷ்ண சஞ்சீவி, டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், டாக்டர் மாயாண்டி, டாக்டர் இரா. மாணிக்கவாசகம், டாக்டர் ம. செல்வராசன், மயானம் வரை வந்திருந்து ஆறுதல் அளித்த டாக்டர் பொற்கோ, சித்தர் செய்திக்களஞ்சியம் திரு. செல்வராமன் ஆகியோர்க்கும்,

புகழஞ்சலி செலுத்தும் விழாவில் பங்கேற்று, அரசின் சார்பில் கண்ணப்பருக்குச் சிறப்பஞ்சலி செலுத்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர். சௌந்திரராசன் அவர்கட்கும், ஆறுதல் மடல் அளித்த முன்னாள் அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கட்கும், அஞ்சலி விழா சிறப்புற நடத்த உதவிய குருநாதர் வாரியார் சுவாமிகள், அன்பர் மு. பெருமாள் முதலியார், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், ஆகியோர்க்கும்,

ஆறுதல் கடிதங்கள் அனுப்பிய தாவர இயல் பேராசிரியர் டாக்டர் மகாதேவன், டாக்டர் திருமதி. இலலிதா காமேசுவரன், பச்சையப்பர் கல்லூரி முதல்வர் திரு. சுப. சண்முகநாதன், ஆகிய பேராசிரியப் பெருமக்களுக்கும்,

நேரில்வந்து அஞ்சலி செலுத்திய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை ஆராய்ச்சி மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள், மறைவுச் செய்தி வெளியிட்டுதவிய, செய்தித்தாள்கள், சென்னை வானொலி, சென்னைத் தொலைக்காட்சி ஆகியோர்க்கும்,

அஞ்சலி விழாவிற்கு வந்துதவிய சிறப்புச் செய்தியாளர் திரு. பால்யூ, அவர்கட்கும், புகைப்படம் எடுத்துதவிய 'யோகா' அவர்கட்கும், ஓவியம் வரைந்துதவிய லட்சுமி ஆர்ட்ஸ் ஆனந்தன் (ஈஸ்வரி) அவர்கட்கும், எங்களுக்கு ஆறுதல் கூறுவது மட்டுமின்றி, எங்கள் குடும்ப வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு வேண்டிய உதவிகளை வற்றாது அளித்துவரும், 'சேவைக்கோர் அரசி' திருமதி. ரெஜினா வின்சென்ட் அவர்கட்கும்,

மற்றும் அன்றாடம் ஆறுதல் கடிதம் எழுதி, அன்பு செலுத்தி ஆதரவு நல்கி வரும், எங்கள் மதிப்பிற்கும், போற்றுதலுக்குமுரிய

வாசகர்கள்—ஆதரவாளர்கள்—ஆகிய அனைவர்க்கும்

பணிவார்ந்த வணக்கத்தினை நன்றியுடன் தெரிவித்து—அமரர் கண்ணப்பர் காட்டிய வழியில் பணிபுரிய முனைகிறோம்.

உங்கள் ஆதரவு ஒன்றே எங்கள் பற்றுக்கோடு—அளித்துதவுங்கள்.

இப்படிக்கு

மூலிகை மணி குடும்பத்தினர்.



226-வது மூலிகை !

"தாழை"

நினைவுக் குறிப்பு:

'நம் நாட்டு மூலிகைகள்' எனும் இந்தத் தலைப்பினை அமரர் கண்ணப்பர் அவர்கள் தேர்ந்தெடுத்து மூலிகைகள் பற்றிய தம் ஆராய்ச்சி—அனுபவக் கட்டுரைகளை இதே தலைப்பில் எழுத முனைந்தபோது, எனக்கு வயது 7. எனக்கு அறிவு விளக்கம் பெறாத அந்த வயதில் முதன் முதலாக, 'மாத ஜோதிடத்தில்' எழுதத் தொடங்கினார்; பின் 1962-இல் தினமணிச் சுடரில் வாரந்தோறும் பரபரப்புடன் எழுதலானார். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் இவர் கட்டுரைக்காக பல ஆயிரம் பிரதிகள் கூடுதலாக விற்பனையாயிற்று என்பதை உணர்ந்த அப்போதைய தினமணி ஜெனரல் மானேஜர் திரு. S. V. சுவாமி அவர்கள், திரு. K. S. V. ரமணி மூலம் பாராட்டி, தொடர்ந்து எழுதுமாறு ஊக்குவித்தார்.

1972 வரை தொடர்ந்து தினமணியில் எழுதி, தமிழகம் முழுவதும், மூலிகைகளை உலாவரச் செய்தார்

1964-இல், ஒரு மாத இதழைத் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்து, அன்பர் மு. பெருமாள் முதலியார் மூலம் குருநாதர் வாரியார் சுவாமிகள் திருக்கரங்கள் வாயிலாக

'மூலிகை மணி'யை வெளியிட்டருளினார்கள். அப்போது அவருக்குப் பக்கபலமாக இருந்தவை,

∴ இடைவிடாது வழிபடும் முருகனருள்

∴ மூலிகைகள் பற்றிய ஆராய்ச்சி அனுபவங்கள்

∴ பாமரர் மனதிலும் பதியுமாறு எழுதும் திறன்

இந்தப் பின்னணிகளைப் பெரும் பலமாகக்கொண்டு அவர்கள் 1964-இல் உருவாக்கிய 'மூலிகைமணி', தஞ்சை மன்னன் கட்டிய 'பெரிய கோயிலை'ப்போல், வளர்ந்துள்ளது. 'மூலிகை மணி' எனும் கோயிலைக் கட்டி, மூலிகைகளைப் பிரதிஷ்டை செய்து, தான்மட்டும் வழிபட்டால் போதாது தமிழக மக்களும், பயனைப் பெற வேண்டும் என்று அவர்களையும் மூலிகை வழிபாட்டில் பங்கேற்கச் செய்த செயலைப் பாராட்ட அகராதியிலும் சொற்களில்லை எனலாம்.

'மூலிகை மணி' எனும் கோயிலில், 'நம் நாட்டு மூலிகைகள்' கட்டுரைத் தொடர் 'தங்கக் கோபுரக் கலசமாக'த் திகழ்வதாகும். படிப்போர் நெஞ்சில் பச்சிலை போல், பசுமையாகப் பதிந்த இக்கட்டுரைத் தொடரை, கடந்த 25 ஆண்டுகளாக ஓயாது எழுதிவந்த அமரர் கண்ணப்பரின் எழுதுகோல், இந்த இதழ் முதல் அவரின் உதிரத்தில் உதித்த சிறியேனின் கரங்கள் மூலம் இன்று மீண்டும் ஓயாது எழுதத் தொடங்குகின்றது.

இத்தலைப்பில் கட்டுரைகள் எழுதும் கரம்தான் சிறியேனுடையது. எழுத்துக்கள் அவருடையவைதான், என்பதை படிக்கும்போது உணரலாம்; இந்தப் பணி, வாழையடி வாழையென தலைமுறைதோறும் தொடர வேண்டும் என்பதை ஆன்மநேய ஆசிரியராய் எழுந்தருளியுள்ள தந்தையாரின் அருளை வேண்டி, புனித நினைவுகளில் மூழ்கி இத் தொடரை—மீண்டும் தொடருகின்றேன்.

—க. வே.

"தாழை" (226-வது மூலிகை)

அப்போது மூன்றும் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாக நினைவு; குடுமி வைத்த வாத்தியார் ஒருவர். மாலை 4 மணியிலிருந்து 5மணி வரை எல்லோரையும் மனப்பாடமாக நீதி நூற்பாடல்களை ஒப்பிக்கச் சொல்வார். அதில் ஒருபாடல் எனக்கு மிகவும் பிடித்தது. ஔவையார் பாடியது! காரணம் வேறு ஒன்றுமில்லை. மனப்பாடம் செய்வதற்கு மிகவும் எளிதாக இருந்தது. அந்தப்பாடல்தான் இன்றைக்கு 'நம் நாட்டு மூலிகைகள்' தொடரின் 226-வது மூலிகைக்கு அடியெடுத்து தருகின்றது. ஞாபகம் வரவில்லையா......?

"மடல் பெரிது தாழை......"

ஔவையாரால், 'மூதுரையாக'ப் பாடிய பாடலில் வரும் 'தாழை' தமிழ்நாட்டு மண்ணில் தோன்றி

புராணங்களில் நடித்து
புலவர்நாவில் பொருந்தி,
மங்கையர் கூந்தலில் குடிபுகுந்து

மணம் பரப்பும் பேறு பெற்றுள்ளது. 'தாழம் பூ'—என்று பொதுவாக மக்கள் அழைப்பர். 'தாழை' என்று இலக்கியப் புலவர் குறிப்பிடுவர்.

விஞ்ஞானயுகத்தில் வாழும் நமக்கு நம் வீட்டில் உள்ள மரம், செடி, கொடிகளே தெரிவதில்லை. இன்னும் சொல்லப்போனால் சாப்பிடும்

இன்றைய தமிழர் நாட்டுப்புறங்களில் காணும் பல மூலிகைகட்கும் கொடிகட்கும் பெயரும் அறியமாட்டார். ஆனால் பழங் காலப் புலவர்களை இந்த அறிவில் மிஞ்சுவோர் எவரும் இல்லை.

பேராசிரியர் டாக்டர் மு.வ.வின்
பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (1964) பக்கம்: 620
—தகவல் : டாக்டர் ந. சஞ்சீவி

கீரையைப் பற்றிக்கூட நமக்குத் தெரியாது. ஆனால், பண்டைக் காலத் தமிழர்கள், மூலிகை அறிவில் இணையற்றவர்கள் என்பதை, டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் கூறியுள்ள மேற்கண்ட தகவல் உறுதிப்படுத்து கிறதல்லவா? பேராசிரியர் ஒருவர் தன் மகனுக்கு 'ஆஸ்த்துமா'விற்கு மருந்துகேட்டு ஒருநாள் வந்தார். முதலில் அருகம்புல் முறிவு மருந்து சாப்பிடுமாறு விவரம் கூறினேன். மறுநாள் காலையில் வீட்டிற்கு வந்து அவர், என்னைக்கேட்ட கேள்வி அயரவைத்தது.

"அருகம்புல் எப்படி இருக்கும். சாம்பிள் காட்டுகிறீர்களா?" என்றார்.

காலில் மிதிபடும் அருகம்புல்லைக்கூட நாம் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை.

பச்சிலைகள் மூலிகைகள் முதலியன பிணிதீர்க்கும் பெரும் சாதனங்களாகும். நம்மைச்சுற்றிலும் அரிய மூலிகைகள் இருக்க நாம் கண்ணிருந்தும் காணுதவர்களாக இருக்கிறோம். **டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்.**

நம்மைச் சுற்றியுள்ள மூலிகைகட்கும் நம் அறிவிற்கும் உள்ள உறவு டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறிய மேற்குறித்துள்ளதுபோல் குருட்டுத்தனமாகத்தான் உள்ளது.

இந்த வகையில், நம் முன்னோர்கள், நம்மைவிட மிகுந்த அறிவாளிகள் எனலாம். அதிலும் பண்டைக்கால புலவர்கள் செடி, கொடிகளைப் பற்றிய அறிவில் நிகரற்றவர்கள். சங்க காலப் பாடல்களைப் பொருள் பிரித்துப் பார்த்தால், நூற்றுக்கணக்கான செடி, கொடிகளின் பெயர்களைக் காணலாம். வெறும்பெயர்களை மட்டுமல்ல; செடியின் அமைப்பு, வண்ணம், அதன் குணம் இவற்றையெல்லாம் பொருத்தமாக விளக்கியிருப்பர். அந்த அளவிற்கு 'மூலிகை அறிவு' புலவர்களிடையே பரவி இருந்தது எண்ணி வியக்கத்தக்கது.

புலவர் நாவில் பொருந்திய பெருமை, 'தாழை'க்குண்டு. ஔவையார் இயற்றிய 'மூதுரை'யில் இடம்பெற்றுள்ள 'தாழை' புராணங்களிலும் இடம்பெற்றுள்ளது. சிவனின் அடி முடி தேடிய மகாவிஷ்ணுவிடம் பிரம்மா, தான் சிவனின் திருமுடியைக் காணுமலே கண்டதாகக் கூறி, அதற்குச் சாட்சியாக, 'தாழை' மடலை கொண்டுவந்தாராம். இதனைப் பொய் என்று கூறி, சிவபெருமான், பொய்சாட்சி சொன்னதற்காக, 'தாழம்பூ'வை "இனி என் திருமுடியில் உனக்கு இடமில்லை" என்று வெளியேற்றி தண்டித்து விட்டாராம்.

பிறருக்கு உதவப்போய் தண்டனை பெறுவது நல்லமனம் உடையவர் பண்பல்லவா! அதுபோல், பிரம்மனுக்கு உதவப்போய், தண்டனை பெற்ற 'தாழை'யின் நிலை பரிதாபத்திற்குரியதுதான்.

புராணத்தில் சிவனின் பழிப்புக்கு ஆளானுலும், 'தாழை' பராசக்தியின் பாராட்டுதலுக்குரியதாகிறது. ஆம்! கேதாரி கௌரி விரதம், மகாலட்சுமி விரதம், போன்ற நாட்களில் 'தாழை' மடலுக்கு ஏகக் கிராக்கி! தேடித் தேடி வாங்கிப் போவார்கள். தீபாவளி அமாவாசை அன்று வரும் 'நோன்பு' பண்டிகையன்று அனைவரின் கரங்களிலும் 'தாழை' மடல் ஒன்று நோன்பு கயிற்றுடன் கட்டப்பெற்றிருக்கும்.

பொது விவரம்

வளரும் இடம்

கடற்கரையோரங்கள், ஆற்றுப்படுகைகள், நீர்ப்பாங்கான சோலை களிலும் 'வளரக்கூடிய 'தாழை' குற்றுமரமாக வளரக்கூடியது. அடி மரமும் சில கிளைகளும் காணும், இவற்றின் நுனியிலே குறுகி நீண்ட விறைப்பான இலைகள் மிக நெருக்கமாக பெண்கள் அணியும் குச்சம் போல நெருக்கமாக அடுக்கப் பெற்றிருக்கும். தரையிலிருந்து சற்று உயரத்தில் தண்டிலிருந்து தடிப்பான கோல் பொன்ற விழுதுகள் எழுந்து நிலத்தில் சரிந்து விழுந்திருக்கும். அடிமரம் பட்டுப்போய்விட மரமும் கிளைகளெலாம் இந்த ஊன்று வேர்களினால் தாங்கும். உலகெங் கும் உள்ள 'தாழை' இனம் 180 வகையாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. என்றாலும், நம் தமிழ்நாட்டில் வளரும் 'தாழை' மட்டும் மருத்துவத்திற் குப் பெரிதும் பயன்படுகின்றது. ஓலை, பாய், பெட்டி, போன்ற கைவினைப் பொருள்களை இதிலிருந்து செய்வர். தாழம்பூக் கொத்தி லுள்ள மடல்கள் மிகவும் அழகும், மணமும் பொருந்தியவை. பெண்கள் இந்தத் தாழை மடல்களை அழகுக்காகவும், தலையில் சூட்டி மகிழ்வர். இதன் மணத்திற்காகவே, நல்ல பாம்புகள் 'தாழை மடல்களில்' குடி யேறுமாம். அதனால்தான் தாழைப் புதர்களில், மடல் எடுப்போர் மிக வும் கவனமுடன் அவற்றைப் பிடுங்குவர். தாழை மடல்களில் குட்டிப் பாம்புகள் இருக்கக்கூடும் என்று அஞ்சி, மடலைத் தலையில் சூட்டிக் கொள்வதன்முன், கவனமுடன் அதனை ஆராய்வர் நம் தமிழ்நாட்டுப் பெண்கள்.

தாழையின் மருத்துவக் குணங்கள்

தமிழ்நாட்டில் செந்தாழை, வெண்தாழை என இருவகை தாழை யுண்டு. செந்தாழை காண்பதரிது. வெண்தாழை மட்டுமே எங்கும் காணக்கூடியது. இதன் பூ, சோறு, விழுது, ஆகியவை மருத்துவக் குணமுடையவை.

பொதுக் குணம்

உடலுக்குக் குளிர்ச்சியையும், உடலின் கழிவுப்பொருள்களை வெளி யேற்றும் திறனும், ஜன்னி, கால் கை வலிப்பு போன்ற இசிவுத் தொடர் புடைய நோய்களைத் தணிக்கவும், வராமல் காக்கவும் உதவுகின்றது.

மருத்துவக் குணம்

பெண்களின் மாதாந்திர உதிரச் சிக்கலை தவறாது உடைக்கும். அதனால் இதனை ஒரு கருச்சிதைக்கும் (Abortive) சாதனமாகக் கருதி மேலும் ஆராயலாம். மேலும் ஆண்மை உணர்வைப் பெருக்கவும், கை கால்களில் வரும் வீக்கங்களை கரைக்கவும் பயனாகிறது.

செய்முறை விளக்கம்

தாழை மடலில் உள்ள சோற்றினை நீர்விட்டு ஏழுமுறை கழுவி, பின் துண்டுகளாக்கி, எள் எண்ணெயைவிட்டு பதமுடன் காய்ச்சி அதில் காலை 1 டீஸ்பூன் வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டுவர, மாத விலக்கு சரிவர ஆகும்.

தலைவலி, காது வலிகட்கு - தாழம்பூ

இதன் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கலாம். இந்த எண்ணெய் மணமூட்டியாக வேலை செய்வதுடன், தலைவலி, ஆகியன வராமல் தடுக்கிறது. தலைவலி, காதுவலி வந்தால், இதன் எண்ணெயினை இரண்டு துளி காதில் விட்டுவர, குணமாகும்.

உப்புக் கட்ட

குன்மம் போன்ற வயிற்றுப் புண்களை குணமாக்கும் ஆற்றல் வாய்ந்த ஐந்து உப்புக்களை சித்த மருத்துவர்கள் 'பஞ்ச லவணம்' என்பர். சோற்றுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, வெங்காரம், கல்லுப்பு— இவையே 'பஞ்சலவணம்' ஆகும். இவற்றை ஒருங்கே கட்டுவிக்கும் சக்தி, தாழை பூவிற்குமட்டுமே உண்டு. 'பஞ்சலவணக் கட்டு' எனப் படும் உப்புக் கட்டினை, தாழம் பூச்சாற்றில் கட்டுவிப்பர்.

இவை தவிர, தாழம் பூவின் சாற்றிலிருந்து, அத்தர், தீநீர், ஊறல் கஷாயம் ஆகியன, தயாரிப்பர். இந்த செய்முறைகள் இன்று வழக்கற்றுப் போயின.

தாழம்பூ அத்தர் தலைவலிக்கும், உடல் மணக்கவும் உதவும்.

தாழம் பூ ஊறல் கஷாயம், வியர்வையை வெளியேற்ற உதவு கிறது. இதன் ஊறல் கஷாயம் 1 அவுன்ஸ் குடித்தால்கூட போதை வரக்கூடும்.

மலட்டுத் தன்மை நீங்க - தாழம் விழுது

இதன் விழுதைப் பாலில் அரைத்து சுண்டைக்காய் அளவு உட் கொண்டுவர, மலட்டுத் தன்மை நீங்கி மகப்பேறு உண்டாகும் என்று கூறப்படுகிறது. இதனைத் தனியே பயன்படுத்துவதைவிட, இலந்தை இலை, மாவிலங்கப்பட்டை, மருத மரப்பட்டையுடன் உண்டுவர, மலட்டுத் தன்மை நீங்கக்கூடும். காரணம், இவை நான்குமே, மலட்டைப் போக்கும் ஒரே குணமுடையவை. இதனை அறிவியல் சோதனைக்குட்படுத்திப் பின் பயன்படுத்தலாம்.

வெப்ப நோய்க்கு - தாழை வேர்

தாழையின் வேரினை இடித்துச் சாறு எடுத்து அதில் 30 மில்லி அளவு எடுத்துத் தேன் 1 ஸ்பூன் சேர்த்து பருகிவர, வெப்ப நோய்

களும், அதன் தொடர்பாக வரும், கட்டிகள், புண்கள் ஆகியன விலகும். கணச் சூடு, அனல் கட்டிகள் ஆகியவையும் போகும்.

அம்மை நோய்க் காலங்களில்

ஊரில் அம்மை நோய் பரவி வரும்போது, அது தாக்காமல் இருக்க, தாழம் பூவிணை மணப்பாகு (சர்பத்) செய்து சாப்பிட்டுவர, அம்மை வராமல் தடுக்கலாம். உடம்பின் மிகு வெப்பத்தினைத் தணித்து குளிர் விக்கும். எனவேதான், தாழம் பூ பாயில் படுப்பவர்கட்கு, தலைச் சுற்றல், வாந்தி ஆகியன வராது. காய்ச்சல் தணியும்.

மருத்துவக் குணத்தைப் பொறுத்தவரை, தாழம் பூவை, குங்குமப்பூ, உத்தாமணி போன்றவற்றுடன் ஒப்பிடலாம்.

உப்புக் கட்டுவதற்குதவுவதால் ரசவாத குணமும் உடைய தாகிறது.

எனவே, வாத வைத்தியத்திற்குதவும் மூலிகை இனத்தில், 'தாழை' ஓர் இடம் பெறுவ்துடன் அம்மன் வழிபாட்டிற்குரிய அருச்சனை மடல்களில் 'தாழை மடல்' முதலிடம் பெறுகிறது என்பதையும் உணரலாம்.

'மடிச்சோற்ருள் மங்கையர்க்கு மாதாந்தப் பூப்பாம்
வெடிச்சபூநற் பசியை விளைவிக்குந்–தடித்த முலை
சுக்கிலத்தை நெய்யைத் துலவிக்குஞ் சோபையெனும்
அக்குலத்தை நீக்கும் அறி'

என்று கும்பமுனி, 'தாழை'யின் மருத்துவக் குணத்தைக் குறிக்கின்ருர்.

1. மாத விலக்குக் குறைபாடு
2. ஆண்மைக் குறைவு
3. பசித் தொல்லை
4. கைகால் வீக்கம்
5. தலை வலி, காது வலி
6. மலட்டுத் தன்மை நீங்குவதற்கு
7. வெப்ப நோய்கள் விலக
8. அம்மை வராது காக்க

உதவும் அஷ்ட மா மருத்துவக்குணங்களுடன், பஞ்சலவணங்களைக் கட்டும் வாத குணமும் உடைய 'தாழை' அம்பிகையின் அழகு சாதன மாகவும் விளங்குவதால், ஔவை குறிப்பிட்டது போல்,

'மடல் பெரிது' மட்டுமல்ல—'தாழை'
'குணமும் பயனும் பெரிது' என்று கூறலாமல்லவா! ∴ ∴ ∴

மூலிகை மணி

வாசக அன்பர்கட்கு மட்டும்

கீழ்க்கண்ட 'மூலிகை மருந்துகளை' வாசக அன்பர்கள் வேண்டுதலுக்கிணங்கி தயாரித்துள்ளோம். வேண்டுவோர் பணம் MO மூலம் அல்லது நேரில் செலுத்திப் பெறலாம். பொது விற்பனைக்குரியதல்ல. கீழ்க்கண்ட முகவரியில் மட்டுமே கிடைக்கும்.

அமிர்த சஞ்சீவி லேகியம்: 20 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் 'டானிக்' போன்று வலிமை தரக் கூடியது. புத்துணர்ச்சியும், புதிய வளர்ச்சியையும் தரக் கூடியது. 40 நாட்களுக்குரிய லேகியம் விலை ரூ. 30-00 அஞ்சல் செலவு ரூ. 4-00.

வல்லாரைத் திப்பிலி: பள்ளி செல்லும் மாணவர்க்கும் அலுவல் செய்யும் பெருமக்களுக்கும் நினைவாற்றல் தரக் கூடியது. 40 நாட்களுக்குரியது விலை ரூ. 10-00 அஞ்சல் செலவு ரூ. 2-00.

மூலிகை ஸ்நானப் பொடி: சர்மத்தின் வழவழப்புக்கும் தலையில் வரும் பொடுகு, பேன், சிக்கு ஆகியன ஒழியவும் உதவும், 'இயற்கை மூலிகை ஷாம்பு'—விலை 1 பாக்கெட் ரூ. 5-00 அஞ்சல் செலவு ரூ. 2-00.

வாய்வுச் சூரணம்: உணவு செரியாமை, பசியின்மை வயிற்று உப்புசம், மலச்சிக்கல் ஆகியன உடையோர் இந்தச் சூரணத்தை தினம் 2 வேளை உண்டுவர அவை தீரும். 1 பாக்கெட் விலை ரூ. 15-00 அஞ்சல் செலவு 2.

அமுக்கினுங்கிழங்குப் பொடி: இரத்தசோகை, இரும்புச் சத்துக் குறைவு, சுறுசுறுப்பின்மை போன்ற நோயினை உடையவர்கட்கும், இளம் தம்பதியர்க்கும் ஏற்றது. காலை இரவு, இருவேளை உண்டுவர இல்லற வாழ்வு இனிக்க உதவும் மூலிகை டானிக் பொடி. 40 நாட்களுக்குரிய பொடி 1 பாக்கெட்விலை ரூ. 15-00 அஞ்சல் செலவு ரூ. 2

சுண்டை வற்றல் சூரணம்: நீரிழிவு நோயுடையவர்க்கும், வயிற்றில் பூச்சித்தொல்லை உடையவர்க்கும் நன்மை தரும். 1 பாக்கெட் விலை ரூ. 15 அஞ்சல் செலவு ரூ. 2-00.

ஓலைச்சுவடியிலிருந்து....

க. வே.

மகப்பேறு அடைந்த மகளிர்க்கு

மகப்பேறுற்ற மகளிர் இயற்கையாகவே நலிந்திருப்பர். இரத்தப் போக்கு காரணமாக சோகையாகி இருக்கும் சமயம் தொற்றுக் கிருமிகள் பாதிக்கக் கூடும். இதிலிருந்து உடம்பைப் பாதுகாத்துக்கொள்ள, கீழ்க்கண்ட மூலிகைக் கஷாயத்தைக்கொண்டு புற உறுப்புகளை கழுவிக் கொண்டுவர, தொற்றுக் கிருமிகளால் புற உறுப்புகள் பாதிக்கப் படாமல், வேறு தொல்லைகள் வராமல் தடுக்கலாம். ரணங்கள், புண்கள், வெள்ளை நோய் உள்ளவர்களும் இதனைக் கொண்டு கழுவி வர அவை ஆறும்.

செய்முறை :

ஆலமரப்பட்டை
மாமரப்பட்டை
பூவரசமரப்பட்டை
அரசமரப்பட்டை
வேப்பம்பட்டை

இவை வகைக்கு 2 பிடி எடுத்து இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு 2 லிட்டர் தண்ணீரில் காய்ச்சிக்கொதி வரும்போது படிகாரம் 50 கிராம், கடுக்காய் 100 கிராம் எடுத்து தூள் செய்து அதில் கலந்து வடிகட்டி வைத்துக்கொண்டு, சிறுநீர் கழித்தபின், இந்த நீரில் 2 அவுன்ஸ் எடுத்து அதில் வெந்நீர் கலந்து புற உறுப்புகளைக் கழுவி வரவும். தினம் புதிதாகச் செய்து ஒரு நாளைக்கு 4 முதல் 5 முறைவரை 1 வாரம் செய்துவர, சிறுநீர் தொற்றுநோய் (Urinary infection) வராமல் காக்கலாம்.

வெள்ளை நீர் சுருக்குக்கு

முறையற்ற பாலுறவு, வெட்டைச்சூடு காரணமாக வரும், வெள்ளை நீர்சுருக்குக்கும், நீர் எரிவுக்கும், படிகாரம் 50 கிராம் வாங்கிப் பொரித்து கல்வத்திலிட்டு அரைத்து பொடி செய்து வைத்துக்கொண்டு, இதில் 5 சிட்டிகை எடுத்து அத்துடன் திரிபலா சூரணம் $\frac{1}{2}$ ஸ்பூன் எடுத்து கலந்து $\frac{1}{4}$ குவளை மோரில் கலந்து காலை, மாலை இரு வேளை வீதம் 7 நாட்கள் சாப்பிட்டு, இச்சாபத்தியம் கடைப்பிடித்து வர, அவை தீரும்.

முறிப்பு மருந்து

பல்வேறு வகையான மருந்துகளைச் சாப்பிடுவதால், உடலில் வேறு சில எதிர் விளைவுகள் ஏற்படக்கூடும். மருந்துகளின் செய்முறைத் தவறு, மருந்துகளின் பின் விளைவு, காரணமாக வரக்கூடிய வேறு சில உடல் கோளாறுகளைக் கீழ்க்கண்ட மூலிகை முறையின்மூலம் முறிக்கலாம். உடல் வேர்க்கும், சோர்வு பெருகும்; கடுகடுத்திடும், மயக்கம் தோன்றும். இவைகட்கு,

கடுக்காய்
அதிமதுரம்
சுக்கு
மிளகு
அறுகம்வேர்
சிறுகீரைவேர்
பெருங்காயம்
எலுமிச்சை

வகைக்கு 10 கிராம் எடுத்து சிதைத்து 1 லிட்டர் நீரில் போட்டுக் காய்ச்சி $\frac{1}{2}$ லிட்டராகச் சுருக்கி, வடிகட்டி காலை மாலை 2 அவுன்ஸ் வீதம் 1 ஸ்பூன் தேன் கலந்து மூன்று நாட்கள் பருகிவர, மருந்துகளின் வேகம் தணிந்து முறியும்.

பித்தம், அஜீரணம் ஆகியவற்றுக்கு

ஓட்டல் சாப்பாடு, மிதமிஞ்சிய மாமிசவகை உணவு, காபி, டீ சாப்பிடுபவர்கள், அஜீரணம், பித்தம் காரணமாக, நா சுவையற்று, பசி மந்தித்து தொல்லை அடைவர். இதற்கு 'இஞ்சி லேகியம்' மிகச் சிறந்த உணவு மருத்துவமாகும்.

செய்முறை: இஞ்சியை ஓரளவாக எடுத்து சிறு துண்டுகளாக்கி பசு நெய் சிறிதுவிட்டு இளம் வறுப்பாக வறுத்து அதில் கால் பங்கு அதி மதுரம், மிளகு, இலவங்கம், சீரகம், ஏலரிசி, கோரைக் கிழங்கு, உப்பு, தனியா இவை வகைக்கு 10கிராம் எடுத்து பொடி செய்து வறுத்து வைத்துள்ள இஞ்சியுடன் ஒன்ருகக் கலந்து அதே அளவு தேன் விட்டுக் கலக்கவும். தேனளவில் $\frac{1}{4}$ பங்கு நெய்விட்டு கலக்கி ஒரு கண்ணாடிப் புட்டியில் பத்திரப்படுத்திக்கொண்டு, தினம் காலை, இரவு இருவேளை நெல்லி அளவு வாயிலிட்டு சுவைத்துண்ணவும். வயிற்றுக்கோளாறுகள், பித்த மயக்கம், அரோசிகம் எனும் நாசுவை இல்லாமை ஆகியன தீரும். எளிய முறை நிறைந்த பலன். (தொடரும்)

அனுபவம் உணர்த்தும் உண்மை

உயர்திரு ஆசிரியர் வெங்கடேசன் அவர்களுக்கு, கோவிந்தராஜுலு எழுதும் கடிதம்.

என் மனைவிக்கு, கண்ணில் வீக்கம் ஏற்பட்டு, வலியும் இருக்கிறது, எரிச்சல் இருக்கிறது. திருமணத்துக்கு இதே விதமான தொந்தரவுகளுக்காக, கண் டாக்டரை அணுகி விசாரித்தறிந்து தக்க கண்ணாடி அணிய நேர்ந்தது. ஆனால் உங்கள் தந்தையார் அவர்களின் ஈடிணையற்ற தயாரிப்பான,

"நேத்திரப் பூண்டுத் தைலம்"

உபயோகித்து கண்ணாடி போட்டுக்கொள்ளாமலேயே குணமடைந்துவிட்டது.

தங்கள் ஆலோசனை நாடும்,

வெ. கோவிந்தராஜுலு
விருத்தாசலம்.

ஐயா, நான் தங்கள் 'நேத்திரப்பூண்டுத் தைலத்தை' உபயோகித்து வருகிறேன். மற்ற மருந்துகளைவிட இதனால் அதிக குணம் அடைந்திருக்கிறேன். ஆகையால் நான் தங்களுக்கு பணம் மணியாடர் செய்து இருக்கிறேன் பெற்றுக் கொண்டு எனக்கு ஒரு பாட்டில் நேத்திரப்பூண்டு தைலம் அனுப்பி வைக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

சி. ராமசாமி முதலியார்
நாகிரெட்டிபாளையம்,

மதிப்பிற்குரிய க. வேங்கடேசன் அவர்களுக்கு தாங்கள் கொடுத்த மருந்தினை சாப்பிட்டு வருகிறேன் மருந்து சாப்பிட்டபின் அடைந்த பலன்கள் :

இதற்கு முன் மூன்று அல்லது நான்கு முறை Motion ஆகிக்கொண்டிருந்தது. இப்போது ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டும் ஆகிறது.

முன்பு வயிற்றில் அலைச்சலாக ஒரு விதமான நிம்மதியற்று இருந்தது தற்போது எந்தவித தொல்லையும் இல்லை.

முன்பு இருந்த எடை 53 Kgs. தற்போது 54 Kgs..


பல மருந்துகள் சாப்பிட்டும் மலப்போக்கை கட்டுப் படுத்த முடியாமல் தாங்கள் அளித்த,

"மூலிகை காய கல்பம்"

சாப்பிட்ட பின் (10 நாட்கள்) எதிர்பார்க்காத அளவுக்கு பலன் கிடைத்துள்ளது மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தங்கள் அன்புள்ள

ஆர். வசந்தன்
பெங்களூர்-67



பேரன்பும் பேரறிவும் கொண்ட தம்பி க. வேங்கடேசனுக்கு,

தந்தையார் இரங்கல் விழாவின் மூலமாக,

"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

என்ற தமிழ் மறை இனிய வாக்கைத் தாங்கள் மிகவும் சிறப்பாக மெய்ப்பித்துவிட்டீர்கள். தங்கள் தந்தையர் ஆன்மாவை, அறிஞர்கள், சுவாமிகள் வாழ்த்துரைகளால் பூரித்து மகிழ்ந்து ஆறுதலடையச் செய்துவிட்டீர்கள். இதுவன்றோ உத்தம மகன் உயர் தொண்டாகும்.

அன்பு மறவாத

அன்பன் மு. பெருமாள்

சென்னை.

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு மூலிகை மணி வாசகன் சுகுமார் எழுதிக்கொண்டது. நான் மூலிகை மணியை இந்த 5 மாதங்களாகத்தான் படித்து வருகிறேன். நான் மிகவும் விரும்பிப் படிக்கிறேன். அதில் வரும் 'முப்பு ஆராய்ச்சி கட்டுரை' அமிர்த நிலையும் அதன் ஏற்ற இறக்க விவரம் என்பது பற்றி ஒரு கட்டுரை வருகிறது. அது மிகவும் ஒரு அருமையான கட்டுரை ஒவ்வொரு மனிதனும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம். மூலிகை மணியில் வருபவை எல்லாம் மக்களுக்குப் பயன் தரக்கூடியவை.

அன்பன்

ஜெ. சுகுமார்

கோயமுத்தூர்

நோயும் - மருந்தும்

வாசகர்கள் கேள்வியும் ஆசிரியர் பதிலும்

க. வே.

கேள்வி: காபி, டீ இரண்டில் எது நல்லது?

பதில்: இரண்டும் கெடுதல்தான். காலையில் நீராகாரம் பருகுங்கள் மாலையில் 'காம்ப்ளான்' பருகுங்கள் நலம் பெறலாம்.

கே: தங்கள் தந்தையார் திடீரென்று இயற்கை எய்தியது பெரும் அதிர்ச்சியைத் தந்தது? (T. V. மூலம் அறிந்தேன்) இது எப்படி நேர்ந்தது?

ப: 1—9—79 அன்று காலை 5-30 இருக்கும். வழக்கம் போல், பால் அருந்தினர். உடனே உடல் வியர்த்தது. கைநாடி பார்த்தேன் மயங்கினர். வாதநாடி எழுச்சி பெறவில்லை. அடுத்த ஐந்து நிமிடங்களில் ஐயோ....எப்படி எழுதுவேன், நண்பரே! ஏதும் செய்ய முடியாத பாவியாகிவிட்டேன்.

கே: 'மூலிகை மணி' தொடர்ந்து வெளிவருமா?

ப: நிச்சயம் தொடர்ந்து வரும். தந்தையாரின் கனவுகள் அனைத்தும் நனவாகும் வண்ணம், 'மூலிகை மணி' தொடர்ந்து மேலும் பல சிறப்புகளுடன் வெளிவரும்.

அதுமட்டுமன்று, மூலிகைகளின் புகழ் உலகெங்கும் பரவ வேண்டும் என விரும்பிய அவரின் ஆசையை நிறைவேற்றும் வகையில் ஜனவரி முதல் 'Herbs and Health' எனும் காலாண்டு ஆங்கில இதழ் வெளிவர இருக்கிறது. 'என் கடன் அவர் பணி செய்து கிடப்பதே'.

கே: தங்கள் தந்தையாரைப் போன்றே தாங்கள் இத்துறையில் மேலும் பல நிலையான பணிகள் செய்ய வேண்டும். அந்தத் திறன் உங்களிடம் உளது என்பதை 'சித்த மருத்துவ ஆய்வுக் கழகம்' மூலம் உணர்ந்தேன். மூலிகை ஆராய்ச்சிக்கென ஏதாவது புதிய திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றீர்களா?

ப: தந்தையார் ஆற்றிய பணிகள் Foundation போன்றவை. மூலிகை என்றாலே முகம் சுளித்த ஒரு காலகட்டத்தில், எவ்வித உதவிகளும் இன்றி தனித்துப் பணிபுரிந்து இன்று பட்டிதொட்டிகளில் 'மூலிகை'களைப் பற்றி பேச வைத்துள்ளார் என் தந்தையார். உறுதி

வாய்ந்த அந்த Foundation–மீது 'கண்ணப்பர் மூலிகை ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை நிறுவ 'பத்தாண்டுகால திட்டம்' ஒன்றினைத் தீட்டிவருகின்றேன். என் தந்தையாரின் ஆன்ம பலமும், முருகப் பெருமானின் கருணையும், உங்களைப் போன்ற நண்பர்கள் தரும் ஊக்கம், இவற்றினுல் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி—உலகை ஈர்க்கும் உன்னத மூலிகை ஆராயச்சி நிலையமாக்குவேன்.

கே: கிரிக்கெட் போன்று கடுமையான விளையாட்டுகளின் போது, களைப்பு ஏற்படாமலிருக்க என்ன செய்யலாம்?

ப: சுத்தமான தேன் 2 ஸ்பூன், எலுமிச்சம் பழச்சாறு 2 ஸ்பூன் இரண்டையும் $\frac{1}{2}$ குவளை நீரில் கலந்து 1 மணிக்கு 1 முறை பருகிவர களைப்பு ஏற்படாது; ரன்கள் குவியும்; விக்கெட்டுகள் விரைவில் விழும். ஆனுல் இரண்டு தரப்பிலும் உள்ளவர்களும் சாப்பிட்டால், ஆட்டம் 'டிராவில்'தான் முடியும். காரணம், தேன், பாரபட்சமின்றி இரண்டு பேருக்கும் சம பலம் தரும்.

கே: நீங்கள் எழுதிய 'ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம்' எனும் நூல் மதுரை காமராஜ் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வி முதுகலை (எம்.ஏ.) மாணவர்க்குப் பாட புத்தகமாக வைத்துள்ளது தங்களுக்குப் பெருமைதானே! மேலும் இதுபோன்ற பாட புத்தகங்கள் எழுதுவீர்களா?

ப: யான் எழுதிய நூலினை பாட புத்தகமாக்கியுள்ளது ஒரு வகையில் எனக்குப் பெருமைதான் என்ருலும், முழுமையான பெருமை, நம் நாட்டு மருத்துவத்தைத்தான் சாரும். நம் நாட்டு மருத்துவம் வைரம் போன்றது. இடையில் புறமருத்துவ முறைகள் தாக்குதலால் சற்று ஒளி மங்கியது போல் தோன்றியது; என் தந்தை அதன் மீது படிந்த தூசிகளைத் துடைத்து 'வைரம்' என்று உலகுக்கு எடுத்துக் கூறினர். யான் மேலும் அதன் ஒளியை எடுத்துக்காட்ட 'பட்டை' தீட்டியுள்ளேன். பட்டை தீட்டிய பெருமை மட்டுமே எனக்குண்டு.

இரண்டாவதாக இந்த நூலினைப் பாடப் புத்தகமாக ஆக்கிய பெருமை, புதுமையைத் தேடி, மாணவர் உள்ளங்களில் பதிப்பிக்க விரும்பும் மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் டாக்டர் மு, சண்முகம் பிள்ளை, டாக்டர் தமிழண்ணல், டாக்டர் ஆண்டியப்பன் அவர்களைச் சார்ந்ததாகும். ஆளைப் பார்க்காமல், நூலைப் பார்த்து பாடப் புத்தகமாக்கிய அவர்களின் நுட்ப அறிவை நினைந்து போற்றுகின்றேன். கல்லூரி மாணவர்களிடையே, 'Home Science' போல் 'Siddha Science' என்ற பெயரில் ஒரு Branch of Study—அமைக்க

சில நூல்கள் எழுதத் திட்டமிட்டுள்ளேன். என் தந்தையின் அருளாசியும், முருகனின் கருணையும், இம் முயற்சியினைக் கூட்டுவிக்கும்.

கே: 'முகப்பரு' வந்தால் குணமாக்கும் எளிய மூலிகை முறை ஒன்றும் கூறவும். 'அம்மான் பச்சரிசியை' பயன்படுத்துமாறு தங்கள் தந்தையார் குறிப்பிட்டிருந்தார். அதனையே தாங்களும் கூற வேண்டா. புதிதாக எளிதான பலன் தரக் கூடியதைக் கூறுங்கள்! எனக்கு மட்டும் கூறுங்கள். ரகசியமாக வைத்துக்கொள்கிறேன்.

ப: அடேயப்பா! எத்தனை கண்டிஷன்கள்! பட அதிபர்கட்கு முன்னணி நட்சத்திரங்கள் போடும் கண்டிஷன்கள் போல் அல்லவா இருக்கிறது! தந்தையார் குறிப்பிடாத எளிதான புதியதான பயன் தரக்கூடிய மூலிகை... இருங்கள் யோசிக்கிறேன்... எதைக் குறிப்பிடலாம். 'ம், இதென்னடா! சட்டென்று ஞாபகம் வரலியே.... ம்... ஆ! ஞாபகம் வந்திடுச்சு' உஷ்! ரகசியமாக உங்களுக்கு மட்டும் கூறுகிறேன். காதைக் கொண்டுவாருங்கள்.

'சீமை அகத்தி இலை தெரியுமா!' நண்பரே...! உங்கள் ஊரான மதுரையில் 'வண்டு கொல்லி' என்பார்கள். நீளமான இலை! சேவல் கொண்டையைப் போன்று மஞ்சளாகப் பூக்கும் ('என்னய்யா! கதை விடுகிறீர். சேவலுக்குக் கொண்டை சிவப்பாயிற்றே' என்கிறீர்களா? கொண்டையைப் போன்று என்று அமைப்பைத்தான் குறிப்பிட்டேன், பூவின் நிறம் மஞ்சளாகத்தான் இருக்கும்) இந்த இலையைக் கொண்டு வந்து, சந்தனம் சிறிது சேர்த்து அரைத்து இரவில் பருக்கள் உள்ள இடம், இல்லாத இடங்களில் பூசுங்கள். பருக்கள் உள்ள இடம் மறையும், இல்லாத இடங்களில் புதிதாக வராமல் தடுக்கும். வாரம் ஓரிரு நாள் செய்துவர முகப்பரு வராமல் தடுக்கலாம். இந்த ரகசியத்தை வெளியே யாருக்கும் கூறுதீர்கள்! ஆமாம்!

கே: நீரிழிவு நோயாளிகட்கு ஏதாவது ஒரு மருந்தை தயாரித்துக் கொடுங்களேன்!

ப: மருந்துகண்டுபிடிப்பது சிக்கலானது. ஆனல்,அந்த நோயைக் கட்டுப்படுத்த உணவு வகையிலேயே உதவக் கூடிய ஒரு பொடியைத் தயாரித்துள்ளோம். 'சுண்டை வற்றல் பொடி' என்று பெயர். 9-மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. பகல் உணவில் 2 பிடி சாதத்துடன் இரண்டு ஸ்பூன் பொடியுடன் பிசைந்து சாப்பிட, நீரிழிவு கட்டுப்படும்.

கே : மஞ்சள் தூள் தினமும் காலையில் சிட்டிகையளவு வெந்நீரில் கலந்து சாப்பிட்டால் உடம்பில் சிரங்கு, படை, குஷ்டம் முதலிய வியாதிகள் வராமல் தடுத்துக் கொள்ளலாம், மேற்குறிப்பிட்ட நோய்கள் வந்தபின் சாப்பிட்டாலும் குண மாகும் என்று ஒரு தமிழ் வைத்தியர் சொல்கிருர். இது குறித்து தங்கள் கருத்து என்ன?

ப : ஓரளவு உண்மைதான். சொறி, சிரங்கு ஆகியன வராது என்பது உண்மை. குஷ்டம் போன்ற நோய்களைத் தடுக்கும் ஆற்றல் மஞ்சளுக்கு மிகச் சொற்ப அளவில்தான் உண்டு. கிழங்கு மஞ்சளை நல்லெண்ணெயில் பதப்படுத்தி உலரவைத்துப் பின் சூரணம் செய்து பயன்படுத்த வேண்டும். 10 நாட்கள் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் போதுமானதாகும். தொடர்ந்து வேண்டாம்.

கே: எனது பற்களின் மீது பற்காரைகள் நிறைய மஞ்சள் கலரில் இருக்கின்றன. நான் ஆங்கில மருத்துவம் செய்ய எப்பொழுதுமே தயங்குபவன். மஞ்சள் நிறத்திலுள்ள இந்த பற்காரையை மாற்ற ஏதாவது வழிகூற மிகவும் தாழ்மையுடன் நான் மன்ருடுகிறேன்.

ப : 'நெல்லிக்காய்' வாங்கி காலையில் வாயிலிட்டு நன்ருகக் குதப்பி துப்பிவிடவும். பின்னர் கரிசலாங்கண்ணி இலை, வேப்பங் கொழுந்து அல்லது வல்லாரை இவற்றில் ஏதாவதொன்றைக் கொண்டு பல் துலக்கிவர மஞ்சள் நிறம் மாறும். தொடர்ந்து மூன்று மாதங்கள் செய்ய வேண்டும். ஆலமர விழுது கொண்டுவந்து பொடிசெய்து அதனைக் கொண்டும் பல் துலக்கிவர காரையின் மஞ்சள் நிறம் நீங்கும்.

கே : கடைகளில் கிடைக்கும் கஸ்தூரி, கோரோஜனை ஆகியவை உண்மையானவையா? போலியா என்பதை எப்படி அறிவது?

ப : நல்ல கேள்வி! கஸ்தூரி, கோரோஜனை என்பவை முறையே மான், பசு ஆகியவற்றிடமிருந்து கிடைப்பவையாகும். இவற்றையும் போலியாகத் தயாரிப்பதற்கு மனிதர்கள் இந்த உலகில் இல்லாமலில்லை; போலித்தனமான இவைகள் விலையில் மலிவாக இருக்கும். ஆனல் செய்கையில்—குணத்தில் முற்றிலும் பயனற்றவையாகும். உண்மை யான கஸ்தூரியை தண்ணீரில் போட்டால் மிதக்கும். மிதுந்து

கொண்டே, மென்மையாகக் கரையும், அதனைத் தெளிவாகக் காண லாம். மரக்கலரில் ஊதுவத்தி புகைபோல் தண்ணீரில் கரைவதை கண்ணுரக் காணலாம். போலியான கஸ்தூரி நீரினுள் மூழ்கிவிடும் சரிவரக் கரையாது.

அதுபோல் கோரோஜனையும் மஞ்சளாக இருக்கும். இதனைச் சோதிக்க, சிறிது சுண்ணும்புடன் கலந்து குழைக்கவும். அப்போதும் மஞ்சளாக இருந்தால் உண்மையான கோரோஜனை என அறியாலாம். சிவப்பாக மாறிவிட்டால் போலி என்று தெளியலாம். இந்த நுட்பமான தேர்வுக் குறிப்புகளைக் குருவிக்காரர்கள் நன்கு அறிவர்.

கே: எனது நெற்றியில் ‘மொசு மொசு’ என ரோமம் வளர்கிறது, இதைத் தடுக்க ஏதாவதொரு மார்க்கம் உண்டா?

ப: உண்டு. குப்பைமேனி இலை, வேப்பங்கொத்து, விராலி மஞ்சள், சமமாக சேர்த்து அரைத்துக்கொண்டு இரவு படுக்கைக்குப் போகும்போது நெற்றியில் பற்றுபோட்டு வரவும். இப்படி தொடர்ந்து செய்ய ரோமம் முளைப்பது அற்றுப்போகும்.

கே: ஒருவருக்கு இருதயத்தில் பலஹீனம், கோளாறு இருப்பது எந்தவித வெளி அடையாளங்களைக்கொண்டு அறிய முடியும்?

ப: நாக்கை வெளியே நீட்டச் சொல்லிப் பார்த்தால் நாவின் இரு பக்கங்களிலும் கடைவாய் பற்களின் அடையாளங்கள் அடிச்சுவடு போல் பதிந்து காணும், அத்துடன் நாக்கு தடித்தும் வாய்க்கு கொள் ளாமல் பெரிதாகி இருக்கும். நுனி நாக்கில் துடிப்பு காணும். காலின் கீழே கணுக்காலைச் சுற்றி வீக்கம் கண்டு இருப்பின் அதிகமான இருதய பலஹீனம் என்று சொல்லிவிடலாம். இருதய கோளாறு உண்டாகு மானல் மர்மகுறியின் உள்ளே சுருக் சுருக்கென்று குத்துவலி ஏற்படும்.

கே: முதுகில் சட்டை நனையும் அளவிற்கு வியர்வை ஏற்பட்டுக்கொண்டு வருவது நல்லதா? கெட்டதா?

ப: முதுகில் வியர்வை விடுவது சிறுநீர் குண்டிக்காய்கள் பலஹீன மாகி இருக்கும்; அறிகுறி உடம்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வியர்வை காணுவது பிறகு நீடித்த நோய்கள் காணுவதற்கு அஸ்தி வாரம் போடுவது போலாகும்.

கே: ஒருவருக்குப் பித்தம் இருப்பதையும் சர்க்கரை வியாதி இருப்பதையும் பிறர் உதவியின்றி எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

ப: பித்தம் இருப்பவர்களுக்கு உடம்பில் அளவுக்கு மீறிய சூடு உண்டாகும். வாய் கசக்கும். கண் எரிச்சலுண்டாகும். கண் நிறம் மஞ்சளும் சிவப்பும் கலந்த கருஞ்சிவப்பாகி இருக்கும். சிலருக்கு முகம் மஞ்சளும் நிறமாகவும் மாறும். மலம் மஞ்சளும் பச்சைநிறமும் சேர்ந்து காணும். சர்க்கரை வியாதியுடையவர்கள் சிறுநீரில் ஈக்களும், சிறு எறும்புகளும் மொய்த்துக் கொண்டிருக்கும். சிறுநீர் துர்நாற்றமடிக்கும். அடிக்கடி தாகமும் பசியும், எடுக்கும். ஆயாசம், களைப்பு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், கை கால் ஓய்ச்சல் முதலிய குணங்கள் உண்டாகும்.

கே: உணவு உட்கொள்ளும்போது விக்கல் வருகிறது. இதனைத் தடுக்க உபாயம் கூறவும்.

ப: ஆடாதொடை இலைச் சாற்றை மிளகுடன் ஊற வைத்து பின்பு எடுத்து காய வைத்து இடித்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு சிட்டிகை அளவு தேனுடன் குழைத்து தினம் மூன்று வேளை கொடுத்து வரவும், எண்ணெய் பொருட்களை அதிகம் சேர்க்கக் கூடாது.

கே: எனக்கு சதா பல்லில் இரத்தம் கசிந்துகொண்டிருக் கிறது இதனை நிறுத்த என்ன செய்யலாம்?

ப: வேப்பம் ஈர்க்கு, ஆலம் பட்டை, சுக்கு, காசிகட்டி, கடுக்காய்த்தோல், இந்துப்பு ஆகியவைகளை சமமமாக எடுத்துலர்த்தி இடித்து தூள் செய்து வைத்துக் கொண்டு காலை, மாலை பல் துலக்கி வர அழுதால் சிரித்தால் பல்லில் வரும் ரத்தம், பல் ஆட்டம், பல் சொத்தை ஆகிய தொல்லைகள் விலகும். கருப்பஞ்சாறு, பதநீர் அடிக்கடி பருகி வரவும்.

கே: உடம்பில் பித்தம் அதிகமாக இருப்பதற்கு என்ன செய்யலாம்?

ப: சீரகம், சுக்கு, ஏலம், நெல்லி வற்றல் வகைக்கு 1 பலம் எடுத்து சுத்தம் செய்து உலர்த்தி இடித்துப் பொடிசெய்து அத்துடன் 2 பலம் கற்கண்டைப் பொடிசெய்து சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு தினம் 2 சிட்டிகை காலை, மாலை 2 வேளை வெந்நீர், நெய், தேன் ஆகியவை களில் குழைத்துண்ணலாம்.

கே: தென்னங் கள்ளினுல் டி. பி. நோயைக் குணப் படுத்தலாம் என்று கூறுகின்ருர்களே. அந்த முறையை எப்படி பின்பற்றுவது? விளக்கவும்.

ப: அதிகப் புளிப்பு செய்யாத தென்னங்கள்ளை பிரண்டை உப்பு நாயுருவி உப்பு ஆகியவைகளுக்கு அனுபானமாக ஒரு மண்டலம் கொடுத்துவந்தால் (டி. பி.) சயநோயில் நலிந்த நுரையீரல்கூட சரி பட்டு போகும். தென்னை மதுவும், தமிழ் மருந்தும் சேர்ந்து விட்டால் சயரோகம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போகும்.

கே: இரத்தம் குறைவாக உள்ள கர்ப்பிணிப் பெண்கள் இரத்தம் அதிகரிக்கவும், சுகப் பிரசவம் அடையவும் மூலிகை முறை இருந்தால் கூறுங்களேன்?

ப தினமும் இரவில் ஓர் சீமை அத்திப்பழத்தை பாலில் போட்டு அத்துடன் 1 ஏலம் தட்டிப்போட்டு சுண்டக் காய்ச்சி வடிகட்டி சிறிது குங்குமப்பூவும், சீனுக்கற்கண்டும் போட்டு படுக்கைக்கு முன்பு குடித்து வர சோகை நீங்கி ரத்தம் பெருகி சுகப்பிரசவம் உண்டாகும். முருங் கைக் கீரை, ஆப்பிள், சப்போட்டா, ஆரஞ்சு அடிக்கடி சாப்பிடவும்.

கே: ஆசனக்கடுப்பு, வயிற்றுக்கடுப்பு ஆகியன அடிக்கடி ஏற்படுகிறது? இதற்கு என்ன செய்யலாம்?

ப: அத்திப்பிஞ்சு, கோவைப்பிஞ்சி, மாமரத்துப்பட்டை ஆகியவை களைச் சமமாக எடுத்து இடித்து வாழைப்பூவின் சாற்றில் அரைத்து சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டி தினம் இருவேளை வெந் நீரில் உண்டுவர மேற்சொன்ன நோய்கள் அறவே ஒழியும். நீராகாரம் சாப்பிட்டுவர இவை வராது தடுக்கலாம்.

கே: வயதானுல் வரும் வாதப் பிடிப்புகளுக்கு எளிய முறையொன்று கூறுங்களேன்.

ப: பொடுதலைச்சாறு, வாதநாராயணன் இலைச்சாறு சம அளவு எடுத்து தினம் காலை மாலை ஒரு சங்களவு சாப்பிட்டு பால் குடிக்க வேண்டும். இப்படி 20 நாட்கள் இச்சாபத்தியத்துடன் சாப்பிட குணம் கிடைக்கும். எமது தயாரிப்பான 'சாம்பிராணித் தைலம் வாங்கி' மசாஜ் செய்துவர, வாதப்பிடிப்பு வராமல் தடுக்கலாம்.

கே: ஐயா உருள் அரிசி என்றொரு மூலிகை அரிசி உள்ளதா? அது எங்குக் கிடைக்கும்?

ப: என்னப்பா கேள்வி இது! உங்கள் வீட்டு ஐந்தரைப் பெட்டியைத் திறந்தால் நெடியுடன் காணப்படுமே! அதுதான் உருள் அரிசி! புரியவில்லையா? இதன் செடியை துவையல்கூட செய்வார்களே! இப்போதும் புரியவில்லையா? மார்க்கெட்டுக்குச்சென்ருல் இஞ்சி கறிவேப்பிலையுடன் சேர்த்து 'கொசுறு' வாங்குவார்களே! 'அடடா! கொத்தமல்லி விதை தனியாவையா குறிப்பிடுகின்றீர்கள்? அதே! அதே! 'தனியா'விற்குத்தான் 'உருள் அரிசி' என்று பெயர்.

கே: ஐயா, ஏதோ ஒரு மூலிகை இருக்கிறதாம், இதன் சாற்றினைத் தண்ணீரில் விட்டால் தண்ணீர் இறுகிவிடுமாமே! உங்களுக்கு அந்த மூலிகையைத் தெரியுமா?

ப: கிராமத்தில் சாதாரணமாக காணக்கூடிய மூலிகைதம்பி அது! 'கட்டுக் கொடி' என்று பெயர், நீரைக் கட்டுவதால் - கட்டுக்கொடி எனலாயிற்று. பெயரிலேயே அதன் குணம் தெரிகிறது பார்த்தாயா? மிக ஆழமான ஆணிவேரைக் கொண்டு படரும் 'கட்டுக் கொடி'

வாசகர்கட்கு

சித்தர்கள், மூலிகைகள், உடல்நலம், சித்தமருத்துவம், பற்றிய புதிய அரிய செய்திகளை ஒவ்வொரு மாதமும் தாங்கி வரும் மூலிகைமணிக்கு நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்

ஓராண்டு சந்தா ரூ. 9
மூவாண்டு சந்தா ரூ. 27
ஆயுள் சந்தா ரூ. 251

என்று 'சந்தா'வை வாரி வழங்குங்கள். ஏற்கனவே சந்தா சேர்ந்த அன்பர்கள், தன் பங்குக்கு குறைந்த பட்சம் மூன்று புதிய சந்தா அன்பர்களைச் சேர்த்துக்கொடுங்கள்.

மூலிகை மணி உங்கள் பத்திரிகை! அதன்

- ∴ வாழ்வு
- ∴ வளர்ச்சி
- ∴ வெற்றி

உங்கள் திருக்கரங்களில் உள்ளது. சந்தா சேர்ந்தும், புதிய சந்தா அன்பர்களைச் சேர்த்தும், மறைந்திருக்கும் மூலிகைகளின் மாண்பினை, 'மூலிகை மணி' மூலம் ஒலிக்க-உங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டுங்கள்.

இலையைப் பிழிந்து அந்தச் சாற்றினை தண்ணீரில் விட்டால் தண்ணீர் வெண்ணெய்போல் திரளும். கட்டியாக மாறும். இதனை, சொறி சிரங்கு, கரப்பான்மீது தடவிவர அவை குணமாகும்.

கே: ஐயா, எனக்கு வயது 52 ஆகிறது; அடிக்கடி சோர்வாகவும், கை கால் வலியும் உண்டாகின்றது என்ன செய்யலாம்?

ப: மாதம் இருமுறை முடக்கத்தான் துவையல் சாப்பிடுங்கள், பேரீச்சம்பழம், அத்திப்பழம், சப்போட்டாப்பழம் ஆகியவற்றுடன் தேன் கலந்து சாப்பிடுங்கள். முருங்கைக்கீரை, பசளைக்கீரை, அரைக் கீரை, தூதுவளை ஆகியவற்றில் ஏதாவதொன்றை தினம் உணவில் சேருங்கள், வீண் பிரச்னைகளிலிருந்து விடுபட காலை, மாலை இருவேளை 5 முதல் 10 நிமிடங்களாவது தியானம் செய்யுங்கள். எமது தயாரிப் பான 'மூலிகைக் காய கல்பம்' தாங்கள் குறிப்பிட்ட குறைகளை நிவர்த் திக்கும்.

கே: கை கால்களில் உள்ள விரல் நகங்கள் சிதைவுறு கின்றன. அடிக்கடி நகச்சுற்று ஏற்படுகிறது. தடுக்கவும் நீக்கவும் வழி கூறுங்களேன்?

ப: உடம்பில் போதிய அளவு சுண்ணாம்புச் சத்து இல்லையெனில் இப்படிப்பட்ட கோளாறுவரும். எனவே, கரும்புச்சாறு, பதநீர், விளாம்பழம், நெல்லிக்கனி, எலுமிச்சம்பழம் போன்றவற்றைத் தொடர்ந்து உணவில் சேர்த்து வாருங்கள் நகக்கோளாறு வராது தடுக்கலாம். எலுமிச்சம் பழத்தினை நகச்சுற்றுவந்தபின் அதன்மீது சொருகிவைக்க குணமாகும். நகம் சொத்தையாகாமல் இருக்க வாரம் ஒருமுறை மருதாணி இலைகளை அரைத்துப் பூசி வரவும்.

கே: நான் ஒரு பெண். தோலில் சுருக்கங்கள், வறட்சி ஆகியன வராமலிருக்க என்ன செய்யலாம்?

ப: குளிக்கும்போது உடம்பில் மஞ்சள் பூசுங்கள்; சோப் தேய்க்க வேண்டாம். உணவில் உப்பின் அளவைக் குறையுங்கள்; தேன், பால், மோர், எலுமிச்சை, ஆப்பிள், காரட், வெங்காயம் போன்ற வற்றை அடிக்கடி சாப்பிடுங்கள். இரவில் படுக்கும்போது ஆலிவ் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுங்கள். வாரம் ஒரு முறை முகத்தில் 'வெண்ணெய்' பூசி ½ மணி கழித்து குளியுங்கள், முகம் வழவழப்புடன் அழகாக இருக்கும்.

கே: என் குழந்தைக்கு 'கக்குவான்' இருமல் உள்ளது? இருமும்போது வேதனையாக உள்ளது? பிற குழந்தைகட்கும் தொற்றிவிடுமோ என்றும் அச்சமாக உள்ளது? இதனைத் தீர்க்க மூலிகை மருந்து கூறவும்.

ப: ஐயோ! பாவம்! கவலைப்பட வேண்டாம்! கக்குவான் தொற்றுநோய்தான் எனவே, மற்ற குழந்தைகளுககுத் தடுப்பு மருத்துவம் செய்துவிடுங்கள்; நோயுற்ற குழந்தைக்குக் கீழ்க்கண்ட முறையால் சிகிச்சை செய்யுங்கள்.

'தவனம்' என்றொரு பூ. பூக்கடையில் கிடைக்கும். இதனை வாங்கிவந்து இடித்து ஒரு சங்களவு சாறு எடுத்து தேன் அதே அளவு கலந்து காலை, மாலை, இருவேளை வீதம் 5 நாட்கள் புகட்டுங்கள், நோய் படிப்படியே தணியும் பிற குழந்தைகளுக்கு தொற்றாமல் இருக்க, துளசி இலைச்சாறு பத்து சொட்டு தேனில் கலந்துகொடுக்கவும். அத்துடன் நோய் கடுமையாகி குழந்தை சளி தொல்லையில் அவதிப்பட்டால், சித்தமருத்துவரிடம் சென்றால், அவர் பவள பற்பம், மான்கொம்பு பற்பம் ஆகியவற்றைத் தருவார். அதனைத் தேனில் குழைத்துக் கொடுங்கள்.

கே: நான் ஒரு கல்லூரி மாணவன் ஹாஸ்டல் உணவால், பித்தமும் வாய்வும் ஏற்படுகிறது? இதனைத் தீர்க்க எளிய சிகிட்சை கூறுங்களேன்?

ப: கல்லூரி மாணவரே! எலுமிச்சம் பழமும், தேனும், சுக்கும் இருக்கும்வரை ஏன் கவலைப்படுகின்றீர்! பித்தம் அதிகமானால், எலுமிச்சம் பழச்சாறு ஓர் அவுன்ஸ், தேன் 1 டீஸ்பூன், வெந்நீர் 4 அவுன்ஸ் கலந்து காலைவேளை பருகுங்கள். பித்தம் தணியும், வயிற்றுக் கோளாறு வராது. வாய்வு அதிகமானால் 'சுக்கு' பொடி செய்து வாயிலிட்டு வெந்நீர் குடியுங்கள். வாய்வு வெளியேறும்.

கே: முட்டைக்கு ஈடான சைவ உணவு எது?

ப: ஆரஞ்சு, பப்பாளி, விளாம்பழம், சப்போட்டா, எலுமிச்சை, காரட், ஆப்பிள் முதலியன.

கே: குழந்தைகளுக்கு நலம் அளிக்கக் கூடிய தீமை தராத தின்பண்டங்கள் எவை?

ப: பால்கோவா, கேக், உருளைக்கிழங்கு, நேத்திரங்காய் சிப்ஸ், மிளகுவடை போன்றவை உடலுக்கு நலம் தரும் தீமை தராத தின்பண்டங்கள். அன்றாடம் ஒன்றாகத் தரலாம். அளவுடன் தரவும்.

பாருக்குள் பரிகாரி

'சேவைக்கோர் அரசி'

-: திருமதி. ரெஜினு வின்செனட் :-

பிரான்ஸ் நாட்டிலுள்ள 'செயின்ட் லூர்துஸ்' எனும் தேவாலயம், உலகெங்கும் உள்ள கிறித்தவர்கட்குப் புனிதமான ஸ்தலமாகும். பாமரர் முதல் படித்த விஞ்ஞானிகள் வரை, இந்தத் தேவாலயத்தில் நடக்கும் அற்புதங்களைக் கண்டு வியக்கின்றனர். அப்படியென்ன அற்புதம் அங்கு நடக்கின்றது ?

உயிருக்குப் போராடும் நோயாளிகள், உள்ளத்தின் வலிமைக்காகப் போராடும் மனநோயாளிகள், இன்னும் வாழ்க்கையில் எல்லையில்லாத்தொல்லை அடைந்து நலிந்தவர்கள்—இந்தத் தேவாலயத்தின் திருவாயிலில், லூர்து அன்னையின் தரிசனம் கண்டும், அவ்வன்னை அளிக்கும் புனித நீரமுதத்தினை அருந்தியும் நலம் எய்துகின்றூர்கள், உலகெங்கிருந்தும் செயின்ட் லூர்தஸ் புனித ஆலயத்திற்கு அன்றுடம் ஆயிரக்கணக்கானேர் அன்னையைத் தரிசித்தும், நீரமுதம் அருந்தியும், நல்வாழ்வு பெற்று வருகின்றூர்கள்.

தெய்வ வல்லமை வற்ருது பெருகி வரும், இந்தப் புனித தலத்திற்கு, 'சேவைக்கோர் அரசி' எனப் போற்றப் படுபவரும், நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவின் சிஷ்யையுமான திருமதி. ரெஜினுவின்செனட் அவர்கள் அண்மையில் 2-வது முறையாக யாத்திரை சென்று வந்தார்கள்.

சமுதாயத்தின் அடித்தளத்தில்—சமூகம் புறக்கணித்து ஒதுக்கிய, வாழவகையற்ற தொழுநோயாளிகள்; அனுதைகள், மரணவாயிலில் போராடும் திக்கற்றவர்கட்கு நல்

வாழ்வு நல்கும் தெய்வமாக விளங்கிவரும் திருமதி. ரெஜிஞவின்செண்ட் அவர்கள், இந்தத் தேவாலயத்தின் வரலாறு, மகிமை ஆகியவற்றைத் தான் கண்டவாறு விளக்கிக் கட்டுரையாக்கி அளித்துள்ளார்கள். மூலிகை மணியின் வாசகராக அறிமுகமாகி, ஆசிரியர் அமரர் கண்ணப்பரின் மாணவியாக மலர்ந்து, இன்று எங்கள் குடும்பத்திற்கு அரணுக, எங்கள் குடும்ப வளர்ச்சிக்கு மண மூட்டும் ஒரு 'பாசமலராக' விளங்கும், திருமதி. ரெஜிஞ வின்செண்ட் அவர்களின் இக்கட்டுரையைப் படிப்போர், செயின்ட் லூர்தஸின் புனித ஆலயத்திற்கே சென்று வந்த புண்ணியத்தைப் பெறுவர். பெறுவார்கள் என்று உறுதி யாக நம்புகிறேன்.


—க.வே.

பாருக்குள் பரிகாரி

இதென்ன பாரு! பாரு என்ருல் பாறை; 'பரிகாரி' என்ருல் வைத்தியன். பாறைக்கும், வைத்தியத்திற்கும் என்ன தொடர்பு என நினைப்பீர்கள்! ஆம், உலகில் தெய்வ உணர்வு, தெய்வ நம்பிக்கை, தெய்வ அன்பு என்ற மெஞ்ஞானம் குறைந்துகொண்டே போவதைக் காண்கிருேம். இப்படிப்பட்ட நாகரீகம் நிலைத்துக்கொண்டிருக்கும் வேளையில், உலகெங்கிருந்தும் மக்கள் திரள் திரளாக பிரான்சில் உள்ள செயின்ட் லூர்துஸ் ஆலயம் வந்து தெய்வ வல்லமையை மட்டும் நம்பி, நலம் குறைந்தவரும், நலம் நிறைந்தவரும் ஒருங்கே கூடி அழுது ஜெபித்து தங்கள் தங்கள் நம்பிக்கைக் கேற்ப வரப்பிரசாதங்களைப் பெற்று நிறைவு மனதோடு போகும் காட்சி படித்துணர்வதைவிட பார்த்து அனுபவிக்க வேண்டிய காட்சி. கடவுளின் அனுக்கிரகத்தால் இரு முறை 1961ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும்; இவ்வருடம் 1979ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும் இத் திருத்தலத்திற்கு நாங்கள் சென்று அங்கு அனுபவித்ததை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

உலகில் துன்பமும் துயரமும் மிகும்போது தெய்வம் தானே மனித வடிவம் தாங்கி, அவற்றைக் களைந்து இன்பம் அளிக்க அவ்வப்போது அவதரிப்பதை நாம் புராணங்களில் படித்து அறிவோம்.

அப்படிப்பட்டதோர் திரு அவதாரம், 1858ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் உள்ள குறுகிய கிராமமான 'செயின்ட் லூர்தஸில்' நடந்தது. ஆம்!



(லூர்து அன்னையின் திரு உருவச்சிலையுடன் கூடிய சோலைவனம். இங்குதான் 1858-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், ஆடு மேய்க்கும் சிறுமி 'பெர்னார்ட்' அம்மைக்கு, அன்னை காட்சி அளித்து, புனித நீரூற்றினை உண்டாக்கினார்கள். குகையை ஒட்டினாற்போல் உள்ளது லூர்து அன்னையின் திருக்காட்சி. கீழே திரு வின்செண்ட் அவர்கள், பிரார்த்தனை மெழுகுவர்த்தியை அன்னைக்கு அர்ப்பணித்து வேண்டுதல் செய்கின்றார்.)

அறிவாலும், உணர்வாலும், ஆராய்ச்சியாலும் கிட்டாத அன்னை யின் தரிசனம், ஓர் ஏழைச் சிறுமியின் அன்புக்குக் கிட்டியது.

செயின்ட் லூர்துஸ் ஆலய வரலாறு

1858ஆம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 11 நாள் முதல் ஜுலை 16ஆம் நாள் வரை உள்ள இடைப்பட்ட நாட்களில் 18 முறை தேவ அன்னை, பிரான்ஸ் தேசத்தை சார்ந்த லூர்து என்னும் நகரில் 'மஸாபியெல்' என்ற இடத்தில் விறகு பொறுக்குவதற்காகவும், ஆடு மேய்க்கவும் 'பெர்னர்து' என்ற பதினுன்கு வயது சிறுமிக்கு காட்சி அளித்தார்கள்.


'பெர்னர்து' அவர்களுக்கு 'நானே அமல உற்பவம்' என தேவ அன்னை கூறினார்களாம். இச்சொற்களை அவர்கள் இவ்விடத்து மக்கள் பேசும் மொழியிலேயே குறிப்பிட்டார்கள். புகைப்படத்திலுள்ள அன்னையின் திரு உருவச்சிலை 'பெர்னர்து' அவர்களுக்குத் தோற்ற மளித்த அதே வடிவில், அதே இடத்தில் அமைந்துள்ளமை தனிச் சிறப்பிற்குரியதாகும்.

இக் கோவிலின் இடதுபுறத்தில் திறந்து மூடத்தகு படலைக்கல் ஒன்றின் கீழ், புனிதமான 'புதுமையான முறையில் தோன்றிய நீரூற்று ஒன்றுள்ளது. இந்த நீரூற்று தோன்றிய வரலாறு மிகவும் இன்புறத் தக்கது. 1858ஆம் ஆண்டு 25ஆம் நாள் பெப்ரவரி திங்களில் இந்த நீரூற்று தோன்றியது. 'பெர்னர்து' அம்மைக்கு ஒன்பதாவது முறை யாக, புனித அன்னை திருத்தோற்றம் அளித்தபொழுது, நிலத்தின் ஒரு பகுதியை சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் சுட்டிக்காட்டிய அதே இடத்தில் 'பெர்னர்து' தன்னுடைய விரலினால் ஒரு கோட்டினை இழுத் தார்கள். அவ்வாறு கோடு இழுக்குமாறு 'தேவ அன்னை' 'பெர்னர் துக்கும்' பணித்தார்கள். கோடு இழுத்தவுடன் அங்கிருந்து நீரூற்று கிளம்பிற்று. தேவ திரு அன்னை அந்நீரூற்றினை சுட்டிக் காட்டி, 'அந்த நீரூற்றின் இனிய நீரை பருகுக! அதில் நீராடி நலம் பெறுக' என்று வாழ்த்தினார்கள். இந்த நீரூற்றில் வற்ருது சுரக்கும் புனித மிகு தீர்த்தத் தினைப் பல நீர்த்தாங்கிகளில் தேக்கி வைத்து, யாத்திரீகர்களின் நலம் நாடி பயன்படுத்தப் பெறுகிறது. பின்னர் அதிலிருந்து, உடல் நலம் இழந்தவர்களின் புதுமை நீராட்டுக் குளிப்பறைக்கும், குடிநீர் குழாய் களுக்கும் அனுப்பப்படுகிறது. இங்குள்ள புனித நீர், உலக மக்கள் அத்தனை பேருக்கும் வியத்தகு விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இந்த நீரூற்றின் இடப்புறத்தில் அமைந்துள்ள பளிங்குக்கல் பதித்த ஒரு உலோக மேடையொன்றில் தேவ அன்னை 'பெர்னர்துக்கு'

தோற்றமளித்த போதெல்லாம் மொழிந்த இனிய சொற்கள் பொறிக்கப் பெற்றுள்ளன.

"தவம், தவம், தவம் செய்யுங்கள்" என்றும் "பாவிகளுக்காக பரமனை வேண்டுங்கள்" போன்ற இன்சொற்களை அன்னை எழுதினுள். இவ்வரிய அமுதவாக்கினை ஒவ்வொருவருக்கும் 'லூர்து அன்னை' இன்று கூறும் அரியதோர் இன்றியமையா செய்தி எனக்கொள்வோம். புனித நலம் இழந்



(கூட்டு வழிபாட்டிற்காகச் செல்லும் நீண்ட ஊர்வலம்.)

தவர்களும், நலம் நிறைந்தவர்களும் இப்புனித நீரில் நாடோறும் மூழ்கி களித்து, புத்துணர்வும், புது நலமும் எய்துவது உலகறிந்த உண்மை. அறிவியல் ஆராய்ச்சியாளரும் ஒப்புக்கொண்ட உறுதி வாய்ந்த உண்மை.

லூர்து அன்னை அங்கு தோன்றிய பொழுது திருக்கோயில் ஒன்று இங்கு கட்டுமாறு கேட்டுக்கொண்டார்கள். அன்னையின் நினைவுச் சின்னமாக மூன்று பேராலயங்கள் ஒன்றன்மேல் ஒன்ருக அமையப்பட்டுள்ளது. அடித்தளத் திருக்கோவிலின் முன்மண்டபம் முழுமையான ஒரு பாறையிலிருந்து குடைந்தெடுக்கப்பெற்றுள்ளது. இச்சிற்ப வேலையை 25 சிற்பிகள் இரவு பகலாய் உழைத்து நிறைவு பெறச்செய்தார்கள். புனித 'பெர்னர்தின்' தந்தை அவ்விருபத்தைந்து சிற்பிகளில் ஒருவர் என்பது எண்ணி மகிழத்தக்கதாகும்.

பெர்னட் அம்மையின் வாழ்க்கைச் சிறப்பு

'பெர்னர்ட்' அம்மை லூர்து நகரில் 1844ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 7 ஆம் தேதி பிறந்தார். ஒன்பது குழந்தைகளில் தலைப்பெண் அவர்கள். 18 முறை தெய்வத்தாய், அவர்களுக்குக் காட்சி அளித்தார்கள். ஜூலை மாதம் 7ஆம் தேதி 1866 வருஷம் 'நெவேர்ஸ்' என்னும் இடத்திலுள்ள (பாரீஸ் நகரத்திற்கு அருகாமையிலுள்ளது) கன்னியர் மடத்தில் சேர்ந்தார்கள். பதின்மூன்று வருடகாலம் இக்குழுவில் சமயப்பணியாற்றினுர்கள். 1879 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம்தேதி அமரத்துவம் எய்தினுர்கள். அவர்களுடைய புனிதஉடல் இன்றும் அப்படியே அழியாமல் 'நெவேர்ஸ்' பட்டணத்திலுள்ள அதே மடத்தில் கண்ணுடிப் பேழையில் வைக்கப்பட்டிருக்கிறது டிசம்பர் மாதம் 8ஆம் தேதி 1933ஆம் ஆண்டு அவர்களுக்கு அர்ச்சிஷ்ட பட்டம் கொடுக்கப்பட்டது. இவ்வாண்டு பெர்னத்தம்மாள் இறந்த நூற்ருண்டுவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அன்னை அளித்த புனிதநீரை முதன்முதலாகப் பருகிய புனித உடல் அழியாதிருப்பதில் என்ன விந்தை?

ஆலயத்தில் நடக்கும் அற்புதமும்—ஆராய்ச்சியும்

லூர்து அன்னையின் ஆலயத்திற்கு வெளிப்புறத்தில் மருத்துவர் குழுவின் அலுவலகம் உள்ளது. இக்குழுவினர் திருத்தலத்திற்கு வருகின்ற பயணிகளில் புதுமையாக நலம்பெற்றவர்கள் தரும் தகவல்களைத் திரட்டி, நன்ருக ஆராய்ந்து உண்மையென தீர்வுசெய்த பின்னர், அவற்றைப் பதிவுசெய்கிருர்கள். பிணியாளிகளைப் பேணுவதற்கும், நோயின் கூறுகளை ஆராய்வதற்கும், மாற்று மருந்துகளின் திறனுய்வதற்கும், தீராத நோய்களை வகைப்படுத்துவதற்கும் ஆற்றல் மிக்க மருத்துவர் பலர் உள்ளனர். இம் மருத்துவர்களின் ஆராய்ச்சிக்குப்

பின்னர், அவர்களிடம் நுழைவுச் சீட்டுகள் பெற்று புனிதத் தலத்திற்கும் புனித நீராட்டு நீர்நிலைகளுக்கும் செல்லும் நலமிழந்தோர், அங்கு நலம் பெற்ருல், அன்னையின் புதுமைகளைத் தெளிவுப் படுத்த வேறு உண்மை சான்றுகள் என்னவேண்டும்?

கூட்டு வழிபாடு நலமிழந்தவர் நலம்பெறுவதற்காக நடத்தப்படுகிற சிறப்பு வழிபாடுகளுக்கும், மன்ருட்டுகளுக்கும், ஆசீர்வாத நிகழ்ச்சி களுக்கும், நலம் குறைந்தவரும், நலம் நிறைந்தவரும் ஒருங்கே கூடி, இறையன்பினுல் ஈர்க்கப்பெற்று ஜெபித்து, மன்ருடி, கீதங்கள்பாடி, பெருவிருப்பமும், உள்ளார்ந்த பக்தியுணர்வும் எய்துகின்றனர். அடித் தளத்தில் மற்ருெரு பேராலயம் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலில் ஏறத்தாழ 30 ஆயிரம் யாத்திரிகர்கள் நிகழ்ச்சிகளில் பங்குபெறும் அளவுக்குப் பெரியதோர் ஆலயம் திகழ்கின்றது.



(கூட்டு வழிபாட்டின் மூலம் தெய்வத்தின் கருணையைப்பெறுவது கிறித்துவ வழிபாட்டின் சிறப்பல்லவா? அந்தச் சிறப்பினை லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறுவதை இப்புகைப்படத்தில் காணலாம்.)

இப்புண்ணியத் திருத்தலத்தில் ஒரு பொருட்காட்சி அமைக்கப் பெற்றுள்ளது. இந்த பொருட் காட்சியில் இன்றியமையாத குறிப்பு களும், புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. திருத்தாய் அளித்தத் திரு தோற்றங்கள் எவ்வித மிருந்தனவோ அப்படியே உருவச்சிலை அமைப்புகளில் அதே தோற்றங்களை இங்கு வடித்து வைத்திருக்கின் றனர். மேலும் புனித 'பெர்னர்தின் நினைவுகளும்' குறிப்புகளாகப் பதிவு செய்யப்பெற்று, காப்பாற்றப் பெறுகின்றன. திருத்தலத்தின் பல பகுதி களில் அமைத்துள்ள சிறப்பான இடங்களையும், இன்னும் நிகழ்ச்சி களையும் புகைப்படங்களாக எடுத்து திருத்தலத்தின் வரலாற்று வளர்ச்சி பற்றிய உண்மைகளை மக்களுக்குப் புகைப்படம்மூலம் தெளிவாக காண் பிக்கப்படுகிறது. திருத்தலத் தொடர்புடைய நகர்ப்புறங்களுக்கு, அதாவது 'புனித பெர்னர்து' அவர்தம் தந்தையுடன் வாழ்ந்த இடம், கல்வி கற்ற இடம், அவர்கள் மேய்த்த ஆடுகளின் ஆட்டுக்கொட்டில், பண்ணை நிலம் ஆகியவற்றை திருத்தலப் பயணிகள் பார்த்துப் பக்தியில் மிகுவது இயற்கை. பெரு விருப்புடன் பார்த்து மகிழ உதவிகள் செய் யப்படுகின்றன.

என்னால் கூடிய அளவு லூர்து அன்னையின் புண்ணியத் திருத் தலங்களைப் பற்றி யாத்திரிகர்கள் அறிந்து அனுபவிக்க தகு சிறப்புச் செய்திகளை மூலிகைமணி வாசகர்கட்கு சமர்ப்பிக்கிறேன். இக்கட்டுரை மூலம், எண்ணத்தால் ஐக்கியப்பட்ட வாசகர்களையும், அவ்வாய்ப் பளித்த மூலிகை மணி நிர்வாகத்தினரையும் அந்த ஜீவ அமுதத் தெய் வத்தாய் லூர்து அன்னை, வாழ்த்தி அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பெற கருணை செய்வாளாக!

சென்ற இதழ் தொடர்ச்சி

சித்தர்கள் அருளிய சிடுகா மருந்து

க. வே.

காது மந்தம் நீங்க!..

வெள்ளைப்பூண்டை இடித்து பஞ்சுபோல் செய்து மெல்லிய துணியில் முடிச்சு போட்டு தீ அனலில் காட்டி பிழிந்து அந்தத் தைலத்தை 3, 4 துளிகள் காதில் விட்டுவர காது மந்தம் வலிகள் யாவும் குணமாகும்.

பல் நோய்க்குத் தேய்க்க மருந்து

(1) சுக்கு, கடுக்காய், நாயுருவி வேர்ப்பட்டை இவை களைச் சமமாககூட்டி வருத்து இடித்துப் பொடிசெய்து வைத்துக் கொண்டு பல் தேய்த்துவர பல் அசைவு நீங்கி, உறுதி உண்டாகும்.

(2) இந்துப்பு, மாவு சுக்கு இரண்டையும் சரி எடை எடுத்து இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு பல் தேய்த்துவர பல் நோய்கள் குணமாகும்.

மதுமேகம் கட்டுப்பட...

சீந்தில் சமூலச் சூரணம் ½ ஸ்பூன்
முந்திரிமர வேர்ப்பட்டைச் சூரணம் ½ ஸ்பூன்
மிளகு 6
கொன்றை மரப்பட்டை ½ பிடி

இவற்றை இரு குவளை நீரில் கலந்து காய்ச்சி குடி நீராக்கி வடிகட்டி தினம் காலை 1 வேளை பருகி வர, ஆரம்ப நிலையில் உள்ள மதுமேகம் குணமாகும். உணவில் தினம் சுண்டைக் காய் பொடி சேர்க்கவும்.

இரத்த மூலம் கண்டால்

இரத்த மூலம் காரணமாக மூலம் வெளித்தள்ளும்போது,

கடுக்காய்த்தூள்
ஆலமர வேர்ப்பட்டை

இரண்டையும் இரு குவளை நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி, வெளித்தள்ளும் இரத்த மூலத்தினைக் கழுவி வர, இரத்த மூல அழற்சி குணமாகும். மூலம் சுருங்கும்.

மாமிசம், காரம் அறவே நீக்கவும்.

உடலுறவு வலிமைக்கு

கசகசா	1 ஸ்பூன்
வால்மிளகு	2
பாதாம் பருப்பு	2
முந்திரி	1

எடுத்து அறைத்து 1 குவளை பசும்பாலில் கலந்து காய்ச்சி சிறிது தேன் கலந்து வாரம் 2 அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை பருகி வர, மணமான இளந்தம்பதி முதல், 40 வயதைக் கடக்கும் இளைஞர்கட்கும் உடலுறவில் போதிய நீடித்த இன்பம் பெற உதவும். அதற்காக, அளவுக்கு மீறிய உடலுறவிலும் ஈடுபடல் வேண்டா. அதனால், நரம்புகள் தளர்ச்சி அடைந்துவிடும்!

உடல் காந்தல்போல் வறட்சியுடனிருந்தால்....

(1) தினம் பதநீர் அருந்தி வாருங்கள்.

(2) அல்லது, கரும்புச்சாறு 1 குவளை எடுத்து அதில் திப்பிலி 2, இஞ்சிச்சாறு 1 ஸ்பூன் சேர்த்துப் பருகி வர, உடல் காந்தல், வறட்சி, கைகால் எரிச்சல், ஆசனக் கடுப்பு ஆகியன விலகும்.

மூத்திரத்தடை, மூத்திர எரிச்சல் நீங்க....

சோம்பு ½ ஸ்பூன்

மிளகு 10

வெட்டிவேர் ½ பிடி

இவற்றை இடித்து 1 குவளை நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி அதில் பாலவிட்டுக் கலந்து, 1 ஸ்பூன் வெள்ளரி விதை அரைத்து கலந்து சர்க்கரைக் கூட்டிப் பருகி வர, மேற்குறித்த கோளாறுகள் விலகும்.

முகப்பரு, கொப்புளம் மறைய...

புளியாரைக் கீரையை மைபோல அரைத்து, முகப்பரு, நீர்க்கொப்புளங்கள்மீது பூசிவர அவை மறையும்.

வெண்மேகம் மறைய...

துளசிச் செடியின் வேரினை 1 பிடி எடுத்து அத்துடன் கருஞ்சீரகம் சிறிது சேர்த்து அறைத்து இரவில் வெண்ணிறத் திட்டுகள்மீது தடவி வர, வெண்மேகம் மறையும்.

நஞ்சுக்கடி பட்டவர்கள்

எலி, தேள், பாம்பு, வண்டு போன்றவற்றின் நஞ்சுக்கடி பட்டவர்கள், 1 வாரத்திற்கு சிறுகீரை, மணத்தக்காளி, அகத்திக்கீரை, ஆகிய கீரைகளை சமைத்துண்ணவும். மிளகு, சீரகம், பெருங்காயம், வெங்காயம், பூண்டு ஆகியவற்றைக் கொண்டு தாளிதம் செய்துண்டுவர, அந்த நஞ்சுகளின் வேகம் படிப்படியே முறியும். (தொடரும்)

பூநீர் எடுக்கும் கைபாகச் செய்பாக விபரம்-I

-: நி. மெய்யப்ப சுவாமி :-

பெண்ணினக் கன்னிப்பருவத்தில் மன்மதன் சேஷ்டைகளான காம(ன்) உணர்ச்சியின் செயலற்று இருந்த வாமம் என்று கூறப்படும் நாதத்துள் விளைவாகி வளர்ந்து வளர்ந்து வரும் விந்து எனும் சிவம் நாதக்கலையை மிஞ்சும்போது நாதமாகிய மன்மதனே இடியெனும் பஞ்ச மலர்க்கணைகளென்ற உணர்ச்சியாக வீழ (சேர) சிவன் நெற்றிக்கண்ணு கிய குண்டலிசத்தியின் உள்ளுருப்பு வழிதிறக்க (விந்து தனித்துப் பிரகாஸிக்க) வாமமாகிய மன்மதன் செந்தீ (செந்நீர்) யாக எரிகிறுன் (வெளியேறுகிறுன்) இக்கருத்தே மன்மதன் சிவன் நெற்றிக்கண்ணுல் எரிந்தானென்பது. தவிர புராணநூல்களில், ரதிசிவனிடத்தில் மன் மதனை எழுப்பித் தருமாறு வேண்ட சிவன், ரதியிடம் பெண்ணே உன் கண்களுக்கு மன்மதன் ரூபமாகவும், மற்றவர் கண்களுக்கு அருபமாக வும் இருக்க வரமளித்து மதனை உயிர்ப்பித்து எழுப்பித் தந்துள்ளார் எனப் புராணநூல்கள் கூறுகிறது. மதன் எரியுமுன்பு வாமமாகிய நாதம் தனித்த வஸ்த்துவாக ஓரிடத்தில் செயலற்று இருந்தது. மதனு கிய வாமம் விந்துவாகிய சிவத்தால் அழிந்து வெளியேறியவுடன் அருப மென்ற உணர்ச்சி அணுவாக சரீரமெங்கும் வியாபித்து உயிராகி தன் காமசேஷ்டைகளை செய்யமுடிந்தது. எனவே நகாரமே குண்டலிசத்தி யின் உள்ளுருப்புத் திறப்பு நெற்றிக்கண்ணுகும். நிற்க......... பூநீர் எடுக்கும் கைபாகச்செய்பாக விபரம் காண்போம். சிவந்த நிறமுள்ளப் பூப்படையாத, பூப்படையும் பருவம் உள்ள பெண்ணுகவும், அப்பெண் ணின் உடலில் நோய், அங்கஹீனம், தடித்த உடல், பெருத்தஉதடு, குட்டைக் கழுத்து, பறட்டை, பம்பைமுடி, மாறுகண், நாவில் மச்சம். உடலில் புலால், வேம்பு, கற்ருழைவாடை கைகால்களில் உரோமங் கள், கால்களில் சுண்டுவிரல் தூக்கிநிற்றல் ஆக இக்குறிகள் இல்லாத பெண்ணுகப்பார்த்து தக்க ஆடையாபரணங்கள் தரிக்கச்செய்து நல்லச் சத்துள்ள உணவுடன், பசுவெண்ணை, பழங்கள், பால் சேர்த்து ஆகார மாகக் கொடுத்து வாரமிருமுறை பச்சிலைச்சாறு கலந்து எரித்தத் தைலத்தால் ஸ்நானம் செய்வித்தலும், சுகந்தப்புஷ்பஞ்சூட்டி, நல்ல விதமானப் படுக்கையுடன், மனசந்தோஷத்துடன் வளர்த்துவரவும். இவ்விதமானப் பெண்ணை நமது சகோதரியாகவோ, நமது மகள் அன்றி

தெய்வமெனவே பாவித்து வளர்த்துவர வேண்டும். அப்பெண்ணிடம் நாம் கெட்ட எண்ணங்கள்கொண்டு நடப்போமானுல்……… அகஸ்த்தியர் வாத சௌமியம் 1200-ல் 420-வது பாடல் கடைசிவரியில்………
………திருத்தியந்த மாதரசை பூஜைபண்ணிச்
செம்மையுடன் மாதாவாய் மகவாயெண்ணே.………
421………எண்ணவேப் புலத்தியமகாரி ஷியேஜயா.
இன்பரஸந்தான் கொடுத்த மாதர்தன்னை
தண்மையுடன் மோகமதாய்ச் சரஸஞ்செய்தால்
தான்நினைத்தக் காரியங்கள் தவறுண்டேபோகும்
உண்மையென்ற மந்திரங்க ளுதவாதப்பா.
……………… உடலதிலேச் செந்தீயு முடனேபற்றும்
வண்மையென்ற கூற்றுவனு முயிரையுண்பான்
மார்க்கமுடன் மனதறிந்து மனதைக்காரே……என்கிருர்…

இவ்விதமாகச் சகலச்சித்து நூல்களுங் கூறுகின்றன. அகஸ்த்தியர் பூரணச் சந்திரோதய வாலை 200-ல் 12-வது பாடலில் ஜாதிசேர்மான விபரம் எனுந்தலைப்பில் 11 பாடல் கடைசிவரியில் ………

11……தேருவது யிம்மாதை ரவிபடாமல்
செப்பில்வைத்துத் திரவியம்போல் வளர்த்திடாயே.………
12……வளர்த்திடுவாய வட்க்குகந்த யுணவையூட்டி
வாரமொன்றில் மூன்றுவிசை யெண்ணைமூழ்கி
இளம்பிறைதான் வளர்வதுபோல் வளரச்செய்து
இருதனமும் புளகாங்கிதம் கொள்ளவேதான்
நிழல்தனிலே யிருத்திவைத்துக் கதம்பம்பூசி
நித்திரைதான் மெத்தையின்மேல் துயிலச்சொல்லு
பழம்ந்தனிலேக் கதலியுட்ப் பழத்தினூடே
பசுவின்வெண்ணைச் சேர்த்தூட்டிப் பருவம்பாரே……

தவிர மச்சமுனி பெருநூல்காவியம் 800-ல் ரஸவாத லெக்ஷணக் குறிப்பு 100 ல் 20-வது பாடல் 3-வது வரியிலிருந்து………

……20 செறிவித்த அங்கமடை யாளத்தோடு
தேன்மொழியைக் கொண்டுவந்துக் குருவைப்போல
குறிவைத்தச் சமாதியா சனங்கள்பண்ணிக்
குமரிக்குக் குங்குமங் கதம்பம்பூசே.
……21 பூசிமுத்தார மிட்டுத் தினம்நீராட்டிப்
போஜனமுஞ் சௌக்கியமாய்ப் பண்ணியப்பா
வாசிபெற நறுநெய்யால் முக்கூட்டெண்ணை
வார்த்து முழுக்காட்டலாம் மடந்தையருக்கு……என்கிருர்

இவ்விதம் நல்ல சம்ரக்ஷணையுடன் வளர்த்துவரும் நாளில், பூப்படைந்த அன்றுமுதல்(அமாவாசை)ஆகாரம் கொடுக்கவேண்டிய விதிகளாவன, மச்சமுனிக்கருமான முப்பு 20- 4-வது பாடல் முதல்.........

4........ வயணமென்ன நாதமது வாங்கவென்றால்
வசிகரமாம் வாலையதுப் பூத்தக்காலை
நயணமென்ன அன்றுதொட்டேழ் நாள்வரைக்கும்
நலமாக உப்பதுதான் தள்ளச்சொல்லு.
பயணமென்னப் பச்சரிசிச் சிறுபருப்பும்
பதார்த்தமுடன் கிச்சடிசோறு பாகஞ்செய்து
வயணமென்னக் கண்டதி லேப்பாதியாக
வெண்பசுவின் வெண்ணை யிட்டுட்டுண்ணச்சொல்லே.

5........ உண்ணவேயிப் படியேழுநாள் செய்தால்
உற்பனமாம் நாதமங்கேப் பெருகிஆளும்
வண்ணமென்ன வெண்பீங்கான் தன்னில்வாங்கு
வரிசையது போதுமென்றால் வணங்கூட்டி
அன்னவடி சாதமிட்டால் நாதம்நிற்கும்
ஓகோகோ வாங்கினதோர் நாதந்தன்னில்

என்கிறார். இவ்வாறாகச் சகலசித்து நூல்களிலும் முப்பு எனும் கல்பம் முடிக்க பூநீரெனும் சுரோணித வஸ்த்துவாகியச் சத்திசாரமே திறவு கோலாக முதன் முதலில் முடித்துக் கொண்டார்களென்பதற்கு சித்தர் நூல்களே சான்று. கோரக்கர் நமநாஸத் திறவுகோல் 100ல், 18-ன் சித்தர்களிடமும் இறுதி முடிவுநிலை எழுதி வாங்கியுள்ளப் பாடல்களின் கருத்து மிவ்வாறேயுள்ளது. மச்சமுனி முன்கூறிய 100ல் 12வது பாடலில்,

துறவுள்ளோர் திருமூலர் தொண்டுசெய்து
துதிபெற்றார் கெதிபெற்றார் துணையும்பெற்றார்
அறமுள்ளோர் பெண்ணானும் வளர்த்துப்பெற்றார்
அம்பலத்தில் திருநடன மாடப்பெற்றார்
திறவுகோல் வாதமடைப் பூட்டையெல்லாம்
திறக்கயிவள் செங்கமலக் கரமும்பெற்றாள்
மறவுள்ளோர் நான்மறைகள் கடக்கப்பெற்றார்
மயிலாரை நாடிவந்து மதிபெற்றாரே என்கிறார்.

நிற்க பூப்படைந்த நாளன்று தலைமுழுக்காட்டி, ஆடையாபரண மலங்கரிக்கச் செய்து, தலைமுடிப் பின்னலிட்டு மல்லிகை ரோஜா, மருக் கொழுந்து வகையரு புஷ்பங்கள் நிறைய வைத்து, குங்குமத்திலகமிட்டு, சுத்தமான சந்தனம், பச்சைக் கற்பூரம், குங்குமபூ, கோரோஜனை, புனுகு, சாம்பிருணி தைலம் கூட்டி நன்றாயரைத்து உடலெங்கும் இலேசாக தடவி மிருதுவானப் படுக்கையிலிருக்கச் செய்யவும். பூப்படைந்த அந்த வினாடி முதல் உப்புப் புளி நீக்கவும். அன்று முதல் பச்சரிசி, பச்சை பயருப்பு சேர்த்து உப்பு நீக்கிப் பொங்கல் செய்து, பொங்கல் சாப்பிடும் அளவில் பாதி சுத்தமானப் பசுவின் வெண்ணைச் சேர்த்தும், பாகற்காய், பூசணி, சுரை, இவை நீங்கலாமற்ற காய்கள் கீரைகள் கூட்டி பதார்த்தமாகச் செய்து (உப்பு நீக்கி) ஆகாரமாகக் கொடுக்

கவும். காரம், புளி, தயிர் மோர், திராக்ஷை போன்ற புளிப்பு பழங்கள் ஆகாது. மற்ற நேரங்களில், ஆப்பிள், பூவன் வாழைப்பழம், பேயன் பழம் அல்வா, கேசரி, லாடு போன்ற இனிப்புப் பண்டங்களும் வெற்றிலை நல்லவாசனைப் பாக்குச் சுண்ணும்புடன் தாம்பூலமும் சேர்த்துக்கொள்ளலாம்.

தவிர நற்சீரகம் (கல்மண் நீக்கியது) வில்வவிதை தோல்நீக்கிய பருப்பு, ஜாதிக்காய், பூவன் வாழைப்பழம், பனங்கற்கண்டு இவ்வைந்தையும் சமனிடையாக நிறுத்துக் கல்வத்திலிட்டு மெழுகுபதமாயறைத்து, இதில் சுண்டைக் காயளவு எடுத்து முன்சுத்திச் செய்து வைக்கப்பட்டுள்ளப் பஞ்சப்பூதக் குட நீரில் 5 துளிவிட்டுப் பிசைந்துக் காலை மாலையாக இருவேளையும் 7 நாளுங் கொடுக்கவும். இத்துடன் சுத்தமான பசும்பாலைக் காய்ச்சி குங்குமப்பூ ஒரு குண்டுமணி நிறை கரைத்துக் கற்கண்டு கூட்டிச் சாப்பிடக் கொடுக்கவும். இவ்விதம் ஆகாரம் அலங்காரம் 7 நாள் தவராது செய்துவந்து 7ம் நாள் இதில் நாள் கணக்குச் சரிவராது ஆகவே ருதுவான நாழிகை அல்லது மணி நிமிடம் ஆதியாகக்கொண்டு (ஒரு நாளுக்கு 60 நாழிகை அல்லது 24 மணி என) 6ம் நாளை நிக்ஷயம் செய்துகொள்வது மிகமிகமுக்கியம் நிற்க முன்கூறிய மெழுகின்சரக்குகளை இரண்டு விதமாகப் பிரித்தும் கலைகள் மாறுந் தன்மைக் கேற்பக் கூறியுள்ளார்கள் இச்சரக்குள் ஒன்றுகூட்டியே கொடுக்கலாம் அகஸ்தியர் பூரண சந்திரோதயவாலை 200ல் 12வது பாடலில்,

பழந்தனிலேக் கதலியுடப் பழத்தினேடே

பசுவின்வெண்ணைச் சேர்த்தூட்டிப் பருவம்பாரே என்றும்

13வது பாடலில் ககலிச்சாருடன் ஜாதிக்காய் கலந்துதாக்கே என்றும்

22வது பாடலில் சீரகமுங்கூவிளத்தின் விரையுஞ் சேர்த்து

தின்றுவாயென்று சொல்லி நாதம்வாங்கே என்கிருர்.

நிற்க அகஸ்த்தியர் பாடிய பூரணச் சந்திரோதயவாலை 200 பாடலுக்கு விபரம் அகஸ்த்தியர் பாடிய இந்திரஜாலம் 1200ன் விளக்கமாகும். பூரண சந்திரோதயவாலை 200ல் காப்பு பாடலில் ஆச்சர்யமாயிரத்திரு நூருய்ந்து, என்கிருர் அகஸ்தியர் பாடிய 1200க்கு விபரமும், மச்சமுனி 800க்கு விபரம் மச்சமுனி கருமானமுப்பு 20ல் காப்பு பாடலில்

தந்தையெனும் ஐங்கரனைத் தொழுதிந்திர
ஜாலமெனுமாயிரத் திருநூறு காப்பில்
விந்தையெனுங் கருமான மறைப்பையெல்லாம்
வளமான மச்சனெனுமுனிவன் சொல்ல என்கிருர்.

மச்சமுனி 800ல் ரவி உப்பை இந்திரியம், என பரிபாஷையாக மறைத்துக் கூறியதை அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500ல்

மருவிலா மச்சமுனி எண்ணூறுக்குள்
மறைத்துவைத்தக் குருமூலிவகையைச் சொன்னேன்

ஆகவே ஒவ்வொன்றின் விபரம் ஒவ்வோர் நூல்களிலமைத்துப் பாடியுள்ளபடியால் இந்த முப்புக் கட்டுரைக்குத் தேவையானச் சித்து நூல்களைச் சான்றுதர வேண்டியுள்ளது. (தொடரும்)


ஹானிமானின் புத்தக மருந்துப்பெட்டி

-: மூலிகை மன்னர் :-

இக்கட்டுரை, மூலிகை மன்னர் ஆசிரியர் **கண்ணப்பரால்** 1957-இல் எழுதப்பெற்றதாகும். ஆரம்ப காலத்தில் ஓமியோபதி மருத்துவ முறையை முறையாகப் பயின்று மருத்துவம் செய்ததுடன், வடாற்காடு மாவட்டத்தில், 'ஓமியோபதி சங்கம்' அமைத்து, மாதம் 1 நாள், அமாவாசை அன்று, 'ஓமியோபதி மருத்துவ முறை' பற்றிய கருத்தரங்கினை நடத்தி வருவார். அந்தக் காலத்திலேயே கருத்தரங்குகளை நடத்தி, பல்வேறு மருத்துவ அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் பரந்த ஆராய்ச்சி அறிவினைத் தான்கொண்டிருந்ததுமட்டுமின்றி, மற்றவர்களையும் ஈடுபடுத்தினர். (அவர் கற்றுக் கொடுத்த அந்த வழியில்தான் யான் இன்று 'சித்த மருத்துவ ஆய்வுக் கழகம்' அமைத்து, பல்வேறு சித்த மருத்துவ அறிஞர் களின் ஆய்வுரைகளைப் பரப்பி வருகிறேன்) ஓமியோபதி மருத்துவத் தந்தை **டாக்டர் ஹானிமான்** மீது அளவற்ற பக்தி கொண்டவர், 1957-லேயே ஹானிமான் அவர் களின் 'Handy Corpus' எனும் ஆங்கிலக் கட்டுரையை, மேற்கண்ட தலைப்பில் தனக்கே உரிய எளிய தமிழ் நடை யில் மொழி பெயர்த்து, 'ஓமியோபதி' எனும் மருத்துவ இதழில் வெளியிட்டுள்ளார். ஓமியோபதியையும் சித்த மருத்துவ முறையும், இணைத்து சில சாதனைகளைப் புரிந் துள்ளார். (வெண்மேகம் எனும் சர்மவெளுப்பு நோய்க்கு 'சித்த மருத்துவம் - ஓமியோபதி மருத்துவம்' இணைத்து இரண்டு மருந்துகளை, யான் கண்டுபிடித்து அதன்மூலம் பலருடைய 'வெண்மேக' நோய் குணமாக்கக் காரணம்,

ஆசிரியர் கண்ணப்பர் அளித்த ஊக்கமேயாகும்) இவ்வாறு அவருடைய பல்வேறு மருத்துவ சாதனைகளைப் பற்றி எழுதிக்கொண்டே இருக்கலாம்.

காலமும், காலனும் சேர்ந்த சதியால் இன்று, அவர் நம்மிடையே இல்லையெனினும், அவர் விட்டுச் சென்ற ஆராய்ச்சிக் கருத்துக்கள், நம்மிடையே என்றும் நிலவும் என்பதற்கு, 1957-இல் அவர்கள் எழுதிய இக்கட்டுரை ஒரு சான்ருகும்.



காலனே! சதி செய்து என் தந்தையைப் பறித்துக்கொண்டாய்! ஆனல் தன் மதியால், அவர் அளித்துச் சென்ற இக்கட்டுரையில், நான் —நாங்கள் காணும் எங்கள் ஆருயிர் தந்தையை பறிக்க உன்னல் முடியாதடா பாவி...! -க.வே.

ஹானிமானின் ஓமியோபதி புத்தகக் குறிப்பு

அகொனைட்

இது அதிதீவிரமான உஷ்ண வியாதிகளில் உபயோகப்படும். திடீரென்று ஏற்படும் ஜுரம், அத்துடன் மனக் கவலை, அதிக தாகம், மரண பயம், அமைதியின்மை முதலிய குறிகுணங்களுக்கும், தீவிர ஜலதோஷம், திரேகத்தில் உள்பாகம் ஒரே அனல் போன்று எரிதல், நிறைந்த குதிக்கிற நாடியுடன் சேர்ந்த ஜுரங்கள், வரட்சியான உஷ்ணமும் அத்துடன் தாகமும், உஷ்ண காலங்களில் ஏற்படும் சகிக்க

முடியாத எரிச்சலான பேதி சீதபேதி, முதலானவை குளிர்ந்தநீர் குடிப் பதனுல் அதிகமாகும், அதி உஷ்ணமும் தாகமும் உள்ள காலரா தொல்லைகளுக்கு உபயோகப்படும்.

அல்லியம் சிபா

இது மூக்கிலும் எரிச்சலாகி கண்ணிலும் நீரான ஒழுக்கோடு கூடிய ஜலதோஷங்களுக்கு மிகவும் உபயோகமானது. ஒழுக்கு திறந்த வெளி யில் சமனமாகும். உஷ்ண அறையில் அதிகமாகும். இடைவிடாத தும் மலும், குழகுழப்பான காரமான மூக்கின்நீர் ஒழுகுதல்; தொண்டை, வாய், மூத்திரப்பை, சர்மம், மூக்கு முதலான இடங்களில் எரிச்சல், தட்டம்மையில் முதல் நிலையிலும் முகத்தின் இடது பக்கம் காணும் பாரிச வாய்வுக்கும் உபயோகப்படும்.

ஆண்டிமோனியம் டார்டாரிகம்

இது சுவாச உறுப்புகளின் மீதும், எல்லாவித சளியூறும் சவ்வு களின் மீதும், ஜீரண சம்பந்தமான சிறுகுடல் சர்மம் முதலானவை களில் வேலை செய்கிறது. மார்பு நிறைய கபம் ஆனுல் அதை இருமி வெளிக்கு தள்ள முடியாமை. நுரையீரல் தம்பன வாதம், நுரையீரல் வீக்கம், குமட்டல், வாந்தியான பிறகு தணிதல், அடிக்கடி கெட்ட முட்டை போல நாற்றமுடைய காற்று பிரிதல், வெளுத்த முகமும் உதடுகளும், கலங்கிய குளிர்ந்த வியர்வையுள்ள ஒழுக்கும் உள்ள வர்களுக்கு சர்மரோகம் உள்ளடங்கியவர்களுக்கும் நிமோனியா ஜுரம், பெரியம்மை முதலியவைகளுக்கும், உபயோகப்படும்.

ஆர்செனிக்கம் ஆல்பம்

தாகம், அமைதியின்மை, எரிச்சல், அதிக வீழ்ச்சி, நடுநிசியில் தொந்திரவு அதிகமாகுதல், திரேகத்தின் எல்லாவித கழிவுநீர் (நிணநீர்) களும், (சுரப்பி) சேரும் நீர்களும் உள்ளிப்பூண்டு வாசனை வீசுவது போன்றவைகள், இம் மருந்தின் திறவுகோலான லக்ஷணங்களாகும். நோயாளி அதிக நீர்குடிக்க விரும்புதல், ஆனுல் இரண்டொரு முடக்கு நீர்மட்டும் குடித்தல், வியாதிகள் 'குளிர்ச்சியினுல் அதிகமாகி, உஷ்ணத் தினுல் சாந்தமாகுதல். ஒன்றுவிட்டொரு நாள் வரும் ஜுரங்கள். ரணங்கள், திடீரென்று மாரடைத்தல், கண்டமாலை கட்டிகள் சர்ம ரோகம், சொறி, சிரங்கு, தேமல், அக்கினி ரணம், சிறு கிரந்தி, முகப் பருக்கள் ஆனை சிறங்கு, நமைச்சல் சிறங்கு, கடுவன், கரப்பான், ராஜ பிளவை முதலான வியாதிகளுக்கும் நடுநிசியிலும், படுத்த பிறகும் அதிகமாகும் நாள்பட்ட அல்லது தீவிர சுவாச காசம்- இருதய வியா

திகள், எல்லாவித தீவிர உஷ்ணுதிக்கமுள்ள வியாதிகளுக்கும் அதிக வீழ்ச்சியடைந்து மயக்க நிலையிலுள்ள காலரா கேசுகளும், தட்டம்மை, இருமல், ஜலதோஷம், பெரியம்மை, ரத்தசோகை, சிபிலிஸ் என்ற மேக ரோகம், கல்லீரல் பெருத்துபோகும் வியாதிகள் முதலானவைகளுக்கும் பலன் தரும்.

பெல்லடோனு

குழந்தைகளுக்குக்காணும் எல்லாவிதமான வியாதிகளுக்கும் பொதுவாக உபயோகிக்கலாம். உடம்பு அதிக சூடான நிலையில் உள்ளவர்களுக்கும் உஷ்ண காலங்களில் தோன்றும் வியாதிகளுக்கு, பிதற்றல், விகாரம், நரம்பு இடுப்பு வலி, காக்கை வலி போன்ற இழுப்புகளுக்கு, உஷ்ணமும், உதிர திரட்சியும் உள்ளவர்களுக்கும், திடீரென்று வந்து போகும் நரம்பு சம்பந்தமான வலிகளுக்கும் தொண்டைத் தொந்திரவு, ஒரே வரட்சியும் ஜுரமும், நிறைந்த திடமான வேகமுள்ள நாடியுள்ள நோயாளிகளுக்கு கற்பனை பொருள்களின்மேல் பயம், குழந்தைகளுக்கும் பல் முளைக்கும்போதுவரும் இழுப்பு, நரம்புத் தலைவலி, பொன்னுக்கு விங்கி அல்லது புட்டாலம்மை, மூளை சம்பந்தமான ஜுரம், தட்டம்மையில் இழுப்பு வரும்போது, பெரியம்மையில் ஜுரம் ஆரம்பிக்கும் போது, ரத்த மசூரிகை ஜுரத்திற்கும், மத்தியானம் 3 மணிக்கு பிறகு மறுபடி இரவு நடுநிசி, தூங்கும்போதும் வியாதி அதிகமாகுதல். உஷ்ண அறையிலும், அமைதியிலும், திறந்த வெளியிலும் சம்பந்தப்பட்ட பாகங்களை திருப்புவதின்மூலம் சமனமாகுதல் ஆகியவற்றுக்குப் பயனுகும்.

பிரையோனியா

அதிக வரட்சியும், நீர்சுரப்பி முடியாத நிலையும் இதன் திறவுகோலான லக்ஷணம். அதாவது வாய், உதடுகள், நாக்கு வரட்சி, இருமல் வரட்சி, மார்பில் வரட்சியான உணர்ச்சி. மலம் கஷ்டமாகவும் தீய்ந்துபோனது போல் காணுதல். மலச்சிக்கலுடைய நோயாளி அதிக அமுக்கு வலியை உடைய தலை வலிகள், அசைவுகளினுல் வலி அதிகமாகும் கர்ப்பவதியாக இருப்பதால் சாந்தம். பல்வலி குளிர்ந்த ஜலத்தால் நீங்கும். ஏதாவது உஷ்ணம்பட்டால் அதிகமாகிவிடும். சீதபேதி, ஆஸ்துமா வியாதியால் இப்பிணிக்குப் பிறகு அடிக்கடி உபயோகப்படக் கூடியது. காமாலை, பித்த ஜுரங்கள், வாத ஜுரங்கள், திரும்ப திரும்பவரும் ஜுரம்; பால் கட்டிக்கொண்டு வரும் ஜுரம், ஸ்கார்லட் ஜுரம், இன்புளுயன்ஸா, புளூரசி என்ற ஜுரங்களுக்கும். டைபாயிட் ஜுரத்தின் முதல் நிலையிலும், இருமலோடு கூடிய நிமோனி

யாவின் இரண்டாவது நிலையிலும் உபயோகப்படக் கூடியது. தலை வெடித்துவிடும் போன்ற வலியுடன் கூடிய உள்ளடங்கிப்போன மாத விடாய் நோய்களுக்கும், பொதுவாக எல்லாவித வாய்வு, வாதநோய் களுக்கும் கீல்வாதம் முதலானவைகளுக்கும் உஷ்ணமான வாய்வுகளுக் கும் முக்கியமான மருந்து. மூளை, முள்ளந்தண்டுக்கொடி, மார்பு விலா பக்கங்களில் நீர்கோர்த்துகொள்ளுதல், தாபிதமடைந்து புண்ணுகிவிட்ட நிலையில் உபயோகப்படும். பிரையோனியா கோபம், பயம் காரணங் களிலும், வெய்யில் காலத்தில் குளிர்ந்த நீர் குடிப்பதால் ஏற்படும் தொந்திரவுகள், ஆகார கோளாறுகளில், அதாவது வெய்யில் காலங் களில் பழங்கள், காய்கறிகள் மிதமிஞ்சி சாப்பிடுவதனுல் ஏற்படும் வியாதிகளுக்கும், சர்மரோகம், கழிவுநீர், உள்ளடங்கியதனுல் ஏற்படும் தொந்தரவுகளுக்கும் ஏற்றது.

கல்கேரியா கார்ப்

ரத்த க்ஷீணம், உடலில் தாது உப்புக்கள் குறைவதால், தசைநார் கோளங்கள் ரத்தநாளம், நாடி எலும்பு முதலியவை வளர்ச்சி குன்றி விடுதல் நரிகட்டிகள் உண்டாகக் கூடியவர்கள்; ஓடுவாய்வு கட்டிகள், மிக ஆழ்ந்து வியாபித்தல், மூக்கில் சதை வளருதல், அசையும் முட்டு களில் வாய்வு வலி, மனே, வாக்கு, காலங்களில் பலஹீனம் வரண்ட குளிர் காற்ருல் தொந்திரவு. (வளைந்த கால்களும், தலை உச்சியில் மண்டை ஓடு மூடப்பெருது நாள்பட்டுவிட்டால் மூளைக்கும் குழந்தை களுக்கு உபயோகமுள்ளது) நெற்றியில் வேர்க்கக் கூடிய நோயாளி களுக்கும், கொழுப்பாக விபரிதமாக பெருக்கும் பொத்தை பூசணி மாதிரி) தேகிகளுக்கும் ஒழுங்கீனமான எலும்பு வளர்ச்சி யுடையவர் களுக்கும், கண்டமாலை, எலும்புருக்கி, க்ஷயம்; க்ஷயரோக பேதி, க்ஷய இருமல், பக்கசூலை, டைபாய்டு ஜுரம், முதுகில் கூன்விழுதல் குன்ம வயிற்றுவலி முதலானவைகளுக்கும் பயனுகும்.

காம்போரா

ஜீவநிலை அடங்கிபோதல், மனேதிடம் அதிதீவிரமாக ஒடுங்குதல், குளிர்ந்துபோதல், இழுப்பு, மனம் குழம்புதல், வெளி உடம்பில் குளிரும் உள் உடம்பில் ஒரே எரிச்சலும் உஷ்ணமும், அதிர்ச்சி காயம் முதலி யவைகளால் முகம், உதடு, கண்கள் குளிர்ச்சியடைந்து நீல நிறமாதல் சம்போரோ (Couth) இன்புளுன்ஸா, (தாது மூலிகை, ஜீவ-வகுப்பு மருந்துகளால் உடம்பு கெடுதலடைந்தவர்க்கு முறிப்பு மருந்து) காலரா, உஷ்ணகாலமே, ஜலதோஷம், தூக்கமில்லாமை முதலியவைகளுக்குப் பயனுகும்.

கார்போவிஜிடபல்ஸ்

இதன் முக்கிய லக்ஷணங்கள். ஒவ்வொரு சீதோஷ்ண காலங்களி லும் உடல்நிலை மாறுபாடு அடைந்து கெடுதல். தாது, ரத்தம் முதலிய ஜீவசத்துள்ளவை உடலிலிருந்து வீணுவதாலும் காரசாரமுள்ள மருந்து களை அதிகமாக உட்கொண்டாலும், வியாதிகளில் அவஸ்தைப்பட்டவர் களும், ஏற்படும் பலக்குறைவு, சக்திஇல்லாமை கிழவர்களுக்கு உண்டா கும் ரத்தநாளதிரட்சி, காலராவின் கடைசி நிலையிலும், டைபாயிட் முதலிய வியாதிகளில் பலம் குன்றியவர்களுக்கும் வெளுத்த முகமும் குளிர்ந்த வேர்வை, குளிர்ந்த சுவாசம், இழுப்பு கால், கை உடைய நோயாளிகளுக்கு பிசுபிசு வென்ற குளிர்ச்சியான நெற்றியில் வேர்வை சிரித்த முகமும், நாற்றமுள்ள உடம்போடு கூடின நோயாளிகளுக்கும், நவதுவாரத்தில் ரத்தம் கசிவு ஏற்படுதலுக்கும், வெள்ளைப்பூண்டு வாசனையுள்ள பேதி, மலம் போதலுக்கும், புட்டாலம்மை, கக்குவான், குன்மம், தினக்காய்ச்சல், மஞ்சள்ஜுரம், ஆஸ்துமாவில் பலம் குன்றியவர்களுக்கும், ஜீர்ண கோளாறு உடையவர்களுக்கும், வயதான வர்களுக்கும் காணும் நாள்பட்ட நுரையீரல் சம்பந்த நோய்கள், ராஜ பிளவை கட்டி முதலியவைகளுக்கும் உபயோகப்படும்.

சைனு

உடம்பின் நரம்புமண்டலங்களில் ஏற்படும் அதிக எரிச்சலும் மித மிஞ்சிய உணர்ச்சிகளுக்கும் சிறந்ததாகும். உடம்பிலிருந்து அளவுக்கு மிஞ்சின கழிவு ஏற்படுவதால் உண்டான பலஹீனம், உடம்பில் தாதுக் கள் நீர்கொண்டு வீங்கி (சோகை) இருத்தல், உடம்பின் எல்லா மூட்டு களிலும் எலும்புகளிலும் அடித்துப்போட்டது மாதிரி வலி, அமுக்கிக் கொடுப்பதால் சாந்தம். குறித்த நேரத்தில் வரும் நரம்புவலி, இன்புளு யன்சா ஜுரம்: வெளுத்தமுகத்துடன் குழிவிழுந்த கண்கள், கண்களைச் சுற்றி கறுப்புநிறவளையம், வலியில்லாதபேதி, நீரான மலம். வாரத்திற்கு ஒருமுறை வரும் முறைஜுரம், நாள்பட்ட கல்லீரல்+மண்ணீரல் பெருக் கம். (மலேரியாவில் ஜுரமும் வருவதற்கு முந்தியும், பிந்தியும் ஏற்படும் தாகம்) காமாலை, தாது-ரத்த நஷ்டத்தால் ஏற்படும் சோகை, பாண்டு முதலிய வியாதிகளுக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் இராவேர்வை அஜீர்ண கோளாறுகளுக்கும் உபயோகிக்கவும்.

சீனு

குழந்தைகளின் சிறந்த மருந்து. சிறுகுடல் பெருங்குடல் உபாதை களுக்கும், நாக்குப்பூச்சி உடைய முன்கோபக்கார, எரிச்சல்குணமுள்ள குழந்தைகளுக்கும், பல்லைக்கடித்தல், மண் தின்றுதல், சூனுவயிறு அடிக்

கடி இழுப்புடன் வரும் மயக்கமுள்ள குழந்தைகளுக்கு அதிபசியும், தொடுவதாலும், பார்ப்பதாலும் கோபமடையும் குழந்தைகளுக்கும், அடிக்கடி மூக்கை தேய்த்துக்கொள்ளும் குழந்தைகளுக்கும், திடீரென்று தூக்கத்திலிருந்து எழுந்து சுற்றிவளைத்து பார்த்துவிட்டு இருமுதல், பிறகு விரைத்துக்கொண்டு ஞாபசக்தியில்லாது இழுப்புவருதல். பொய்ப் பசியுடன் பசியில்லாமையும் மாறிவரும் குழந்தைகளுக்கு, குழந்தை ஏதாவது கேட்கும் கொடுத்தால் வீசிஎறியும். தொடுவதாலும், பார்ப்ப தாலும், சாப்பிடுவதாலும் தொந்திரவு அதிகமாகும். வயிற்றின்மேல் படுத்திருந்தாலும், அசைவதாலும், கண்களை தேய்ப்பதாலும் துன்பங் கள் மிகுதியாகுதல்.

பெர்ராம்பாஸ்

சுவாச வழி சம்பந்தப்பட்ட உதிரதிரக்ஷியும் உஷ்ணவியாதிகளுக் கும், சுவாச ஒழுக்கம்; களகளத்த இருமல், ரத்தம் சேர்ந்த சளி வெளி யாகுதல். தீவிர சுவாசக்குழல் வியாதிகள். நுரையீரல் வீக்கத்துடன் ஜுரம்; பலமும், பசியும், உடல் எடையும் குறைந்து, ரத்த க்ஷீணமாகும் குழந்தைகளுக்கு ஏற்றது; தீவிர மூச்சுவிடுவதோடு கூடின ஜுரம். நல்ல சிவப்பான ரத்தம் உடல்துவாரம் எதிலிருந்துவந்தாலும் உபயோ கிக்கக்கூடியது. கர்ப்பிணிகளுக்கு காலை நேரத்தில் காணும் மயக்கம், பசியின்மை முதலியவைகளுக்கும் ஏற்றது.

ஹீப்பர் ஸல்ப்

அசுத்தமான சர்மம் உடையவர்களுக்கும், ஆருத ரணமுடைய தன்மையுடையவர்க்கும், ஊசிகுத்துவது போன்ற உணர்ச்சியுள்ள தொண்டை நோய்க்கும், போர்த்தாவிடில் இருமல் வரக்கூடிய சிடுசிடுப்பான நோயாளிக்கும், சிறு கீரல்கூட ரணமாகும் குணமுடையவர்களுக்கும் உபயோகிக்கலாம். இது ஒரு திடமான ஸோராவின் தடுப்பு மருந்தாகும் புண்களைச் சுற்றி நிறைய பக்குகள் கட்டுதல் போன்ற ரணம், உள்ளங்கை உள்ளங்கால்களில் சதைஒட்டிப் போய் ஓரங்களில் வெடிப்பு ரணங்கள் ஏற்படுவதற்கு நல்லது. தலை மூளையின் ஒருபாகத்தில் மூளை அல்லது ஆணிஅடித்த மாதிரி உணர் வுள்ளவர்களுக்கு, மேகரோக விஷத்தன்மையில் மூக்கு, தொண்டை, பெரும்சுவாசவிதி முதலானவைகளில் ஏற்படும் தொந்திரவுகளுக்கு, வளர்ச்சி குன்றும் குழந்தைகளுக்கு; கல்லீரல் பெருத்த நீடித்த வியாதி கள் ரத்தமூலரோகம், கட்டிகளில் குறைந்த வீரியம், உடைத்துவிடும் உயர்ந்த வீர்யம், உடையாமல் கரைத்துவிடக்கூடிய சக்தியை உடைய ஒருவித கண்வியாதியை உடைய கண்டமாலை கட்டிரோகிகளுக்கு

நுரையிரல் க்ஷயம், நாள்பட்ட பேதிகளுக்கும் உபயோகமுள்ளது. இது பாதரசம், பொட்டாசியம், அயோடட் அதிகம் கொடுத்த கேஸ்களில் தலைமையான முறிவு மருந்தாக உபயோகிக்கக்கூடியதாகும்.

இப்பிகாக்

இதனுடைய தலைமையான லக்ஷணம் எரிச்சல், முக்கியமாக சளி யூரும் சவ்வுகள், அன்னகோசங்கள், இரைப்பை, இருதயம் முதலாவை களில் பசும்புல் கலர் போன்றும், நுரைத்த கள்ளு போன்ற மலம் போதல், ரத்தம் சீதமும் உள்ள மலம் வாய்வு சம்பந்த இருமலும் மூக்கில் ரத்தம் வருதலும், அனேகமாக எல்லா வியாதிகளும் குமட்ட லுடன் வாந்தியிலிருந்து ஆரம்பித்தல். ஊதுகுழல் சப்தம் போன்ற சுவாசத்துடன் கூடின மூச்சு திணருதல். மார்பு நிறைய கபம். இருமு வதால் சமன ஆகாமை. தாகமின்மை; ஆஸ்துமாவுக்கு முதன்மையான மருந்து. எச்சிலுடனும், மூத்திரத்திலும் ரத்தம் கசிதல், கக்குவான், குழந்தைகளுக்கு காணும் சளியானபேதி; அதிக ஆகாரம் காரணமாக குழந்தைகளுக்கு ஏற்படும் இழுப்பு முதலானவைகளுக்கு.

காலிபைக்

வியாதியில் வலிகள் திடீரென்று வந்து திடீரென்று மறையும் தன்மையுடைய வலிகள். விசேஷமாக காலைநேரத்தில் அதிகமாகி, திறந்தவெளியில் சமனமாகும். திரேகமெங்கும் சளியூறும் ஜவ்வுகளில் எரிச்சலான நீர் ஊருவதால் பாதிக்கப்படுதல், ஜலதோஷம், ஆயாசம். உடைக்கும், கிழிக்கும் போன்ற வலிகள் அடிக்கடி இடம்மாறி வருதல். டிப்தீரியா, குறித்தநேரத்தில்வரும் தினத்தலைவலிகளுக்கு வாத சிலேத் துமம் உடைய திரேகங்களுக்கு (Psorie & Syphlitic) மூக்கின் நரம்பில் துவாரம் விழுந்து விசேஷமான சளிவருதல்; வாதரோகமும் சிலேத்தும ரோகங்களும் மாறி மாறி வருதல். குடிகாரர்களுக்கு ஏற்படும் குமட்டல், வாந்தி முதலியனவைகளுக்கும் குடல் ரணங்களுக்கும் உபயோக முள்ளது. கண் எரிச்சல், மேக ரணங்களுக்கும் உபயோகிக்கக்கூடியது.

சென்ற இதழ் தொடர்ச்சி

மலரால் மலரும் உடல்நலம்

— டி. எல். சுப்பிரமணியன் —

சண்பகப் பூ:-

20 கிராம் சண்பகப்பூவை ஒரு மட்கலத்திலிட்டு $\frac{1}{4}$ படி நீர்விட்டு $\frac{1}{8}$ படியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$ முதல் 1 அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை கொடுத்துவர குன்மம், சுரம், ஒக்காளம் இவற்றை நீக்குவதுடன் பிரமேகத்தால் உண்டான பல தொல்லைகளை யும் நீக்கும்.

செம்பரத்தம் பூ:-

இந்தப் பூவில் 5 பூவின் இதழ்களை 200 மில்லி நீரில் விட்டு கசாய மாக்கி சர்க்கரைகூட்டி 2 வேளை 5 நாட்கள் கொடுக்க மேகவெள்ளை இரத்தப் பிரமேகம் முதலியன குணமாகும். இதயம் வலிமைபெறும்.

துத்திப் பூ:-

இந்தப் பூவை ஒருபிடிஎடுத்துப் பசும்பாலில் போட்டுக் காய்ச்சி சர்க்கரை கூட்டி உண்டுவரலாம். அல்லது துவரம்பருப்பு வெந்துவரும் சமயம் துத்திப்பூவை அலம்பி வேகவைத்து உப்பிட்டுக் கடைந்து, தாளித்து உண்ணலாம். இவ்விதம் செய்ய மூலநோய் கட்டுப்படும். தாது கட்டும்.

மாதுளம் பூ:-

உலர்ந்த பூவை இடித்துத் தூள்செய்து வேளைக்கு 10 கிராம் தயிரில்போட்டு கலக்கி தினம் 2 வேளை கொடுத்துவர இரத்தபேதி, சீதபேதி நீங்கி சிறுகுடலுக்கு பலத்தைக் கொடுக்கும். பெண்களின் கருப்பை சுத்தம் அடையும்.

மருதோன்றி பூ:-

உறக்கம்வராமல் தவிப்பவர்கள் இந்த மலரை தலையணைக்குப் பக்கத்தில் வைத்து உறங்கச்செல்ல 5 நிமிடத்தில் நன்ருக உறக்கம் வரும்.

முருங்கைப் பூ:-

ஒருபிடி முருங்கைப்பூவை சுத்தமாக நீர்விட்டு அலம்பி பசும் பாலில் போட்டுக் காய்ச்சி சர்க்கரைகூட்டி இரவு பருகிவர தாது பலப் படும்.

ரோஜாப் பூ:-

இம்மலரை முகர சளி குறையும். மெல்லிய இதழ்களைத் தேனிலோ அல்லது சாதாரணமாகவோ தின்றால் மலச்சிக்கல் குறையும், இதழின் சாற்றைப் பிழிந்து ஓரிரு துளிகள் நாசியில்விட தலைவலி நீங்கும்.

தும்பைப் பூ:-

இம்மலரை கசாயம்வைத்துப் பருகுவதால் காய்ச்சல் நீங்குவதோடு தொண்டைக்கட்டும் இளக்கும். இம்மலரை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வாரம் ஒருமுறை தலைமுழுகிவர ஜலதோஷம் சீதள சம்பந்தப்பட்ட நோய்கள் விலகும்.

தும்பைப் பூவில் 4 பூவுடன் முலைப்பால் இட்டு ஒருமெல்லிய துணியில் தோய்த்து நெற்றியில்வைக்க ஜன்னி ஜுரம் விலகும். (முற்றும்)

சித்தர் இயல்புகள்—சில சிந்தனைகள் :

மாயி மாண்பு

டாக்டர் ந. சஞ்சீவி

கடவுளைக் கண்டாலும் கண்டுவிடலாம்; மனிதர்களின்—சாதாரண மனிதர்களின்—மனக் கருத்தைக்கூட சரியாகக் கண்டுக்கொள்ள முடியாது போலிருக்கிறது! இந்நிலையில் அசாதாரண மனிதர்களின்—சித்தர்களின் மன இயல்பை எவ்வாறு கண்டுகொள்ள இயலும்? எனவே அறிவியல் உலகில் சில அருட்பொருள்களைப் புரட்டிப்புரட்டிப்பார்த்து—இழைத்து இழைத்து எண்ணி—சில கருத்துக்களை படி நிலையில் படைத்து அவைசெப்படிக்கருத்துகளா? அல்லது செம்படிக்கருத்துகளா என்று ஓயாமல் துருவித் துருவி ஆராய வேண்டியுள்ளது. ஆம்! ஓயாமல் ஆய்வதே—ஆய்வில் ஓயாமல் இருப்பதே-அறிவு அலையின் நிலையில்லா நிலை!



அண்மையில் தமிழகப் புலவர் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நாகர்கோவில் சென்றிருந்தேன். அதுபோது கன்னியாகுமரிக்குச் சில நோன்புகளுடன் போய் அங்குள்ள மாயி என்றும் ஜீவன் முக்தர் என்றும் போற்றப்படும் அருளாளரைக் கண்டு கற்க முயன்றேன். அது பற்றிய சில குறிப்புகளைக்கொடுப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

நான் சென்ற நாள் அமாவாசை நளாகவும் மறுநாள் நவராத்திரி தொடக்க நாளாகவும் இருந்தது. வைதிக வழியில் நம்பப்படும் இந்த நாளின் சிறப்பையும் நாளும் நினைந்தே கன்னியாகுமரிக்குச் சென்றேன். அன்று வெள்ளிக் கிழமையாகவும் இருந்தது. பாமர மக்களிடத்தும் அக்கிழமை பற்றியிருக்கும் பக்தி என் உள்ளத்தில் என்னையும் மீறி பாய்ந்துகொண்டிருந்தது! அண்மைக் காலத்தில் தத்துவ ஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகளில் யான் மூழ்கி இருந்தாலும் பழமை பாரத்தினின்றும் மெல்ல மெல்லவே விடுதலை பெறவேண்டியுள்ளது!

மாலை ஆறு மணி இருக்கும்; பொழுது இருட்டிக் கொண்டிருந்தது. பேருந்திலிருந்து இறங்கியதும் கோவிலுக்குள்ளும் நுழையாமல் வலப்

புறமாக மாயி இருக்கும் கடற்கரை குடிசையை நோக்கிக் கால்கள் விரைந்தன. கொஞ்சதூரம் சென்றதும் 'அம்மாவிற்கு ஏதும் வாங்கிக் கொண்டு போகவில்லையே! நாய்களுக்குக் கொடுத்துவிட்டு நமக்கும் கொடுப்பார்களே!' என்று நினைத்தேன். உடனே வந்தவழியே திரும்பி சில அடிகள் தொலைவிலுள்ள ஒரு சிற்றுண்டிக் கடையில் மூன்று வடைகளைமட்டும் வாங்கிக்கொண்டு வெளியேற முற்பட்டேன். கடைப் படிகளுக்கு முன்பு 'பட்டிகள்'—ஆம் நாஞ்சில் நாட்டு நன்மொழியில் நாய்கள் கூட்டமொன்றைக் கண்டேன். உடனே 'ஓகோ! என்ன இத்தனை நாய்கள் இருக்கின்றனவே! மாயி இங்குதான் இருக்கிருர்களோ என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆம்,' யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே' என்ற பழமொழியைப் போல் நாய்கள் முன்னே வர நற்ருய் பின்னே வந்துகொண்டிருந்தார்கள். என் வியப்பு விலகும் முன்னே மாயி கடைக்குள் என் விழிகளில் விழி செலுத்தாமலே ஒரு நோக்காய் உள் நுழைந்தார்கள்.

கடைக்குள்ளிருந்த இளைஞர்கள் புதுநகை பூத்தனர்; காய்த்தனர்; கனிந்தனர். 'காசு கொடுக்கவேண்டும்; பில் பில் (Bill)' என்று ஒருவர் மாயியின் மாய மந்திரக் கையை பிடித்து இழுத்தனர். இன்னெருவர் அன்னையாரின் நீலக்கம்பளிக் குல்லாவை நீக்கிப் பார்த்தார். மற்றெருவர் 'எனக்கு ஆசி சொல்ல வேண்டும்' என்று கூனிக் குறுகி கூசிக் குழைந்து நெளிந்து நடித்தார். எல்லாவற்றையும் கடந்து—எதிலும் கலவாமல் கருமமே கண்ணுக இருந்த கன்னியாகுமரித் தாய் கிடைத்த பூரிகளையும் தோசைகளையும் கையில் வழிய வழிய வாங்கிக்கொண்டே வெளியில் வந்து நாய்களுக்குப் போட்டார். ஒருமுறை போட்டுவிட்டு மறுமுறையும் அதே கடைக்குள் திரும்பினுர். அவர்களைப் பின்பற்றிக் கொண்டிருந்த நான் என் கையிலிருந்த வடைகள் பொட்டலத்தை 'மாயி' என்று சொல்லி கொடுத்தேன். 'யாரது?' என்று கேட்டதுபோல் என்னை உற்று பார்த்துவிட்டு ப்பொட்டலத்தில் இருந்ததைக் கூடவந்த தொண்டர் இராசேந்திரன் கையிலும் நாய்களின் வாயிலுமாக போட்டார் மாயி.

சிலமாதங்கட்கு முன்பு நானும் மனைவியுமாக மாயியை ப்பார்த்தோம். அப்போது அவர்களைச் சுற்றி பட்டிகள்தான் இருந்தனவே தவிர மாடு எதுவும் இல்லை. இந்த முறை ஒரு மாடும் அவர்களுடன் வந்துகொண்டிருந்தது! எனவே நாய்களும் மாடும் மாயி கொடுப்பதை மண்டுவதில் போட்டி போட்டுக்கொண்டன. ஆம், மாயியின் சன்னதியில் புத்த ஜாதகக் கதைகளில் புகலப்படுவது போலப் புல்வாயும், புலிவாயும் ஒன்றுபட்டு இருக்கும் அற்புதக் காட்சியைக் காணும்பேறு இந்தக் கண்களுக்கு எப்போது கிடைக்குமோ?

ஓர் அரைமணி நேரத்தில் நான்கைந்து கடைகளில் ஏறி இறங்கி மாயி உரிமையுடன் மதிப்புடன் உணவுப் பொருள்களை வாங்குவதும் விலங்குயிர்கட்கு வழங்குவதுமாக இருந்தார்கள். கடைகள் சிலவற்றில் தாமே வாழைக்குலைகளிலிருந்து பழங்களைப் பறித்துப் போட்டார்கள். ஓரிரு வெற்றிலைப் பாக்குக் கடைகளில் அதன் உரிமையாளர்களே மாயியைக் கண்டதும் புகையிலைகளைக் கை நிறைய எடுத்துக்கொடுத்தார்கள். அதைமட்டும் அவ்வப்போது மாயி பத்திரமாக வாங்கி உடன் வந்த இராசேந்திரனிடம் கொடுத்து வந்தார்கள். இந்த 'வசூல் பயண'த்தில் ஒரு கடையில் ஒரு பையன் பூரிகளை மாயி கையில் கொடுப்பதுபோல் நான்கைந்து முறை பாசாங்கு செய்ததை மாயி மிகச் சாதாரணமாக எடுத்துக்கொண்டது எனக்கு அச்சம் கலந்த வியப்பைத் தந்தது, வியப்பும் பழகிப்போனுல் விளையாட்டு ஆகிவிடுமோ ?

இறுதியாக மாயி ஒரு சின்னஞ்சிறு பலகாரக் கடையில் போய் உட்கார்ந்தார்கள். நான், பூரியும் டீயும் எனக்கும் மாயிக்கும் இராசேந்திரனுக்கும் கொடுக்குமாறு கடைக்காரனிடம் சொன்னேன். மாயி தானும் சாப்பிட்டார்கள்; முப்பது வயதான இராசேந்திரனுக்கு வாயிலும் ஊட்டினுர்கள்; எனக்குக் கையிலும் கொடுத்தார்கள் அப்புறம் வருவோர் போவோரைப் பார்த்துக்கொண்டு அவ்வப்போழுது ஏதோ வடநாட்டு மொழிச் சொற்களை முணு முணுத்துக்கொண்டு எவ்வித மெய்ப்பாடுமின்றி மெய்யாகவே உட்கார்ந்திருக்கிருர்கள். நானும் சிந்தனைக் கடலில் மூழ்கினேன் ஆம், இருட்டிவிட்டதால் கன்னியா குமரியிலுள்ள முக்கடலில் மூழ்க முடியாத நிலையில் கருத்துக் கடலில் மூழ்கி உண்மை முத்துகள் ஒன்றிரண்டையேனும் காண—கைப்பற்ற—முயன்றேன். மேலும் மாயி கடலின் அருகில் இருக்கும்போது மற்ற மாயக் கடல் எதற்கு ?

மாயியின் மர்மம் என்ன ? குறைந்தது எண்பது வயது ஆகியிருக்கக் கூடிய—இதை முகத் தோற்றத்தாலேயே காட்டக் கூடிய இந்த அருளாளர் அம்மையார் ஏன் இப்படி இருக்கிருர்கள் ? இவர்கள் பிறந்து வளர்ந்த ஊரோடு இவர்களுக்குத் தொடர்பு அற்றுப்போனது ஏன் ? தொடர்புகளைத் துண்டித்த நிலையில் இவர்கள் தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் இரண்டு மூன்று இடங்களில் முப்பது நாற்பது ஆண்டுகட்கு முன்பே இருந்ததாகச் சொல்கிருர்களே ! உண்மையா ? இவர்கள் வாழ்வின் நோக்கும் போக்கும் இரகசியங்களும் யாவை ? இவர் தம் போக்குகளைக்கொண்டு இவர் தம் நோக்கை நோக்க முடியுமா ? இளமை முதல்—பதினெட்டு வயது முதல் இவ்வகையில் தீவிரமாக யான் கண்டும் கேட்டும் உணர்ந்திருக்கும் செய்திகள் ஒன்றன்பின் ஒன்ருக 'நான் பயன்படட்டுமா? நான் பயன்படட்டுமா ?' என்று

என்னைப் பார்த்து நகைத்துக்கொண்டே நல்வரவு தந்தன. முப்பத்தைந்து ஆண்டுகளாக முற்றிவரும் அறிவுக் கருவிகொண்டு அற்புதங்களை அளக்க முடியுமா? நாழிகொண்டு ஆழியை அளக்க முடியாது. ஆனால் நம் தலையைமட்டும் கூடவா நனைக்க முடியாது?

எனக்கு விளங்குவது எல்லாம். ஆன்மீக சோதனைகள் செய்கிறவர்கள்—அதற்காகச் சாதனைகள் செய்கிறவர்கள் முதலில் முனைவநெல்லாம் உடலையும் பொருளையும் உலகையும் புகழையும் வெறுத்து ஒதுக்குவதுதான். இதனால்—பலவற்றை ஒதுக்குவதால்—ஒன்றை மட்டும் உறுதியாகக் காண முடியும். இது சாதாரணர் வாழ்க்கையிலும் நமக்கு அனுபவம்தானே! எட்ட உள்ள ஒரு பொருளைக் காண நினைத்தாலோ - ஏன் இதயத்தின் துடிப்பை கேட்க நினைத்தாலோ—நாம் கேட்க காண விழையும் பொருட்களை தவிர மற்ற பொருள்களை எல்லாம் கவனிக்காமல் புறக்கணித்தலே ஒரே வழியாகின்றது அன்றோ? இந்த அடிப்படையைப் பின்பற்றித்தான் ஆத்ம சோதனைகள் செய்கிறவர்கள் அனைவரும் கூடியமட்டும் கும்பல் சேராமல்—குப்பைகள் சேராமல் ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள் போலும்!

ஆயினும் ஒன்றிரண்டை மட்டும் பற்றிகொண்டிருப்பதற்கு என்ன காரணம்? வேறுபாடற்ற நிலையை காணவும் காட்டவும் பார்க்கவும் விலங்குகளிடமும் பேரன்பு செய்கிறார்களோ? தனக்குத் தொண்டு செய்யும் தொண்டரிடமும் தனியன்பு காட்டுகிறார்களோ? கட்டை போல் நிட்டையில் கிடக்கும் ஞானிகளைப் பற்றியும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கும் இரமணர்—ஞானநந்தர்—கசவணம் பட்டி சுவாமிகள்—ஒட்டன் சத்திரத்துப் பெரியவர்—பூண்டிமகான்—புரவிப்பாளையம் மாயி போன்றவர்கட்கும் இடையே எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கக் காரணம் யாது? வேறுபட்ட மணிகளைக் கோக்கும் பொற்சரடு போல் ஓர் ஒருமைப்பாடு. ஒளிர்வதும் உண்மையன்றோ!

வேறுபாடுகட்குக் காரணம் அவர்கட்கு இடையே காணப்படும் உடல் வேறுபாடுகள் போலவே ஊழ்வினை காரணமான உணர்வுநிலை வேறுபாடுகள் என்றே சொல்லாமோ?

அந்தச் சிறிய சிற்றுண்டிக் கடையில் அமர்ந்திருந்த என்னிடம் சிந்தனை அலைகள் அமாவாசை அலைகளைப் போல் சீறி எழுந்தன. அவற்றைத் தடைப்படுத்துவது போல் ஒரு குடும்பக் கூட்டம் உள்ளே நுழைந்தது. ஓரிரு ஆண்கள்—பற்பல பெண்கள். அந்தக் குடும்பக் கூட்டம் மாயியிடம் அடிக்கடி வரும் அன்புக் கூட்டம் போலும். சிவகாசியைச் சேர்ந்த ஒரு நாடார் குடும்பம் என்று பின்னர் அறிந்து

கொண்டேன். அந்தக் குடும்பத்தைச் சார்ந்த ஓர் இளம் பெண் மாயியைக் கண்டதும் தன் பாட்டியைப் பார்ப்பதுபோல் தனி மகிழ்ச்சி கொண்டு 'அம்மா, அம்மா இதோ மாயி இங்கே இருக்கிருர்கள்' என்று அதிசயித்து ஆனந்தித்தது. அந்தக் குழந்தை சொல்லிய பின்புதான் குடும்பத்தைச் சார்ந்த மற்றவர்களும் மாயி இருப்பதை உற்றுக் கவனித்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் முகமும் உவகைத் தாமரைகளாய் மலர்ந்தன. அதிலிருந்து அந்தக் குடும்பம் மாயியிடம் நெருங்கிய் நேயம் கொண்டது என்பதும், அந்த நேயத்தில் இன்பப் பயன் கண்டது என்பதையும் உணரலானேன்,



முதல் முதலாக மாயியை அடையாளம் கண்டுகொண்ட அந்தப் பெண் குழந்தை முதலில் மாயியைப் பார்த்ததும் உரிமையோடும் உறவோடும் உவகையோடும் 'மாயி' என்று மகிழ்ச்சியோடும், மலர்ச்சியோடும் வாயுரைத்தது. குழந்தையின் மழலை மொழியை எதிரொலிப்பதுபோல் மாயிதாயும் எவ்வித மரபரப்பும் பதட்டமும் இல்லாமல் 'மாயி' என்று குழந்தை சொல்லியதையே எதிரொலி போலத் திரும்பச் சொன்ஞர்கள். இதுவே எனக்கு அதிசயமாகவும் அறிவாகவும் இருந்து. அந்த நிலை "தனக்கென ஏதும் இல்லை தன்னிடம் இருப்பதெல்லாம் வெறும் எதிரொலியே" என்னும் தத்துவத்தின் விளக்கமோ.

மாயி தன்னை அவ்வாறே எதிரொலி செய்வது ? மாயியிடம் குழந்தை தனி யன்பு காட்டியது. அக்குழந்தையின் தாயோ பாதி மாயி போல (!) பரபரப்பின்றி—குமரிக் கடலில் எட்டியிருந்து கதிரவன் தோற்றத்தையும் மறைவையும் காணும் எழில் கலைஞரைப் போல் சுவரில் சாய்ந்து கொண்டார்கள். மாயி மதிமுகத்தைக் கண்டு மலர்ச்சி பெறும் குமுதம் போல் குளிர்ந்திருந்தார்கள். அந்தப் பெண் குழந்தையோ வைத்த கண் வாங்காமல் மாயியின் முகத்தை முகந்துகொண்டிருந்தது. தன் அன்னையின் இசைவை விநாடியில் பெற்று அவர்கள் வைத்திருந்த லட்டு போன்ற மூன்று உருண்டைகளை எடுந்து மாயியிடம் ஆர்வத் தோடு நீட்டியது.

'ஊகூம்' என்று ஒரு விநாடி இசையாமையை வெளிப்படுத்திய மாயி மறுவிநாடியே கை நீட்டி குழந்தையிடம் அந்த மூன்று உருண்டை களை மீண்டும் கேட்டார்கள். அந்தக் குழந்தைக்கு அளவில்லாத மகிழ்ச்சி; அதைக் கண்டு அனைவருக்குமே பெரு மகிழ்ச்சி. மாயியோ எந்திரம் போல் அந்த மூன்று உருண்டையினையும் வாங்கி தன் உடன் வந்த தொண்டர் இராசேந்திரனின் ஒரு சிவப்புத் துணியில் முடிந்து வைத்திருந்த முடிச்சுக்குள் நுழைக்க முனைந்தார்கள்—முயன்றார்கள். அதை அவர்கள் செய்யச் சிரமப்படுவதை பார்த்து நானே முன்வந்து அந்தப் பொதிக்குள் அந்தப் பொருள்களை பொதிந்தேன். நான்தான் நட்புக்கு நாரளவு இடம் நாடி அலைந்தேனே! மாயி எதையும்—எவரை யும் கண்டுகொள்ளாமல் நவராத்திரி பொம்மை போல் உட்கார்ந்திருந் தார்கள்! எனக்கோ நான் செய்த அந்தச் சிறு வேலையை அவர்கள் அனுமதித்ததே பெரிய புண்ணியமாகத் தோன்றியது. மாயி முதலில் மறுத்த மூன்று லட்டுகளை எதற்காக அப்புறம் கேட்டு வாங்கினார்கள்— ஆம். யாருக்காக? எதற்காக? (தொடரும்)

—படங்கள் உதவி : திரைப்பட நடிகை
திருமதி. எஸ். என். லட்சுமி.

சென்ற இதழ் தொடர்ச்சி



— மூலிகை மன்னர் ஆ. இரா. கண்ணப்பர் R.M.P. —

வாதச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்:- இவைகள் வெண்மை செம்மை நிறத்தையும், ஆசனத்தில் சித்திரங்களான மெல்லிய நூலையும் உள்ளனவாக இருக்கும்.

இவை கடிப்பதால் வாத ரோகக் குணங்கள் நேரிடும்.

பித்த சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்:- இவைகள் கருமையும் பசுமையும் கலந்த நிறத்துடன் வாயில் அனலையும், ஆசனத்தில் தாமரை நூல் போன்ற நூலையும் உள்ளனவாக இருக்கும்.

இவை கடிப்பதால் பித்தபிணிக் குணங்கள் காணும்.

சிலேத்துமச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்:- இவைகள் வெண்மை நிறத்தையும் குடலில் நீலநிறத்தையும், ஆசனத்தில் சிவந்த நூலையும் உள்ளனவாக இருக்கும்.

இவைகள் தீண்டுவதால் சிலேத்தும ரோகக் குணங்கள் தோன்றும்.

தொந்த தோடச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்:- இவைகள் ஆசனத்தில் பற்பல நிறமுடைய நூல்களையுள்ளனவாக இருக்கும். தீண்டினல் தீச்சுடுகைப் போல எரிச்சலையும் முத்தோட குணங்களையும் உண்டாக்கும்.

இவைகளன்றி வேறு ஒன்பது சிலந்திப் பூச்சிகளின் விடம் இவைகள் புணருங் காலத்தில் தெறிக்கின்ற சுக்கிலம் பட்டவிடமெல்லாம் விரைவில் கொப்புளங்களுண்டாகும்,

சிலந்தியின் விஷ பேதம்

சிலந்திப் பூச்சிகளிடமிருந்து உண்டாகும் விடம் எண்வகை. (1) மூச்சு, (2) பல், (3) மலம், (4) மூத்திரம், (5) வாய், (6) சுக்கிலம், (7) வாய்நீர், (8) ஊறு.

1. *மூச்சு;* இதனாலுண்டாகும் விடம் சுரம், தாகம் இவைகளை உண்டாக்கும்.

2. *பல்:* பல்விட விரணம் நிறவேற்றுமையும், கடினமும் நிலைத்த தாயுமிருக்கும், இதனால் உடலில் வீக்கம், எரிச்சல் வேதனை வியர்வை, தாகம் ஆகிய குணங்களுண்டாகும்.

3. *மலம்:* இது பட்டவிடத்தில் இலுப்பைப் பழ நிறமொத்த புண்ணும், அதில் கெட்ட மணமும், எரிச்சலும் தினவும் உண்டாகும்.

4. *மூத்திரம்:* இது பட்டவிடத்தில் உண்டாகும் புண்ணின் நடு பாகம் கறுத்தும் உயர்ந்தும், இதைச் சுற்றிலும் வாடியும் பூப்போல் மலர்ந்து இருக்கும் மேலும் கெட்ட நாற்றமும் எரிச்சலும் இடைவிடா திருக்கும்.

5. *வாய்:* இது பட்டவிடத்தில் முருக்கன் பூப்போன்ற செந்நிற முள்ள புண்ணுண்டாகி அதில் குத்தலும் தினவுமுண்டாகும்.

6. *சுக்கிலம்:* இது பட்டவிடத்தில் கடின கொப்புளங்களும் நோவும் உண்டாகும்.

7. *வாய்நீர்:* இது பட்டவிடத்தில் புங்கின்பூ நிறமுள்ள புண் பிறக்கும். புண்ணின் ஓரத்தில் பூச்சியூறுவது போன்ற உணர்ச்சியும், எரிச்சலும் குத்தலும் காணும்.

8. *ஊறு:* பரிசம் பட்டமாத்திரத்தில் முற்கூறிய குணங்கள் எளிதில் உண்டாகும்.

இப் பூச்சிகள் பூர்வபட்ச திதிகளில் மாலைப் பொழுதிற் கடிக்கும். கடித்த வாயில் பசுமை வெண்மை செம்மை கருமை முதலிய பலவித நிறமாய் இருக்கும். கடிப்பட்டவிடம் மெலிந்து உயர்ந்து தடிக்கும். அத் தடிப்பைச் சுற்றிலும் சிறு சிறு கொப்புளம் கிளம்பும். இக் கொப்புளங்களிலிருந்து வடியும் நீர் பட்டவிடமெல்லாம் கொப்புளிக்கும். சோபை ஆகிய நோய்களில் காணும் துன்பங்களும், சுரக்கும் வியர்வை உண்டாகும்.

சிலந்திப்பூச்சி கடிவேகம்-ஏழு

1-வது நாளில் கடிவாயில் நிறம் தோன்ருமல் அற்ப தினவு உண்டாகும்.

2-வது நாளில் கடிவாயில் இயற்கை நிறத்துடன் தடித்து தினவோடு கூடிய சிறு கடிகள் எழும்பும்.

3-வது நாளில் கடிவாய், அகலைக் கவிழ்த்ததுபோல் தடித்து சிவந்து அங்குள்ள மயிர்கள் சிலிர்ப்பதுடன், மயிர்க் கால்களில் இரத்தம் கம்பிச் சுரமுண்டாகும்.

4-வது நாளில் கடிவாயில் வீக்கம், எரிச்சல் மற்றும் இரைப்பு பிரமை ஆகியவையுமுண்டாகும்.

5-வது நாளில் கடிவாயில் விடத் துர்க்குணம் யாவும் பெருகும்.

6-வது நாளில் கடிவாயின் வர்மங்களில் பரவும்.

7-வது நாளில் உயிர்க்கும் சிலருக்கு கெடுதி வரக்கூடும். அல்லது தொழு நோயாகி மெல்ல மெல்ல உடலை வருத்தும்.

ஆகையால் உடனே தக்க பரிகாரம் செய்தால் கடிவிடம் நீங்கி சுகம் காணும். இப்பூச்சிகளின் விடம் ஏறினுல் கடிவாயில் எழும்புகின்ற புண்களில் சில கொப்புளங்களாகவும், சில வட்டமாகவும், சில வெண்மை நிறமாகவும், சில செம்மை நிறமாகவும், சில பசுமை நிறமாகவும், சில நீல நிறமாகவும், சில மிருதுவாகவும், சில கடினமாகவும் இருக்கும்.

சிலந்திக் கடிக்கு மருந்து

''சிலந்தியோ ரிருபதினில்—அழல்வாய்ச்
சிலந்திக்குச் சுண்ணும்பும் பழம் புளியும்
கலந்தந்தக் கடிவாயில்—தேய்த்திடக்
கடுப்பு மெரிப்புமுடன் விடுத்திடுமே

ஆவிரை தாளிபசலை—காடிவிட்
டவித்திட்டுக் கடிவாயில் குவித்துக்கட்ட
நாவுரை செயவேண்டுமோ—எரிப்பெங்கும்
நாடிடு மோபறந் தோடிடுமே

இருபது வகைக்கு மொன்ரு—மருந்தொன்
றேலவுரைப் பேன் பிராய்வேர் நீலியின் வேர்
சுரபியின் பாலிற்கொடுக்க—முப்பொழுதில்
துறந்திடு உயிர்வந்து சிறந்திடுமே''

(இ-ள்) இருபது வகைப்படும் சிலந்திப் பூச்சிகளில் எது கடித்தாலும் சுண்ணும்பையும், பழைய புளியையும் ஓரளவாய்க் கலந்து கடிவாயில் தேய்த்துவர விடம் நீங்கிப் போகும்.

ஆவாரை இலை, தாளி இலை, பசலைக்கீரை இவைகளைக் காடியிலிட்டு அவித்து கடிவாயிற் கட்டினுலும், பிராய மரத்து வேர், அவுரி வேர் இவ்விரண்டையும் சமமாக எடுத்துக் கொண்டவுடன் பசுவின் பால்விட்டு அரைத்து காலை, மாலை இரண்டு வேளையாக மூன்று நாள் கொடுத்தாலும் மேற்படி சிலந்திக் கடிகளால் உண்டான கடுப்பு, எரிச்சல், நீங்கி அந்நஞ்சால் அடங்கின உயிர் மீண்டும் வரும்.

''உறைந்தன்ருே உடலெல்லாம் புன்னைக்காய்போல்
உண்டைபடக் கட்டியன்ருே உழற்றும் மேனி
விரைந்தேறும் ஒடுவடக்கி புரசுமெட்டி
வேளைச்சாறு சமன்கூட்டித் துவாலையோடு
அருந்திட நீலிஉத்தா மணியு மேனி
அந்திசந்தி நாள்மூன்று தினமருந்த
இருந்தவிட முடலைவிட் டேங்கிப் போமே''

(இ-ள்) முன் செய்யுளில் குறிப்பிட்டபடி சில நாள் வரைக்கும் அடிக்கடி நஞ்சு உடம்பிற்குள் தங்கியிருந்து பிறகு வெளிப்பட்டு உடம்பெல்லாம் புன்னைக்காய் போன்ற உருண்டைகள் கிளம்பி உடம்பை மிகவும் வருத்தப்படுத்தும். இதற்கு குப்பை மேனி, முருக்கு, எட்டி, வேளை இவற்றின் சாறுகளைச் சரியளவு கூட்டிக் கடித்த வாயிற் பூசுவதுடன் உடம்பு முழுமைக்கும் பூசி அவுரி இலை, உத்தாமணி இலை, குப்பைமேனி இலை இவைகளைச் சரியளவு எடுத்து எல்லாவற்றையும் ஒன்ருய்ச் சேர்த்தரைத்து கொட்டைப் பாக்களவாக இரு வேளையும் மூன்று நாள் கொடுக்க உடலிலே தங்கியிருந்த மேற்படி நஞ்சுயிர்களின் கடிவிடம் உடம்பைவிட்டு நீங்கும். (தொடரும்)

திருமகளும், மருமகளும்

மு. பெருமாள்

''வாக்குண்டாம் நல்லமன முண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.'' —ஔவையார்.

''மாமியார் மெச்சிய மருமகளில்லை'' 'மருமகள் மெச்சிய மாமியாரில்லை' என்பது பழமொழி. இதன் பொதுக் கருத்தாவது, மாமியாரும் மருமகளும் மனமொத்து நெருங்கி ஓர் இடத்தில் தங்கியிருக்கமாட்டார்கள் என்பதாகும். இதற்கு ஒருமைப்பாடான உதாரணமாவது, கல்வி நிறைந்த கவிஞர் புலவர்கள் கஷ்டப்பட்டு வறுமையினால் வாடி வருந்துவார்கள். இவர்களுக்கு இலட்சுமி கடாட்சம் இருக்காது. மூட மதியுள்ளோர் முன்னைப் புண்ணியப்பயனால் மேலான செல்வம் கொழிக்க மகிழ்வுடனிருப்பார்கள். கல்வி புலமை ஞானமுள்ளவரிடம் கலைவாணி தேவி தங்கிக் களிநடம் புரிவாள். கல்வியில்லாதவர்களிடம் மகாலட்சுமி களிப்புடன் தங்கிக் கருணைபுரிவாள். இக்காட்சி உலகில் பொதுவாக நாம் காண்கின்ற காட்சியாகும். மருமகளாகிய கலைமகளும், மாமியாராகிய மகாலட்சுமியும் ஒருவரிடம் இணைந்திருப்பது மிகவும் துர்லபமாகும் என்பது உலக அனுபவமாகும்.

இவ்விருவரும் ஒருவரிடம் இணைந்திருக்க அருள்பாலிப்பவர் ஒருவருள்ளார். அவரை நாளும் அன்புருகிக் கண்ணீர்மல்கி நன்மலர்களால் அர்ச்சித்து வழிபட்டால் மாமியாராகிய திருமகளும், மருமகளாகிய கலைமகளும் இணைந்துவந்து தங்கி இன்னருள் புரிந்தருள்வார்கள் என்று அனுபவ ஞானத்தால் கண்டறிந்த ஔவை பெருமாட்டியார் உலக மக்களுக்கு மிக அழகான காவியத்தால் உணர்த்தி வழிகாட்டியுள்ளார்.

சரி யார் அந்த ஒருவர்?

அவர்தான் மூலாதாரமான மூர்த்தியாம் ஓங்கார பிரணவ வடிவினரான விநாயகப்பெருமானாவார். அப்பெருமானை அடைக்கலம் புகுந்து நாளும் நன்மலர்களால் அர்ச்சித்து வழிபட்டு நம்பிக்கையுடன் பணிபவர்க்குத் தும்பிக்கைப் பெருமானான அவர் வாக்கும் வன்மையும் (கல்வியறிவும்) மாமலராள் நோக்கான மகாலட்சுமி கடாட்சமும், இதனால் நல்ல மனமும், நல்ல உடல் ஆரோக்கியமும் அருள்புரிகின்றார். திருமகளையும், கலைமகளையும் தம்மை வழிபடும் அடியார்களிடம்

இணைந்தருள் பாலிக்கச் செய்து விடுகின்றார் இன்னருள் கணேசப் பெருமாள்.

இரட்டைச் சடைமுடி இறைவனுன விநாயகப்பெருமான் எத்துணை எளிமையாக மரத்தடியிலும், முச்சந்திகளிலும் குளக்கரையிலும் எங்கே எழுந்தருளச்செய்தாலும் அங்கே எழுந்தருளி அருள்பாலிக்கும் எளி தான தெய்வமாக விளங்குகின்றாரோ, அதேபோன்ற எளிமையான தமிழ்க்கவிதையில் "வாக்குண்டாம்" என்னும் அருமை பெருமை நிறைந்த பாடலையும் அமைத்து அருளியுள்ளார் அருந்தமிழ்க் கவிஞர் பெருமாட்டியாம் ஔவை மூதாட்டியார்.

முன்னவராம் விநாயகப்பெருமான் வழிபாட்டிலே முதல் வரிசையில் முனைந்து நின்று முக்கரணங்களும் மெய்சிலிர்க்க உருகி வழிபட்டு அருள் பெற்றவர் ஔவை பக்த பெருமாட்டியார். எத்துணை வேதக் கருத்துகளை எளிமைத் தமிழ் வாக்கியங்களில் எழிலாக எடுத்து விளக்கி வழிகாட்டி யுள்ளார்; வாழப்பிறந்த மக்கள் சமுதாயத்துக்கு இத்துடன் நிற்கவில்லை எம்மரு ஔவையார் பக்த மணியம்மையார். "சீதக்களபச் செந்தா மரை" என்று விநாயகர் அகவல் என்னும் வேதவித்தான விளக்கப் பாடல் வகுத்து வழங்கியுள்ளார்.

இந்த விநாயகர் அகவலில் பிரணவ உருவமூர்த்தியின் திருமேனி அமைப்புகளையும், அப்பெருமானை வழிபடும் அடியார்க்கு அவர் அருள் புரியும் திறத்தினையும், முறையாக, மறையாக, நிறையாக அணியணி யாய், அழகழகாய் விளக்கியுள்ள அருமையானத் தத்துவங்கள் பயணம் புரியும் .அடியவர்கள் நெஞ்சை அள்ளி யள்ளி உருக வைத்துள்ளார், அறிவுக்கடலான ஔவை மூதாட்டியார். தமிழக மக்கள் செய்த தவப் பேருயகுமிது. தமிழ் மக்களுக்கு உய்ய வழிகாட்டும் தங்கச் சுரங்க மாகும் விநாயகரகவல்.

மக்கு மன்னர் சாமி

இனி ஔவையார் பெருமாட்டி அருளிய வாக்குண்டாம் என்னும் பாடலை சிறுகதைகள் மூலம் விளக்கம் தந்து வாசகர்களை எளிதில் அறிய வைப்போம் என எண்ணுகின்றேன். காரணம் கவிதைகளின் கருத்து நயங்களைக் கதாபாத்திரங்கள் மூலமாக விளங்கவைத்தால் மக்கள் மன தில் பதியும் என்பதுதான். மேலும் இக்காலத்தில் சிறுகதைகள் என்றால் தான் மக்கள் மனஊக்கத்தோடு படிக்கின்றனர். எனவே கதையாகப் புனைந்து வருகின்றது "வாக்குண்டாம்" என்ற பதம். கவனித்துப் படியுங்கள்.

மருதூரில் மணிவாசகனுர் என்னும் மிகப்பெரிய சிவபக்தர் இருந் தார், சிறந்த செல்வங்களும் நிறைந்தவர். ஆயின் அவருக்கு ஒரே

ஆண்மகன் தான் வாரிசுக்கு என்று பிறந்தான். வேறு சந்ததிகளே பிறக்கவில்லை. மனைவி மாணிக்கவல்லியாகும். பேருக்காவது ஒருபெண் பிறக்கக் கூடாதா என்று எப்போதும் ஏக்கமுற்றுள். எனவே ஒண்ணே ஒண்ணு கண்ணு எனச் சீராட்டிப் பாராட்டி செல்வமகனை வளர்த்தாள்.

தந்தை மணிவாசகனுர், காலங்கடந்த நாளில் திருக்கயிலாய நாதர் தந்தருளிய ஒரே தனையனை தவப்பேருக எண்ணி தணியா ஆசை வைத்து வளர்த்து வரலானுர். சிறந்த சிவபக்தர். திருநாவுக்கரசு நாயனுர் மரபு என்னும் ஆர்வத்தால் தன் குழந்தைக்கு அவர் பெயரான வாகீசன் என்று வைத்து அழைத்து மகிழ்ந்தார்.

அம்மாவின் செல்லம் மிகுந்தாலே குழந்தை மக்காக வளரும். ஒரே பிள்ளையென்பதால் தந்தையும் செல்லம் கொடுத்து பாசத்தால் பாது காத்து வளர்த்தார். ஒருவர் செல்லமிருந்தாலே குழந்தை மக்குத்தனத்தில் உருவாகி வளரும். தாயும் தந்தையும் சேர்ந்த செல்லத்தால் மக்குத்தனம் தடுப்பேறி வளர்ந்தான் குழந்தை.

வயதோடு உடம்பும், மக்குத்தனமும் போட்டியிட்டு வளரலாயின வாகீசனுக்கு. ஐந்து வயதும் அடைந்தான். மணிவாசகனுர் தன் செல்லப்பிள்ளையைத் தன் வாரிசாயிற்றே என்று கருதி தான் செய்யும்

சிவபூஜையில் பழக்க முயன்று தோல்வியடைந்தார். துஷ்டத்தனம் தான் தடித்திருந்தது. வயது வந்தால் வாகீசன் திருந்துவான் என்று மகிழ்ந்திருந்தார்.

செல்வந்தர் செல்லப்பிள்ளை என்பதால் பள்ளிஆசிரியர் வாகீசனைப் பக்குவமாக பயந்தே எழுத்துக்களை எழுதப் படிக்க முற்பட்டார். மூன்று மாதங்களாகியும் முதலெழுத்தான "அ'! என்ற எழுத்தே எழுத வந்தபாடில்லை. அதட்டவோ, அடிக்கவோ அஞ்சினர். வாகீசன் பள்ளிக்கு வந்ததும் வகுப்பில் பலகை புத்தகங்களை வைத்துவிட்டு சொல்லாமலே வெளியில் ஓடி விளையாடுவான். உடன் படிக்கும் பையன்களையும் அழைத்துச்சென்று அடிதடி உதை விளையாட்டு கள்தான் வாகீசன் படிப்பாகும். பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு வருவான் பலகை புத்தகங்களோடு. ஓராண்டும் ஓடியது. தேர்வும் வந்தது. காலமெல்லாம் விளையாட்டில் கழித்தும் கவலைப்படவில்லை பரிக்ஷை தேர்வைப் பற்றி.

கண்ணே வாகீசா; பரிட்சைக்காகக் கவனமாய்ப் படிக்கின்றுயா? என்று கேட்டார் தந்தையார்.

நன்ருகப் படிக்கின்றேன் அப்பா!

தேர்வில் தோல்வியடைந்தான்.

அழுது.கொண்டே வீடு வந்தான்.

என்னடா செல்வமே! யாரடித்தது உன்னை?

ஒருத்தருமில்லையப்பா! எல்லாப் பையன்களும் என்னை மக்கு மன்னர் சாமி என்று கூப்பிடுகின்ருர்களப்பா! அதனுல் வாத்தியார் எனக்கு மார்க் போடாமல் தேர்வில் தோல்வியடையச்செய்துவிட்டா ரப்பா! என்றழுதான்.

அப்படியா! வா போவோம். அந்த வாத்தியாரை ஊரைவிட்டே மாற்றிவிட்டு மறுவேலை பார்க்கின்றேன் என்று கிளம்பினர். வாகீசனும் உடன் சென்ருன்.

சிறிது தூரம் சென்று 'அப்பா வீட்டுக்குப்போவோம் வாருங்கள் நாளைக்குப் போவோம்' என்ருன். 'ஏன்' என்ருர்? வீட்டிற்குவந்து சொல் கிறேன் என்று உடன்வர மறுத்தான். சரி என்று வீட்டிற்கு வந்தார். தாயாரிடம் ஓடிப்போய் பதுங்கிக்கொண்டு உள்ளதை உரைத்து ஓவென்று அழுதான். தாயுள்ளம் தளர்ந்து விட்டது. மகனை மறைத்துக் கொண்டு என்னுங்கோ! இவன் படிக்கவே'இல்லையாம். இதனுல்தான் பரிட்சையில் தோல்வியடைந்தேன் என்று அழுகின்ருன். அவனை அடிக்காதீர்கள், பயந்துவிட்டான். பத்துதலைமுறைக்காகும் பணமும்

சொத்துகளும் தானுள்ளதே நமக்கு. இவன் படித்து ஒன்றும் ஆக வேண்டியதில்லை. நமக்கிருப்பது ஒரே பிள்ளையென்று மறுப்பு கூறினுள் மாதா மாணிக்கவல்லியார்.

போடி பைத்தியமே! பணமிருந்தால் மட்டும் போதுமா? படித்து அறிவு பெற்ருல்தானே வைத்துப் பாதுகாக்க முடியும்! என்று பையனை அடிக்க முயன்ருர்.

அவனை அடித்தால் என் உயிரே போய்விடும்! என்று தடுத்து விட்டாள்.

அப்பா! எனக்கு படிப்பே வராது. படிப்பில் ஊக்கமும் எனக்கில்லை. நான் பள்ளிக்கூடம் போகவேமாட்டேன். வேலையில் அமர்த்துங்கள். தொழில் கற்றுக்கொள்கிறேன்.

அவன் விருப்பப்படியே வேலை செய்ய பழக்கி விடுங்கள், அறிவும் அனுபவமும் அவனுக்கு வந்துவிடும் என்று செல்லப்பிள்ளைக்கு அம்மா சிபார்சு செய்தாள்.

வாகீசனை வாக்கு வன்மையுள்ள தமிழ் வித்துவானுக்க விரும்பி நான் படிக்கவைத்தேன். ஒரே பிள்ளையான உன் தலைவிதி இப்படியா அமைய வேண்டும் என்று தன் தலையில் தட்டிக்கொண்டு வருந்தி வேதனை அடைந்தார். சில நாட்கள் சென்றன. ஆடிக்கெட்டு வம்புச் சண்டைகளில் ஈடுபட்டான் அருமை மகன்.

தனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஜவுளிக்கடையில் வேலைக் கமர்த்தினுர் தன்மகனை, பின்னுல் ஜவுளிவியாபாரமாகிலும் செய்வான் என்று எண்ணி.

ஜவுளி முதலாளி. 'அடே புதுப்பையா! உன் பேரென்னடா?'

'வீட்டில் வைத்த பெயர் வாகீசன்! பள்ளியில் வைத்தபெயர் மக்கு மன்னுர்சாமி!' என்ருன்.

இரண்டு பெயர்களா? உனக்கு! சரி இருக்கட்டும். 'நான் வாங்க வரும் ஜனங்களிடம் நல்ல சரக்காக உள்ளே இருப்பதாக அவர்கள் எதிரில் சொல்வேன். அதோ உள்ளறே அந்த மட்டரகங்களை எடுத்து வந்து கொடுக்கணும். அளக்கும்போது சாமர்த்தியமாக குறைத்து அளந்து கொடுக்கவேண்டும். சரிதானு! ஜாக்ரதையாகச் செய்வாயாக. இக்காலத்தில் உண்மைக்கு மதிப்பில்லை. பொய் சொன்னுல்தான் பிழைக்கலாம். ஜாக்ரதை' என்று கூறினுர். சரி என்ருன்.

ஒருவர் ஜவுளி எடுக்க வந்தார். நல்ல உயர்ந்த சேலைவேண்டும் என்று கேட்டார். வாகீசா! உள்ளேபோய் அதோ உயர்ந்த ரகமான சேலைகளை எடுத்து வந்து காட்டு! என்ருர்.

உயர்ந்த ரகங்களான சேலேகளை எடுத்து வந்து வைத்தான்.

போடா மக்கு. உனக்கு பள்ளியில் வைத்துள்ள பெயர் பொருத்தம் தான், என்று தானே சென்று மட்டரகங்களைக் கொணர்ந்து வைத்துச் சமத்கரமாகப் பேசினர்.

இடையில் வேறு ஒருவர் சர்ட் துணி 4½ கெஜம் கேட்டார். அடே ஜாக்ரதையாக இதில் 4½ கெஜம் கிழித்துக்கொடு என்று கூறிவிட்டு சேலே எடுக்க வந்தவரிடம் உயர்ந்த ரகம், உங்களுக்காகவே தனியாக எடுத்து வைத்திருந்தேன் என்று பேசிக்கொண்டிருந்தார்.

வாகீசன் பேச்சில் கவனமாகவே 6½ கெஜம் கிழித்து கொடுத்து பணம் கணக்கிட்டு பெற்றுக்கொண்டு முதலாளியிடம் கொடுத்தான். வாங்கியவர் மகிழ்ச்சியோடு விரைந்து சென்ருர், சேலே வாங்காமல் சென்ருர், மட்டரகம் என்று.

முதலாளி மடத்தனமான மக்கே! முதலில் நல்ல ரகங்களான சேலேகளை ஏண்டா எடுத்துவந்து காட்டினுய்? வியாபாரமே போச்சே! சரி. சட்டைத்துணியையாவது சரியாகக் கிழித்தாயா? கொண்டு வாடா அந்த பீஸை. 9 கெஜமிருந்ததே என்று அளந்து பார்த்தார். 2½ கெஜமிருந்தது, அட மடையா! 6½ கெஜம் கொடுத்து 4½ கெஜம் என்று பணம் வாங்கிவிட்டாயே! 2 கெஜம் போச்சே. நண்பர் மகனுயிற்றே என்று உன்னே வேலேக்கு வைத்தால் நஷ்டத்தை வைத்துவிட்டாயே! நான் உருப்பட்ட மாதிரிதான். வீட்டுக்குப் போடா; இனி வேலேக்கு வரவேண்டாம் என்று விரட்டியனுப்பினர்.

பொய் சொன்னுல்தான் பிழைக்கலாம் என்கிறீர்களே! அதற்காகத் தான் உங்கட்குப் புத்தி புகட்டினேன் என்று கூறிக்கொண்டே போனுன்.

மறுநாள் மளிகைக் கடையில் வேலேக்கு விட்டார்.

தம்பி, யார் எதைக் கேட்டாலும் இல்லேயென்று மட்டும் கூருதே. இல்லே என்று கூறுவது அபசகுனம். இல்லே யென்ருல் பல்லிகூட வந்து சேராது என்று செட்டியார் கூறினர். சரிதானுங்க என்ருன் வாகீசன்.

செட்டியாரே! துவரம் பருப்பு நல்லதாகவுள்ளதா? என்று ஒருவர் வந்து கேட்டார். துவரம் பருப்பைவிட கடலே பருப்பு மிகவும் நல்லது. விலேயும் நயம் என்று கடலே பருப்பை எடுத்துக் காட்டினர் செட்டியார். வேண்டாம் என்று சொல்லிவிட்டார் வந்தவர்.

வேறு ஒருவர் வந்து புளி ஒருவீசை கொடுங்கள் என்று கேட்டார்.

தம்பி! உள்ளே உள்ளது ஒருவீசை எடுத்து வந்து கொடு,

நல்லவெல்லம். விலையும் நயம். இதை வாங்கிக்கொள்ளுங்கள் என்று எடுத்துவந்து கொடுத்தான். அட என்ன செட்டியாரே! புளி கேட்டால் வெல்லம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கொடுக்கின்ருரே என்று சென்றுவிட்டார் வந்தவர்.

என்னடா மக்கு! வியாபாரத்தைக் கெடுத்துவிட்டாயே! என்று வருத்தப்பட்டார் செட்டியார். அதேசமயம் திருப்பணி நன்கொடை வசூலுக்காக ஊர் பிரமுகர்கள் வரக்கண்டார்.

வாகீசன், தாங்கள் துவரம் பருப்பு கேட்டவரிடம் கடலை பருப்பை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறியதால்தான் நானும் புளிக்குப் பதில் வெல்லம் கொண்டுவந்து காண்பித்தேன்.

சரி! நீ நல்ல புத்திசாலிதான். அதோ வசூலுக்காக வருகின்ருர்கள். அவர்களிடம் நான் வெளியில் போயிருப்பதாகக்கூறி அனுப்பிவிடு என்று அவசரமாகக் கூறிவிட்டு உடனே உள்ளேபோய் ஒளிந்து கொண்டார் செட்டியார்.

தம்பி! செட்டியார் எங்கே?

உங்களைப் பார்த்துவிட்டு செட்டியார் உள்ளே சென்று ஒளிந்து கொண்டு விட்டார், வெளியில் போய்விட்டதாகச் சொல்லச் சொன்ருருங்கோ.

ஓய் 'செட்டியாரே! வாய்யா வெளியில். வராவிட்டால் கல்லா பெட்டியையே எடுத்துச் சென்றுவிடுவோம் என்று மிரட்டினுர்கள் வசூலுக்கு வந்தவர்கள்.

உடனே செட்டியார் நடுங்கிக்கொண்டே வெளியில் வந்து 'நான் மூக்கைச் சிந்த உள்ளே போனேன். இந்தப் பையன் புதுப்பையன் ஏதோ உளறி விட்டான். மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கூறி, டே தம்பி! நீ வீட்டுக்கு போ! தேவையானுல் சொல்லியனுப்புவேன் என்று அனுப்பினுர்.

வாகீசன், 'ஐயா' நீங்கதானே! இல்லையென்ருல் பல்லியும் வந்து சேராது என்று கூறினீர்கள். அதனுல்தான். உள்ளே நீங்கள் ஒளிந்து கொண்டிருப்பதாகக்கூறினேன்' என்று சொல்லிக்கொண்டே சென்ருன்.

மறுநாள் 'அப்பா நான் கட்டடம் கட்டும் காண்ட்ராக்ட்வேலை கற்றுக்கொள்ள விரும்புகிறேன். ஆதலால் என்னை நல்ல கட்டடவேலை மேஸ்திரியிடம் வேலைக்கு அமர்த்துங்கள்!'. வாகீசன் முதலில் சிற்ருள் வேலையில் அமர்த்தப்பட்டான். மேஸ்திரி, தம்பி நாளைக்கு காலையில் 7 மணிக்குள் விநாயகர் பூஜைக்கு நீ வரும் வழியிலுள்ள பூந்தோட்டத்தில் பூப்பறித்து வந்துகொடு. மறவாமல் கொணர்க. கொண்டு வருகிற

னுங்க, என்ருன் வாகீசன். தினந்தவருமல் மலர் எடுத்து வந்து கொடுத்தான் மேஸ்திரியிடம் விநாயகவழிபாட்டிற்கு. தம்பி! நீ நல்ல பையன். நல்ல மலர்களைக் கொண்டுவந்து கொடுக்கின்ருய்; பூஜை முடிகின்ற வரையில் இருந்து பிரசாதம் வாங்கிக்கொள்க. உன்னை நான் அழைத்துச் செல்கிறேன் என்று மேஸ்திரி கூறினுர்.

இதனுல் விநாயகர் பூஜையை தினந்தவருமல் நின்று ஊக்கமாக கவனித்து வந்தான். பெரிய மேஸ்திரி மாதிரி நாமும் ஏன் தினம் விநாயகர் பூஜையை வீட்டில் செய்துவிட்டு வரக்கூடாது என்று முடிவுசெய்தான்.

அடுத்த நாள் முதல் அதிகாலையிலேயே எழுந்து குளித்து மலர் எடுத்து வந்து ஐந்துகரத்தண்ணல் பெருமானை அன்போடு மலரிட்டு அர்ச்சித்துவிட்டு, மேஸ்திரிக்கு மலர் கொண்டுசென்று கொடுத்து வந்தான். ஓராண்டு ஓடியது.

மாலையில் வேலைவிட்டு வரும் வழியில் ஒரு விநாயகர்கோயில். அங்கு ஒரு அறிஞர் விநாயக புராணம் தினம் மாலை 6 மணிக்குமேல் சொல்லி விளக்குவார். வாகீசன் நின்று ஊன்றி கவனித்துக் கேட்டு உள்ளமுருகுவான். இதனைக் குறிப்பிலுணர்ந்த அப்புலவர், முடிவில் தம்பி இங்கே வா! நீ யார்? என்ன வேலை? படிப்பு வருமா? என்று கேட்டார்.

தன் வரலாற்றைத் தெரிவித்து படிக்காதுவிட்டதற்காக வருந்தினுன்.

விநாயகர் பூஜையால் வாக்குவன்மை வந்தது

தம்பி நீ வருந்தாதே! நாளைமுதல் பிரசங்க முடிவில் உனக்கு நான் படிப்பு சொல்லி பழக்கி வருகிறேன், கற்றுக்கொள்கின்ருயா?

அவசியம் கற்றுக்கொள்கிறேன். விநாயகபெருமானை நம்பி நான் பூஜித்து வருவதால் இப்போது எனக்கு கல்வி கற்க விருப்பம் வந்துள்ளது என்ருன்.

மறுநாள்முதல் அந்தப் புலவர் வாகீசனுக்கு எழுத்துக்களை வரிசையாகப் பயிலவைத்து இரண்டாண்டுகளில் நல்ல புலமையறிவு வளர்ந்தது; கணேசப்பெருமான் கருணையால் வாகீசனுக்கு. இனிய குரல் இசையும் இயற்கையாகவே அமைந்திருந்தது வாகீசனுக்கு.

பக்கத்து நகரில் புலவர் தொடர் சொற்பொழிவாற்றிவந்ததால் வாகீசனது புலமையறிவு வளர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டார். சீடனுக ஏடு படிக்கவைத்துக்கொண்டார். மேஸ்திரி கட்டட வேலையைவிடச் செய்துவிட்டார்.

ஒருநாள் புலவருக்கு உடல்நலம் குன்றிவிட்டது. தம்பி வாகீசா நீ சென்று எனக்கு உடல்நலமில்லை என்று கூறி ஒரு தோத்திரப் பாடல் மட்டும் கூறிவிட்டு, நான் நாளை மாலை வருவதாக தெரிவித்துவிட்டு வருக என்று அனுப்பி வைத்தார்.

வாகீசன் மட்டும் வரக்கண்டதும் பிரசங்கம் ஏற்பாடு செய்த சங்கத்தார் மிகவும் வருந்தி இன்று விநாயகர் புராணத்தில் முக்கியமான கதையாயிற்றே புலவர் வரவில்லையே என்று கூறினுர்கள். ஜனங்கள் வந்து கூடியுள்ளதால் தேவாரப்பாடல்களை ஓதிவிட்டுச் செல்லுங்கள். புலவர் நாளை வருவார் என்று கூறிவிட்டு முடியுங்கள் என்றனர் சங்கத்தார்கள்.

''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்'' என்று இன்னிசையால் பாடிவிட்டு இப்பாடலுக்கு விளக்கம் கூறலாமா? என்று கேட்டான் வாகீசன்.

தெரிந்தவரையில் சிறிது சொல்லுங்கள் தம்பி என்றனர்.

உடனே விநாயகப்பெருமானை உள்ளத்தில் வைத்து உருக்கமுடன் பேசலானுன் வாகீசன். கணேசப் பெருமான் கருணையினுல் கடல்மடை திறந்தாற்போல் காவிய விளக்க உதாரணங்கள் கரைகடந்து வந்து கேட்போர்கள் கருத்தை ஈர்த்து கணிக்க வைத்துவிட்டது. பத்துமணியாகியும் மேலும் பேசுமாறு வேண்டினர். அவ்வண்ணமே அழகாக அருளுரை ஆற்றி முடித்தான்.

சங்கத்தார்கள், தம்பி சிறுவன்தானே என்று அலட்சியமாக நாங்கள் முதலில் சிந்தித்துவிட்டோம். செந்தமிழ்க்காவிய மழையாக வல்லவா சிறப்பாகப் பொழிந்துவிட்டீர்கள். நாளை முதல் தம்பி! தாங்கள்தான் பேசவேண்டும். புலவர் சொற்பொழிவு இங்கு எடுபடாது என்று திட்டமாகக்கூறி ஏராளமாகப் பழங்கள், பட்டு வேட்டிகள் இரு ஜோடிகள் மரியாதை செய்து ஒரு பிரமுகர் காரில் அனுப்பிவைத்தார்.

புலவர்—படிப்பில்லாத பையனை நம்பி பெரிய சபையில் பாடிவிட்டு வரத் தனியாக அனுப்பிவிட்டேனே; முட்டாள்தனமாக என்ன உளறிவிட்டு என் பெயரையும் புகழையும் கெடுத்துவிட்டானே; இரவு 11 மணியாகியும் அவன் வந்தபாடில்லையே! பாவிப்பயல் பயந்து விட்டு எங்காவது ஓடிவிட்டானே! தெய்வமே என்ன செய்வேன்! என்று வருந்திக்கொண்டிருந்தார்,

அவ்வேளையில் ஒரு கார் வந்து வாசலில் நிற்கக்கண்டார். வாகீசன் உற்சாகமாகப்பட்டு ஆடைகளை அணிந்து வருவதைக் கண்டார். தட்டு தட்டாக பழங்களுடன் மேலும் பட்டுவேட்டிகளிரண்டும் பணமும் கொண்டுவந்து புலவர் முன்வைத்து விழுந்து வணங்கி வழங்கினான்.

புலவர் அதிர்ந்து மயங்கியே விட்டார்! என்ன அதிசயம்! தினம் நடந்தே தான் வருவோம் நாம். தேங்காய் மூடிகூடத் தரமாட்டார்கள். இதென்ன கார்! பட்டுவேட்டிப் பணம். தட்டுதட்டாகப் பழங்கள். இதெல்லாம் ஏது? என்று கேட்டார் வாகீசனிடம்.

எல்லாம் தங்கள் ஆசியாலும் கணேசப்பெருமான் கருணையாலும் வந்தவை. எல்லாம் தங்களுக்குத்தான் என்று கொடுத்துவிட்டான். அளவற்றை மகிழ்ச்சி புலவருக்கு!

டிரைவர். ஐயா! நாளைமுதல் சின்ன ஐயாவான இவர்தான் வந்து சொற்பொழிவாற்ற வேண்டுமாம். தாங்கள் வரவேண்டாம் என்று தெரிவித்து விட்டுவரச் சொன்னார்கள் என்று கூறினான். புலவரும் ஒன்றும் புரியாமல் திகைத்தார்! வித்துவான் வீண்கர்வத்தை விட்டார். பொருமையும் கூடாது. பிள்ளையார் பூஜைதான் தன்னை உயர்த்தும் என்று திருந்தினார்.

வாகீசன் குருமணியே! சரீணம்! தாங்கள் வருந்தவேண்டாம். தாங்கள் வழக்கம்போல் வருக. நாமிருவருமே காரில் செல்வோம். எல்லாம் தாங்கள்தான் எனக்கு வாழ்வளித்தவர். விநாயகர் உண்மை வழிபாட்டினால் அடியேனுக்கு வாக்குவன்மை அதாவது வாக்கு உண்டாகியது. அதனால் வரும் பயனை தங்கட்கு அடியேன் எப்போதும் வழங்கி வருவேன்.

பள்ளியில் கல்விபயிலாத மூடனாகிய என்னை விநாயகப்பெருமான் கருணை கூர்ந்து, அடியேன் ஆற்றிய வழிபாட்டினால் வாக்குவன்மை வழங்கி, பெரும் புலமையறிவையும் வழங்கியுள்ளார் என்னும் உண்மையை உலகமக்கள் அறிந்து உய்வார்களாக.

விநாயகர் வழிபாட்டால்
வாக்குண்டாம்.

இதுமுதல் வாகீசன் பெரும் வித்துவானாக எங்கும் சென்று சமய விரிவுரைகளாற்றி விநாயகர் வழிபாட்டின் மேன்மையை விளக்கி வந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்தான்.

(தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

நவீன ஆய்வில் மூலிகைகள்

டாக்டர் (திருமதி) லலிதா காமேசுவரன், பிஎச்.டி.
ச. கோபாலகிருஷ்ணன், எம்.எஸ்ஸி.
தனஞ்செயன், எம்.எஸ்ஸி.

- பிரித்தெடுத்த வீரியங்களை மருந்தியல் வல்லுநர்களின் சோதனை களின்படி, மூலிகையின் மருத்துவக் குணம் எந்த வீரியத்தில் பொதிந்துள்ளது என்பதைக் காண்பர்.
- பிறகு, சக்திவாய்ந்த தனிக்கப்பட்ட வீரியத்தை 'வண்ணப் பிரிப்பானின்' (Chromotographic Methods) வாயிலாக முற்றிலும் சுத்திகரிப்பர்.
- முற்றிலும் சுத்திகரிக்கப்பட்ட மருந்துப் பொருளின் அணுச் சேர்க்கையை பௌதிகத்தில் ஒப்பற்ற நுண்கருவிகளைக் கொண்டு அறுதியிடுவர்.
- அறுதியிட்ட அணுச் சேர்க்கையை திரும்பச் சோதனை யகங் களிலேயே தயாரிக்க முடியுமா என்றும் பார்ப்பர்.
- அவ்வாறு தயாரிக்க முடிந்தால் அவற்றின் மருத்துவக் குணங் களை மருந்தியல் நிபுணர்களின் துணையோடு அறுதியிடுவர்.
- மூலிகைகளைச் சேகரிப்பதிலும், மருந்தியல், மருத்துவப் பிரிவு களில் நடைபெறும் பெரும் பணிகளில் நம்முடைய ஆர்வத் தையும் உற்சாகத்தையும் காண்பித்திடுவர்.

மருந்தியல் பிரிவு :

மருந்தியல் பிரிவின் பணி சற்று கடினமானது. இதன் வல்லுநர் களுக்கு மூலிகைகளைப் பற்றிய 'நடக்கும் ஆய்வுகள்' அனைத்தும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்,

இவர்கள் தங்கள் சோதனைகளுக்கு முக்கியமாக சிறு பிராணிகள், சுண்டெலிகள், எலிகள், முயல்கள், சீமைப் பன்றிகள், நாய்கள், குரங் குகள் போன்ற பல பிராணிகளைப் பயன்படுத்துவர். இவர்களுக்கு இப் பிராணிகளுக்கும், மனிதனுக்குமிடையே உடல் நிலையில் உயிர் வேதி யலில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகள் மிகவும் நன்ருகத் தெரியும். இவர்களுடைய ஆய்வுகள் ஏழுபடிகள் பாற்படும்;

முதற்படி : மிகச் சிறு பிராணிகள் மூலம் (மூலிகைகளின், அதன் வீரியங்கள் போன்றவற்றின்) அடிப்படை மருத்துவக் குணங்களைக் காணல்.

இரண்டாம்படி : நாய் குரங்கு—போன்ற பெரும் பிராணிகளின் உடல் நிலையில் ஏற்படும் மாறுதல்களை நுணுகி அறிதல்.

மூன்ரும்படி : முதல் இரண்டு படிகளில் அறுதியிட்ட குணங்களை மேலும் தொடர்ச்சியான பரிசோதனைகளின் மூலம் அறுதியிடுதல்.

நான்காம்படி: மருந்தின் நச்சியல்புகளைப் பலவகைகளில் ஆய்தல்;

அ. உடனே உண்டாக்கும் நச்சியல்பு;

ஆ. நாள்பட்டு உண்டாக்கும் நச்சியல்பு;

இ. பிராணிகளின் காயத்தின் மீதுண்டாகும் நச்சியல்பு;

ஈ. பிராணிகளின் உயிர் வேதியலிலும் நுண்ணுயிர்களின்பாலும் உண்டாக்கும் நச்சியல்பு-ஆகியவற்றை ஆராய்வர்.

ஐந்தாம்படி : அ. தனியாகப் பிரிக்கப்பட்ட நொதி மண்டலங்களின் மீது (Enzme Systems) மருந்தின் குணங்களை ஆராய்ந்து அதனுடைய செயல்படு வன்மை எங்ஙனம் துவங்குகிறது என்பதையறிவர்.

ஆ. அந்த மருந்துப் பொருள் உடலில் எவ்வாறு உறிஞ்சப்படுகிறது; எவ்வாறு பரப்பப்படுகிறது; அது உடலில் அடையும் மாற்றங்கள் யாவை; அது எவ்வாறு வெளியேற்றப்படுகிறது போன்றவற்றை பிறகு ஆராய்வர்.

ஆரும்படி : அந்த மருந்து தனித்து எவ்விதம் இயங்குகிறது என்றும், பிற மருந்துகளுடன் கூடி செயல்படும்போது எங்ஙனம் அந்த மருந்தின் தன்னிலை மாறுகிறது என்றும் ஆராய்வர்.

ஏழாம்படி : அ. அந்த மருந்தின் நச்சுத் தன்மையை எவ்வளவு குறைக்க முடியும் ?

ஆ. அந்த மருந்தின் நச்சுத் தன்மையை எங்ஙனம் அதிகரிப்பது ?

இ. அந்த மருந்து அதே மருத்துவக் குணங்களுடைய பிற மருந்துகளைவிட எங்ஙனம் உயர்ந்தது ? ஆகியவற்றை இறுதியாக ஆராய்வர்.

மருத்துவப் பிரிவு :

இந்தப் பகுதி மருந்தியல் நிபுணர்கள், உயிர் வேதியியல் நிபுணர் கள், நவீன மருத்துவர்கள் ஆகியவர்களின் துணைக்கொண்டு இயங் குவது. பிராணிகளின் மீது, ஆய்வு மூலம் நச்சுத் தன்மையற்ற, அல்லது நச்சுத் தன்மை மிகவும் குறைந்த நல்ல குணமளிக்கக் கூடிய மருந்துகள் என்று நிரூபனம் பெற்ற மருந்துகள் தான் இந்தப் பிரிவின் ஆய்வில் இடம்பெற முடியும்.

இங்கு அந்த மருந்துகள், மனிதனின் மேல் (நோயாளிகளின் மீது அவர்களின் சம்மதத்துடன்) எல்லாவித கோணங்களிலும் ஆராயப்படு கிறது. இந்த ஆய்வு கீழ்க்காணும் பெரும் கேள்விகளுக்கு விடையளிக் கிறது.

1. இந்த மருந்து மனிதனின் எந்த நோயைக் குணப்படுத்துகிறது?

2. இந்த மருந்து நல்ல ஆரோக்கியமான மனிதனிடத்தில் எங் ஙனம் செயல்படுகிறது ? இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

3. இந்த மருந்து,

அ. மனிதனின் உடல் எவ்வாறு, எவ்வள்வு விரைவில் உறிஞ் சப்படுகிறது ?

ஆ. எவ்வாறு எந்த முறையில் உடலெங்கும் பரவுகிறது ?

இ. எப்படி, எவ்வளவு விரைவில் வெளியேற்றப்படுகிறது ?

ஈ. எந்தெந்த மாறுதல்கள் உடலில் ஏற்படுகிறது ? இதனுல் இந்த மருந்தின் செயல் திறன் கூடுகிறதா, குறைகிறதா அல்லது மாறுபடுகிறதா ?

4. இந்த மருந்தின் நச்சுத் தன்மைகள் எவ்வாறு முறிக்கப்படு கின்றன ? என்பன போன்ற பெரும் ஆய்வுகள் நடைபெறு கின்றன.

நவீன ஆய்வில் மூலிகைகள் - சில குறிப்பிடத்தக்க குறிப்புகள்

1. நம் முன்னோர்களால் இயற்றப்பட்ட மருத்துவக் குறிப்புகளை ஆய்வு செய்தல்.

2, ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு உபயோகப்படுத்தப்பட்டு வரும் மூலிகைகளைத் தேர்ந்தெடுத்தல்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட மூலிகைகளைச் சேகரித்தல்.
4. சேகரிக்கப்பட்ட மூலிகைகளைத் தாவர இயல் பிரிவுப்படி அவை எந்தக் குடும்பத்தினைச் சேர்ந்ததென்று அடையாளம் கண்டு பிடித்தல்.
5. மூலிகைகளைத் தாவர-இரசாயனப் பரிசோதனைக் குட்படுத்திப் பல்வேறு மருந்துப் பொருள்களைப் பிரித்தெடுத்தல்.
6. பிரித்தெடுக்கப்பட்ட மருந்துப் பொருள்களை எலி, சுண்டெலி, முயல், நாய், குரங்கு போன்ற பிராணிகளுக்குச் (வியாதியற்ற) செலுத்தி அவற்றின் இயல்புகளை ஆராய்தல்.
7. மிருகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நோயினை உண்டாக்கி அந் நோயினைத் தீர்க்கும் சக்தி புதிய மருந்துக்கு இருக்கின்றதா இல்லையா என்று ஆய்வு செய்தல்.
8. மிருக பரிசோதனைகளில் நல்ல பயன் அளித்த சக்தி வாய்ந்த மருந்துப் பொருட்களை நோயற்ற மனிதர்களுக்குச் செலுத்தி அவற்றின் இயல்புகளை ஆராய்தல்.

இப்பரிசோதனைகளுக் கெல்லாம் உட்பட்டு, வெற்றிகரமாக வெளி வரும் மருந்து பிறகு பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் விற்பனைக்குக் கொண்டுவரப்படும்.

நவீன ஆய்வில் மூலிகைகள் - சில சிக்கல்கள்

1. நமது முன்னோர்கள் குறிப்பிட்டுள்ள மூலிகைகளைக் கண்டு பிடித்துச் சேகரித்தல்; அவற்றினைத் தாவரயியல் முறைப்படி குடும்ப இன அடையாளத்தினைக் கண்டுபிடித்தல் மிகவும் சிரமமான காரிய மாகும்.

2. மூலிகை ஆராய்ச்சி செய்பவருக்கு அளவிலாத பொறுமையும், சகிப்புத் தன்மையும் இருக்க வேண்டும், மூலிகை ஆராய்ச்சியில் பற் பல இடையூறுகள் உண்டு, அவற்றை சகித்துக்கொண்டு, சமாளித்துச் செல்லும் மனப் பக்குவம் மிகவும் அவசியம்.

3. மூலிகைப் பொருள்களிலிருந்து தாவர இரசாயன முறைப்படி பல்வேறு இரசாயனப் பொருட்களைப் பிரித்தெடுக்கப் பயன்படுத்தப் படும், சாராயம், ஈதர், ஈதைல் அசிடேட், அமிலங்கள், உப்புக்கள், கருவிகள் முதலியவை மிகவும் விலையுயர்ந்த பொருள்களாகும். ஆகவே போதிய பணவசதி படைத்த நிறுவனங்களே இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடும்.

(தொடரும்)

அமரர் கண்ணப்பருக்கு புகழ் அஞ்சலி

உ
Sri Chandramouleeswaraya Namaha
His Holiness
Sri Kanchi Kamakoti Peetadhipati
Jagadguru Sri Sankaracharya Swamigal
Srimatam Samsthanam
KANCHEEPURAM-631 502.



(புதுப் பெரியவாள் ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகளுடன் உரையாடும் காட்சி)

Camp : Hydrabad
13—9—1979

மூலிகை மணி கண்ணப்பர் இறைவனடி சேர்ந்தமை குறித்து தாங்கள் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. ஸ்ரீமஹா ஸன்னிதானத்தில் விக்ஞாபனம் செய்யப்பட்டது. ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில் அனுக்ரஹித்த ப்ரஸாதம் இத்துடன் அனுப்பியிருக்கும் விபரம் தெரிவிக்கலான கார்யம். —மானேஜர்

உ
முருகா



(1964-இல் வாரியார் சுவாமிகளுடன் ஆசிரியர் கண்ணப்பர்)

முகாம் : வாணியம்பாடி
6—9—'79

அன்புள்ள வேங்கடேசனுக்கு ஆசி நலம்.

உன் தந்தையாரின் மறைவு குறித்து மனம் வருந்துகின்றேன்.

அவருடைய ஆன்மா சாந்தியடைய முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.

அன்பன்,
கிருபானந்தவாரி



(1977-இல் பேராசிரியர் அன்பழகன் அவர்களைப் பாராட்டி, 'சித்த மருத்துவக் காவலர்' எனும் சிறப்புப் பட்டத்தினை வாசகர் சார்பில் அவர்க்கு அளிக்கும் காட்சி.)

க. அன்பழகன், எம்.ஏ., எம்.எல்.ஏ.,
பொதுச்செயலாளர், தி.மு.க.,
துணைத் தலைவர் தி.மு.க. சட்டமன்றக்கட்சி

அன்புடையீர், வணக்கம்.

சித்த மருத்துவத்தின் சிறப்பு மிகு பயன் நாட்டுமக்களுக்குக் கிடைக்கப் பல்லாற்றானும் தொண்டாற்றிய மதிப்பிற்குரிய மூலிகைமணி கண்ணப்பர் அவர்கள் இயற்கை எய்திய துயர் மிகு செய்தியறிந்து வருந்துகின்றேன். எனது ஆழ்ந்த துயரத்தையும் துயருற்ற குடும்பத்தாருக்கும், அவரது மக்களுக்கும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மூலிகைமணி'யின் பணிதொடர வழிகாண்பதில், அவரது குறிக்கோள் நிறைவேறும் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்படுவதில் ஆறுதல் காணலாகும்.

வாழ்க கண்ணப்பர் தொண்டு! வளர்க மூலிகை மணி!

அன்பன்,
க. அன்பழகன்.



(மூலிகைக் கண்காட்சிக்கென மூலிகைப் படங்களை
வரையச் செய்து அதனைச் சரிபார்க்கின்றார்.)

DEEPLY GRIEVED TO KNOW THE SUDDEN DEMISE OF YOUR FATHER DR. KANNAPPAR. PLEASE ACCEPT OUR HEARTFELT CONDOLENCES.

R. M. VEERAPPAN,
Minister for Information
& Religious Endowments,
GOVT. OF TAMIL NADU.

உ

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் குன்றக்குடி

அன்புள்ள வேங்கடேசன் அவர்களுக்கு எழுதுவது,

தங்கள் அருமைத் தகப்பனாரும், மூலிகைமணி ஆசிரியரு மான டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்களின் மறைவு, ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றியுள்ள தொண்டு இணையற்றதாகும். அப்பெரு மகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைப் புலப் படுத்திக்கொள்கின்றோம். அவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அடிகளார்

வித்துவான் உ போரூர் (அஞ்சல்)
சாந்தலிங்க இராமசாமியடிகள் கோயமுத்தூர் - 641010

தொன்மை மிகுசித்தர் நெறிநின்று நாளும்
சிறந்தோங்கு மருத்துவத்தில் பயின்றோன் என்றும்
நன்மை மிகு பணிபலவாய் மூலிகைச்சீர்
நாடு பரவிடப்புரிந்த கண்ணப்பர் தான்
வன்மை மிகும் ஊழ்வலியால் உலகைநீத்தார்
வாழ்க அவர்உயிர் முருகன் மலரடிக்கீழ்
தன்மை மிகு அவர்பணியை மரபுபோற்றி
தமிழ்ப்பணிகள் செய்திடவே வேண்டுகின்றோம்.

அன்புள்ள திரு வேங்கடேசன் அவர்கட்கு எழுதிக்கொள்வது,

தங்கள் அருமைத் தந்தையாரும் சித்தமருத்துவத்தின் காவலரு மாகிய திரு. கண்ணப்பர் அவர்கள் மறைவு கேட்டு துணுக்குற்றோம். 'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்பதே இவ்வுலகின் நிலை'. அவர் நல்லுயிர் அமைதியுற வேண்டுவோமாக.

அன்புள்ள

சாந்தலிங்க இராமசாமியடிகள்

உ
வணக்கவுரை

டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-5

'மூலிகை மணி' என்ற தனிப்பெரும் புகழுக்குக் காரணராய் இருந்தவர்; மூலிகை மண்ணோடு மூலிகையாய் மறைந்துவிட்டார். தமிழ்நாட்டு மூலிகை வளத்தின் 'கலங்கரை விளக்கம்' காலைப்போதாகிய பின்னும் கைகாட்டிக் கொண்டிருந்த கலங்கரை விளக்கம் நின்றுவிட்டது. மீண்டும் இருள் மண்டும் போது சுற்றுமோ? சுழலுமோ? அல்லது தன்னினும் சிறந்த மின்னாற்றல் கைவிளக்கைத் தன்மகன் திரு. க. வேங்கடேசன் வாயிலாகத் தருமோ? கலங்கரை விளக்கினும் கைவிளக்கு—எலக்ட்ரானிக் கைவிளக்கு காலத்திற்கும் கடமைக்கும் ஏற்றதன்றோ!

டாக்டர் ந. சஞ்சீவி
பேராசிரியை கிருஷ்ண சஞ்சீவி

Prof. A. MAHADEVAN,
Director,
Centre of Advanced Study in Botany.
University Botany Lab.,
UNIVERSITY BUILDING,
MADRAS-600 005.

My dear Venkatesan,

Let me express deep sorrow at the sudden demise of your father. Words are not adequate to share the grievances. We have lost the great champion of herbal medicine in the country and an ardent proponent of Siddha Medicine.

As I was not in the country, the news of your father's passing away reached me only now.

I am presently tied up with a few things and shall not be able to contribute till the next issue. Your effort to launch a journal in English is highly commendable and I offer my greetings. Under your Editorship, the journal will set high standards.

With kind regards,

Yours sincerely,
A. MAHADEVAN.



(தன் நெருங்கிய நண்பர் திரு. மு. பெருமாள் முதலியார் அவர்களுடனும், வாரியார் சுவாமிகளுடனும் ஆசிரியர் கண்ணப்பர்.)

மு. பெருமாள்

வேலூர்

பேரன்புடையீர்!

முருகப்பெருமான் அருந்துணைப் புரிந்தருளப் பிரார்த்திக்கின்றேன். அடியேனுடைய ஆத்ம அன்பர் தங்கள் தவத்திரு தந்தையார் அவர்கள் பிரிந்த செய்தியைப் பேப்பரில் பார்த்த அன்பர்கள் அறிவிக்கக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அவரை விரைவில் வந்து சந்திக்க அவாக் கொண்டிருந்தேன். திருவருள் தம் திருவடியில் அணைய ஆட்கொண்டு விட்டது! அவரது பிரிவு தங்கட்கும், குடும்பம் முழுவதுக்கும் அம்மா அவர்கட்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். என் மனப்பூர்வமான அனுதாபத்தை தங்கள் அம்மா முதல் அனைவர்க்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

சித்த வைத்திய துறைக்கும், மூலிகைகள் விளக்கத்துக்கும் அவர் ஆற்றியுள்ள அரும்பெரும் தொண்டு சிறப்பு மிக்கதாகும். சித்த வைத்திய துறையின் கலங்கரை ஒளி அணைந்துவிட்டது. தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தனிப்பெரும் நட்டமாகிறது. எல்லாம் வல்ல நமது

ஆண்டவன் வள்ளிமணாளப் பெருமான் இணையடிகளில் முருகபக்த மணியான அவரது ஆன்மா என்றும் இளைப்பாறி இன்புற்றிடப் பிரார்த்திக்கின்றேன்.

தந்தையார் காட்டிய தொண்டினைத் தாங்கள் தளராது தொடர்ந்து ஆற்றி அவரது குறிக்கோளை மக்களிடையே மலரச் செய்து வருவீர்களாக. முருகப்பெருமான் முழு ஆற்றலை தங்கட்கு வழங்கியருள்க. வீட்டிலுள்ள அனைவர்க்கும் என் அனுதாபத்தை அறிவிக்கவும்.

அன்பு மறவாத

மு. பெருமாள்

நீலவன் 'எழுத்தாளர்' சின்ன அல்லாபுரம், வேலூர்-632003.

பேரன்பீர்! வணக்கம்.

'மூலிகை மணி' ஆசிரியரும், பிரபல மருத்துவரும், பரோபகாரியுமான திரு. கண்ணப்பர் உயிர் நீத்த செய்தி அறிந்து திடுக்கிட்டேன். வருத்தமடைந்தேன். மூலிகை மன்னரின் மரணம் வைத்திய உலகிற்கு மாபெரும் இழப்பு என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவரது அயராத் தொண்டை நினைத்து நான் பிரமிக்கிறேன். அவரது மரணம், என் மன மூலைகளில் சாஸ்வத கண்ணீர்க் கசிவை உண்டு செய்து விட்டது.

அன்புள்ள,

நீலவன்

('ஆனந்த விகடன்' வெளியிட்ட வடற்காடு மாவட்ட மலரில், கண்ணப்பரைப் பற்றி அறிமுக உரை எழுதிய அன்பர் திரு. நீலவன். அவர்கள்மீது ஆசிரியருக்கு அளவுகடந்த அன்பு உண்டு. மறைவதற்கு 3 மாதத்திற்கு முன்னர்கூட 'நீலவன்' அவர்களை வேலூர் சென்றால் காணவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்தார்.)

எஸ். மணி சாஸ்திரிகள் திருவையாறு


சிரஞ்சீவி வேங்கடேசனுக்கு அனேக ஆசீர்வாதம் உபய க்ஷேமம் இன்றுதான் உன் கடிதம் கிடைத்தது. உன் தகப்பனார் திருத்தணி முருகனிடம் சித்ரா பௌர்ணமி அன்று மனம் உருகி ஆண்டுதோறும் செய்யும் உற்சவம் என் கண் முன்னால் நிற்கின்றது. ஸ்ரீ முருகன் அருளால் வைகுண்டபதவியை அடைந்துவிட்டார் என்பதில் சந்தேகமில்லை. அவர் பெயரையும் புகழையும் நீங்கள் நல்லபடியாக நடந்து அவர் கீர்த்தியை மேன்மேலும் விருத்தி செய்து நீங்கள் எல்லோரும் பூரண ஆயுளுடன் விளங்கப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு,

எஸ். மணி சாஸ்திரிகள்



திருத்தணிகையில் ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி யன்று முருகனுக்கு விழா நடத்தி, அன்னதானம் செய்து, திருவீதியுலா வரும்போது, ஆசிரியர் கண்ணப்பர் முருகனின் செண்டாயுதம் தாங்கி சேவகனாய் காட்சியளித்தல்.




(ஓய்வு நேரங்களில், ஒலிப்பதிவு நாடாவில் மூலிகைகளைப் பற்றிய குறிப்புகளை பதிவு செய்வது அவருக்குப் பிடித்தமான பணியாகும்.)

Dr. A. NEELAVATHY L.I.M., Madras-600029.
Director of Indian Medicine

Sir,

I regret to note the demise of Vellore Dr. A. R. Kannappar, RMP., who has done yeoman service to the society at large and Siddha system of medicine in particular. His loss is to be mourned by the Siddhars The information may be carried to his kith and kin. May his soul rest in peace.

(Sd.) A. Neelavathy
Director of Indian Medicine.



(தன் பணிகள் உயர—உரமாகத்திகழ்ந்த தினமணி ரமணி அவர்களை, 'அண்ணு' என்று ஆசிரியர் கண்ணப்பர் அழைப்பார். வேலூரில் அவர் நடத்திய மூலிகை கண்காட்சியின்போது, திரு. ரமணி அவர்களை அழைத்து, கருத்தரங்கில் உரையாற்றச் செய்தார். திரு' ரமணி அவர்கள் சொற்பொழிவாற்ற, வலப்புறக் கோடியில் ஆசிரியர் ஆர்வமுடன் செவிமடுத்தல்.)

''எதிர்காலத்தில் தோன்றப்போகும் ஒரு Historian தான் கண்ணப்பரின் பணியை உண்மையாக Assess செய்ய முடியும். Purposeful-வாழ்க்கையை அடைந்தபெருமை கண்ணப்பருக்கு உண்டு. 20 ஆண்டு காலம் ஆத்மார்த்தமாக அவரோடு பழகிய வன் யான். குழந்தை போன்ற உள்ளம் உடையவர். பகவான் இவ்வளவு சீக்கரம் அவரை அழைத்திருக்கக்கூடாது!''

—தினமணி K. S. V. ரமணி.

பேராசிரியை
திருமதி லலிதா காமேசுவரன்

துணை முதல்வர்
சென்னை மருத்துவக் கல்லூரி

திரு. வேங்கடேசன் அவர்களுக்கு,

தங்கள் தந்தையார் மூலிகைமணி திரு ஏ. ஆர். கண்ணப்பர் மறைவின் செய்தி கேட்டு மனம் மிக வருந்துகிறோம். அவர் மறைவு சித்த மருத்துவ ஆய்விற்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரது பணியை தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் தொடர்ந்து செய்ய இறைவன் அருள் புரிவாராக.

தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள்.

தங்கள் அன்புள்ள
லலிதா காமேசுவரன்

T. B. S. RAMA RAO, Salem.

My dear Venkatesan,

To day's Mail brought a sorrowful news & we never expected the death of your beloved father would be so near. He helped public a lot, in general & in particular to middle class people like by giving his wonderful ''நேத்திரப்பூண்டுத் தைலம்''. What to do. It is His will. We join in your mourning & pray Lord Muruga to keep his soul rest in peace with Him.

Truly in sorrowness,
T. B. S. RAMA RAO.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்

சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600005

இரங்கல் உரை

தமிழ்நாடு தனக்கெனத் தனி வரலாறு உடையது. தமிழினம் தனக்கெனத் தனிப்பெருமை கொண்டது. தமிழ்மொழி தனக்கெனத் தனிச் சிறப்பினைப் பெற்றது. தமிழினத்தின் தனிப் பெருமைகளில் ஒன்று சித்த மருத்துவம். சித்த மருத்துவம் தமிழர் தம் தகைசான்ற தனி மருத்துவமாகும். இம் மருத்துவத் துறையில் இந்த நூற்றாண்டில் சிறப்பாகப் புகழ் படைத்து விளங்கிய வேலூர் மருத்துவர் மூலிகைமணி கண்ணப்பர் அவர்கள் ஆவார். திரு கண்ணப்பர் சித்த மருத்துவத் துறைக்குக் கண் போன்று விளங்கியவர். 'மூலிகை மன்னர்' என்று பாராட்டப் பெற்றவர். தமிழ்நாட்டு மூலிகைகளுக்குப் புது வாழ்வு தந்தவர். அதன்வழி தமிழர்க்கு நல்வாழ்வு நல்கியவர். எண்ணற்ற மூலிகைகளின் பயனைத் தமிழர்க்கு அறிவுறுத்தி அன்றாட வாழ்வில் அவை பயன்படும்படி விளம்பரப்படுத்தியவர். தினமணிக்கதிரில் மருத்துவத் தொடர்பான பல நல்ல கட்டுரைகளை எழுதியவர். பலருடைய நலிந்த வாழ்வை நேர்படுத்திப் புத்துயிரும் புது வாழ்வும் தந்தனர். இப்படிப் பிறர்க்கென வாழும் பெருந்தகையாய் விளங்கிய அவர்கள் அண்மையில் இந்த உலக வாழ்வை நீத்தார்கள். அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது; அவர் புகழ் விழுமியது. அவர் நாட்டுக்கு விட்டுச் சென்ற செல்வங்களாக அவருடைய மைந்தர்கள் திகழ்கிறார்கள். அதிலும் குறிப்பாக அவர் கால்வழியில் அவருடைய மூத்த மைந்தர் என் அருமை மாணவர் வேங்கடேசன் திகழ்கின்றார். புகழ்மிக்க தந்தையின்வழி நின்று அவர் ஆற்றிய திருப்பணியினைத் தொடர்ந்து செய்து தமிழர் நல்வாழ்விற்குத் துணைநின்று தந்தையின் புகழைத் தரணியில் மேலும் வளர்ப்பதற்கு எல்லாம் வல்ல இறையருள் துணை நிற்பதாக. அவர் அருமைத் தந்தையாரின் நல்லுயிர் சிவனடியில் இளைப்பாறுவதாக! தந்தையாரின் திருப்பெயர் ஒளிர்க! வாழ்க!

அன்புள்ள

சி. பாலசுப்பிரமணியன்

Dr. D. DEVASIRVATHAM SAMUEL,
Special Officer, S.S,D.C., Directorate of Indian Medicine.
Madras-6000 029.

பேரன்புமிக்க நண்பர் திரு வேங்கடேசன் அவர்களுக்கு,

தங்களின் தந்தையார் மறைவு பற்றிய செய்தி என்னைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதனால் மிகுந்த ஆருத் துயரடைகிறேன். அன்னாரது மறைவு, தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார்க்கும் மட்டுமன்று என் போன்ற நண்பர்களுக்கும், சித்த மருத்துவ உலகிற்கும் பேரிழப்பாகும். அன்னாரது மறைவு பற்றி யான் ஊருக்குச் சென்றிருந்ததால் உடன் அறிய முடியாமற் போனது குறித்தும் வருந்துகிறேன்.

அவருடைய மூலிகை அறிவு எனக்கு அப்பாடத்தை மாணவர்களுக்குச் சொல்லித்தர மிகுந்த அளவில் பயன்பட்டுள்ளது பற்றி நான் அவருக்கு என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். அன்னாரது ஆன்மா முக்திபெற இறையை வணங்கும்,

அன்பன்

தே. தேவாசீர்வாதம் சாமுவேல்

N. KASIRAMAN, B.Sc.,

Raman & Raman,
KUMBAKONAM.

Dear Sir:

I am very sorry to hear the passing away of your father Dr.A.R.Kannappar.

I pray Lord Sri Rama to bless you with sufficient strength and courage to bear this irreparable loss.

Yours sincerely.

N. KASIRAMAN.

Dr. Sp. SHANMUGANATHAN,
B.Sc,(Hons.),M.Sc.,Ph.D.,F.I.C.S-
C.Chem.,F.R.I.C,(London).
M.A.C.S.,F.C.S.,F,T.N.A.Sc.,

Principal
Pachaiyappa's College,
Madras-600 030.

அன்பிற்குரிய வேங்கடேசன் அவர்களுக்கு, தங்கள் தந்தையார் சித்த மருத்துவச் செம்மல் மூலிகைமணி டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்கள் 1—9—79 அன்று திடீரென இறைவனடி சேர்ந்தமையைச் செய்தித் தாளின்மூலம் அறிந்தேன். என்னைப் போல சித்த மருத்துவத் துறையில் ஆர்வமுடைய அனைவர்க்கும் பெரும் அதிர்ச்சி தரும் செய்தி இது என்பது உறுதி. ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாக அவர் தமிழர் மருத்துவம் பரவவும் சிறக்கவும் 'மூலிகை மணி' இதழைத் தொடர்ந்து நடத்திவருவது அறிவேன்.

பல்வேறு காரணங்களுக்காகச் சித்த மருத்துவர்களைக் கண்டு அஞ்சி மக்கள் ஒதுங்கும் காலத்தில்-சித்த மருத்துவத்திற்கு வரவேற்பில்லாத காலத்தில்-துணிவாகத் தம் சொந்த தொல்லைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு விடாமுயற்சியுடன் இத்துறையின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டது நினைந்து போற்றுதற்குரியது.

இத்தகைய 'சித்த வைத்தியச் செம்மல்' அவர்களின் தொண்டினை அறிந்தவர்களால் அவரது இழப்பைத் தாங்க முடியாது என்பது உண்மை. அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று. அப்பெரியாரின் ஆன்மா சாந்தி அடையவும் அன்னாரை இழந்து வருந்தும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து நலனையும் அருளவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

அன்புடன்,
சுப. சண்முகநாதன்

டாக்டர் P. T. ரரசன் R.M.P. தஞ்சாவூர்.

மூலிகைமணி ஆசிரியர் திரு ஏ. ஆர். கண்ணப்பர் R.M.P. அவர்கள் இழப்பு சித்தமருத்துவ வளர்ச்சிக்கு பெரிய பாதிப்புதான். சித்த மருத்துவ வளர்ச்சிக்கு மூலிகைமணி வாயிலாக பெரிய தொண்டு செய்தார். அவர்களின் மறைவு எனக்கு மிகவும் துயரத்தை அளித்தது.

அன்புள்ள,
ப. த. இராசன்.

டாக்டர் இரா. மாணிக்கவாசகம் Ph.D.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,

8, செல்லம்மாள் தெரு,
சென்னை-30.

அன்பிற்கினிய மூலிகைமணி க. வேங்கடேசன் அவர்களுக்கு,

தங்கள் தந்தையார் இறையடி யெய்தியது பெரிதும் துன்பம் தருவதாகும். தந்தையாரை இழந்த துன்பம்தங்கட்கும் தங்கள் குடும்பத்தினர்க்கும் இருப்பதியல்பே. ஆனால் தமிழ் உலகுக்குக் குறிப்பாக சித்த மருத்துவ உலகுக்கு எவ்வளவு பெரிய இழப்பு என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்த பின் உணர முடிந்தது. மூலிகைமணி இதழின் வாசகனாகத் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக இருந்துவரும் என்னாலேயே இச்சேதியை நம்ப முடியாமல் தொலைபேசியின் மூலம் உறுதி செய்துகொண்ட பின் ஓடிவந்தேன். அவரது புனித உடல் கிடந்த நிலையைக் கண்டு என்னுடல் நடுங்கியது உண்மை.

குடும்பத் தலைவரை இழந்து துன்புறும் தங்கட்கு எல்லாம் வல்ல அன்னை அனைத்து நலனும் அமைதியும் அருள இறைஞ்சுகின்றேன்.

தங்கள் தந்தையார்க்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் 'தமிழ் மருத்துவச் சித்தர்' என்று அடையிட்டே எழுதினேன். சித்தர்கள் சாவதில்லை. உருமாறுவார்கள் என்பது உண்மை. தங்கள் தந்தையின் ஆன்மா அமைதி அடைதல் வேண்டும் என அன்னையை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்
மூலிகைமணி வாசகன்
இரா. மாணிக்கவாசகம்

SRI RAMA VILAS SERVICE LIMITED
KUMBAKONAM-612001.

Dear Mr. Venkatesan,

I learn with regret the sad and sudden demise of your father Dr. A. R. Kannappar on 1-9-79 who has been rendering yeoman service in the cause of Indian Medicine.

with regards,

Yours sincerely,
T.K. SUBRAMANIAM,
Operation Manager.



வேலூரில் ஆசிரியர் கண்ணப்பரால் 1968-இல் நடத்தப்பெற்ற முதலாவது மூலிகைக் கண்காட்சியினைத் திறந்துவைத்த கோவை விஞ்ஞானி, **திரு. G. D. நாயுடு** அவர்கள், கண்ணப்பரின் மூலிகைப் பணியைப் பாராட்டி—

'ஓர் அரசாங்கம் செய்யவேண்டிய பணியை கண்ணப்பர் தனி மனிதனாக இருந்து சாதித்து வருகின்றார்'

என்று மனம் திறந்து போற்றும் காட்சி.

நேர்மை வாய்மை தூய்மை

"பக்தியே சக்தி"

பால விஹார்

(சிறுவர் சிறுமியருக்கான இந்து சமயப் பயிற்சி வகுப்பு)

1/2, சாதுகார் மடம் தெரு-1, சலவன் பேட்டை,
வேலூர்-602 001 (N.A.)

காஞ்சீபுரம் இந்து சமய மன்றப் பேரமைப்பில் இணைந்தது

அன்பு வேங்கடேசன், நமஸ்தே.

தங்கள் அருமைத் தந்தையாரின் மறைவு குறித்து, செய்தித் தாள்களில் பார்த்துப் பேரதிர்ச்சி ஏற்பட்டது. சென்னை வானொலியில் கேட்டதும் பெரிதும் வருத்தமேற் பட்டது.

மிக நல்ல ஓர் உத்தமப் பெருந்தகையாளரை, நல்ல முருக பக்தரை, அருமையான மருத்துவரை, நாங்கள் இழந்து விட்டோம். இறைவனுடைய இணையடிகளில் இணைந்துவிட்ட இனியவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அவருடைய பிரிவால் ஏற்பட்டுள்ள இழப்பு மகத்தானது தங்கள் குடும்ப நண்பனாக இருந்து தங்கள் அனைவரின் துயரிலும் பங்குபெறுகிறோம்.

பால விஹார் சார்பில் எங்கள் ஆழ்ந்த வருத்தத்தைப் பகிர்ந்துகொள்கிறோம்.

நேசமுடன்
பிரபாகரன்
மற்றும் பால விஹார் சிறுவர் சிறுமியர்கள்

1—9—79 அன்று மாலை பால விஹார் மேற்படி மறைந்த பெருந்தகையாளரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை வகுப்பு நடந்தது. பிரார்த்தனையின் இறுதியில் இரண்டு நிமிடம் மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது. குடும்பத்தாருக்கு அனுதாபங்கள் தெரிவிக்கப் பட்டது.

நேசமுடன்
R. **பிரபாகரன்**

பாஷா
மின்பாதையாளர்

தமிழ்நாடு மின்வாரியம்
பெருந்துறை.

அன்புள்ள அண்ணுர் க. வே. அவர்களுக்கு பாஷா வரையும் மடல் நான் எப்போதும் 'அன்புள்ள ஐயா அவர்களுக்கு பிரியமுள்ள பாஷா வரையும் மடல்' என்றுதான் எழுதுவது பழக்கம். ஆனுல் இந்தச்சமயம் ஐயா என்று எழுதுவதற்கு முடியவில்லை என்று நினைக்கும்போது நான் பெரிதும் வருந்துகிறேன். ஐயா இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி அறிந்தவுடன் எனது மனம் மிகுந்த வேதனையும் எனது அலுவலக பணிகளும் செயல் இழந்து நின்றது. ஐயா அவர்களின் நேர்முக உரையாடல்கள் என் மனக்கண் முன்பு நின்று அவர் இன்னும் நம்மிடையே தான் இருக்கிருர் என்ற உணர்வு மாறவில்லை. ஐயா அவர்களின் பிரிவு உடனே செய்தி அறிந்து இருந்தால் அவருடைய இறுதி சடங்குகளில் கலந்துகொண்டு என்னுடைய நன்றிக் கடனை அவர்க்குத் தெரிவித்து இருக்கலாம். ஆனுல் அந்த பாக்கியம் இறுதியாக பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை.

ஐயா அவர்களின் நட்பும் அரவணைப்பும் எனக்கு வேலூர் சாதுகார மடம் மருத்துவமனை இருந்த காலத்திலிருந்து கிடைத்தது அவரால் பலன் அடைத்தேன் என்ருல் அது மிகையாகாது. மேற்படி நன்றிக் கடனை என் உயிர் உள்ளவரை ஐயாவின் மூலிகை மணி வளர்ச்சிக்காக பாடுபடுவேன் இது சத்தியம். ஐயாவின் பிரிவை தாங்காது நினைத்து வருந்தும் அண்ணுர் மற்றும் குடும்பத்தினர்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள். ஐயா அவர்கள் அவருடைய வாழ்நாளில் செயற்கரிய மருத்துவ ஆய்வுகளை செய்து நாட்டு மக்களிடையே நல்ல பெயரும் புகழும் பெற்றுதான் பிரிந்து உள்ளார். எனவே ஐயாவின் ஆத்மா சாந்தி அடைய அவரை தினமும் நினைத்து இறைவனிடம் தியானம் செய்வதுடன் அவர் விட்டுச்சென்ற மூலிகை மருத்துவ பணியை மேலும் விருத்தியடைய செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். ஐயாவின் பூதவுடல் மறைந்தாலும் புகழ் உடம்பு இன்றும் என்றும் மறையாது. நம்மிடையே உலாவந்து கொண்டுதான் இருக்கிறது. கடைசியாக ஐயா அவர்களின் மூலிகையின் மருத்துவத்தினுலும், ஆய்வினுலும் அவர் நடத்திய மூலிகைமணி இகழ்களினுலும் பல மக்கள் பயன் அடைந்து ஒவ்வொருவரும் ஒரு சிறு வைத்தியர்கள் ஆகியும் பலன் அடைந்துகொண்டும் உள்ளார்கள். அவர் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் விட்டுச்சென்ற பணிகள்!

என்றும் அன்புள்ள,
பாஷா

சொ. வெங்கடாசலம் ஈரோடு

தங்களின் அன்புத் தந்தையும் சித்த மருத்துவ நிபுணரு மான, டாக்டர் கண்ணப்பர் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்தேன். அதிர்ச்சியுற்றேன். தங்களின் தந்தையின் மறைவு சித்த மருத்துவ துறைக்கு ஈடுசெய்ய இயலாத இழப் பாகும். அவரின் மருத்துவச் சிறப்பு இயல்புகளையும், அவரின் ஆய்வுகளையும் வார்த்தைகளால், வர்ணிக்க இயலாத ஒன்று ஆகும். இந்தச் சோகமான நேரத்திலே, தங்களுக்கு ஏற்பட் டுள்ள துயரத்திலே, நானும் உங்களில் ஒருவனுகப் பங்கு கொள்கிறேன். அவரின் பணியைத் தொடர்தலே அவருக்கு நாம் செய்யும் மரியாதை ஆகும்.

இவ்வண்ணம்
சொ. வெங்கடாசலம்

Miss. C. LE BEAU

மூலிகை மணி ஆசிரியரின் மறைவுச் செய்தியைப் படித்து ஆழ்ந்த துயரமுற்றேன். ஊருக்கெல்லாம் மருந்துரைத்து, அனைவரையும் வாழச் செய்த அவரை இறைவன் கொண்டு போக எப்படித் துணிந்தானே? மக்கள் உள்ளத்தில் அமரராக என்றும் நிலைத்திருக்கும் பேறுபெற்ற அவர் ஆன்மா சாந்தியுற இறைவனை இறைஞ்சுகின்றேன். 'கண்ணப்பர்' என்ற புனிதப் பெயர் 'கண்ணப்ப நாயனுர்' போலவே சரித்திரத்தில் இடம் பெற்று நீடு வாழும்.

இங்ஙனம்
Miss. Le Beau

S. J. உசேன் விழுப்புரம்

ஆசிரியர் இழப்பால் நான்மட்டுமே அல்லாமல், வாசகர் களும் மிகவும் சோக உணர்வுடன் இருக்கிறோம், இருப்பினும் இறைவன் அவசரப்பட்டுவிட்டார். என்ன செய்வது. திரு. க. வேங்கடேசன் அவர்கள் பொறுப்பில் அவரது அப்பணி இனிது தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
S. J. உசேன்



கண்ணப்பா வாழ்க நீயே!

கத்தும்அலை சூழ்கடலில் மூழ்கிமூழ்கி—நெடுங்
காததொலை மூச்சடக்கி நீந்தி நீந்தி
முத்தெடுத்து மீள்வதுபோல் மாதமாதம்—தமிழ்
'மூலிகைமணி' இதழ்தன்னை ஈரே ழாண்டாய்

சித்தியெனக் கொணர்ந்திட்ட மருந்துக் கோமான்
சீர்பரவு கண்ணப்பர் எங்கே எங்கே....!
வித்தையென மறைந்தாரோ மாயந் தானோ—இல்லை
விண்ணாட்டார் அழைத்தாரோ நாயந் தானோ....!

புத்துணர்ச்சி யோடுபதி னைந்தாம் ஆண்டில்
பூரித்து நடைதொடர்ந்த வெற்றி ஏறே,
எத்திக்கும் கடல்போல அவலம் தந்தே
எங்கேநீ மறைந்திட்டாய் என்றே காண்போம்....!

நந்துதமிழ் தணிகைமலை முருகன் தானே
நயமாக வேயுன்னை ஆட்கொண் டானோ....!
வித்தகனே, தத்துவமே, வேந்தே, நெஞ்சில்
வீற்றிருக்கும் 'கண்ணப்பா' வாழ்க நீயே!

—கவிஞர் க. அ. பிரகாசம்,
R. S. மருத்துவமனை, கொடுமுடி-1.

க. இராமசாமி **விழுப்புரம்**

மூலிகைகள் பற்றி மிகவும் துல்லியமாக ஆராய்ச்சி செய்து அவைகளின் மருத்துவ பயன் எனும் புதையலை தமிழகத்திற்கு அளித்த மாமன்னன் மறைவு தமிழகத்திற்கு, மருத்துவ உலகிற்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு. அன்னாரின் மருத்துவத் தொண்டினை தொடர்ந்து அவர் தம் மக்கள் செய்ய வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன்.

அன்புள்ள
க. இராமசாமி

க, மாணிக்கம் பிள்ளை **திருச்சி**

அடங்கா அன்பு மிக்க அருமை வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்கள் குடும்பத்திற்கு அயராது உழைத்து, அன்பே வடிவாகி, தமிழ் மருத்துவத் துறைக்கு தன்னிகரற்றப் புகழைத் தேடிவந்த தமிழ்த் திருமகன், தனிகைமலை பக்தன்; தாயகம், உறவினர், பந்துக்கள் அனைவரையும் தவிக்கவிட்டு இறைவன் திருவடி எய்தியதை முன்னிட்டு யானும், எனது நண்பர்களும், குடும்பமும் மீளா துயரில் உள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஓங்கார வேல் முருகன் அருள் புரியட்டும்.

இப்படிக்கு
க. மாணிக்கம் பிள்ளை

டாக்டர் தே. ஆண்டியப்பன் பிஎச்.டி.
இளநிலைப்பேராசிரியர் தமிழ்த்துறை,
அஞ்சல் வழிக்கல்வி நிலையம்,
மதுரை.

அன்பு வேங்கடேசன் அவர்களுக்கு,

தங்கள் தந்தை மூலிகை சித்தர் இயற்கை எய்தியதை அறிய மனம் மிகவும் துயருற்றது. தாங்கள், ஆராய்ச்சி கருத்தரங்கின் நிபுணராக ஆஸ்திரேலியா செல்லும் கருத்து உதித்த போதே தந்தையை விட்டுச் செல்வதா என்று மிகவும் வருந்தினீர்கள். இறைவனை வணங்கி அவர் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

அன்பு
தே. ஆண்டியப்பன்
மதுரைப் பல்கலைக்கழகம்

எஸ். குமாரசாமி ஸ்ரீவில்லிபுத்தூர்

மூலிகை மணி, ரோஜா மலரை தாங்கி 15—9—79 அன்று எங்கள் இல்லம் வந்தது. மலரை பிரித்து பார்த்த உடன் எங்களது இதய ரோஜா மலரை பறிக்கப்பட்ட அலங்கோல காட்சியை கண்ணுற்று பெருந்துயரில் சோர்வுற்று இருக்கின்றோம்.

மூலிகை என்னும் ஆழமான கடலில் நன் மருந்தென்னும் முத்துக் களை அவ்வப்போது எடுத்து அளித்து மக்களிடையே இருந்த நோய் நொடியினைப் பற்றிய அச்சத்தை போக்கினர் என்றால் அது மிகை யாகாது.

மூலிகை மணி குடும்பத்தினர் 'கண்கொடுத்த கண்ணப்பரை' இழந்து பரிதவிக்கும் காட்சியை திரு. க. வே. அவர்கள் சொற்களின் மூலம் அறிந்தோம். எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்து கொள்கின்றோம்.

அவர் அமரர் ஆனாலும் அவரது திருப்புகழ் மறையாது. வளரட்டும் அவரது திருத்தொண்டு!

இவண்,

எஸ். குமாரசாமி

பி. சண்முகசுந்தரம் R.M.P. திருச்செந்தூர்

மூலிகைமணி வாசகரான P. சண்முகசுந்தரம் R.M.P. (திருச் செந்தூர் தேவஸ்தான வைத்தியர்) ஆறாத வருத்தத்துடன் எழுதியது இன்று தங்களின் மூலிகை மணி பதிப்பு வரப்பெற்று அதில் மூலிகைமணி ஆசிரியரும், மூலிகை மன்னருமான தங்களின் பிதாவும் எங்களின் மூலிகை வரப்பிரசாத தந்தையுமான வேலூர் டாக்டர் ஏ.ஆர். கண்ணப் பர் ஆர். எம். பி. அவர்களின் பரமபதம் எய்தின நிருபத்தை பார்த்த வுடன் எனக்கு ஆராத்துயரம். எனக்கு கண்ணீர் வடிவதைக் கண்ட என் மகன் முருகேசன் அக்கம்பக்கத்தார் என்ன விஷயம் என்று கேட்டதற்கு நான் பதில் சொல்லவே முடியாது; நான் ஆண்டவனின் வரப்பிரசாதத் தந்தை எங்களைவிட்டு பரமபதம் அடைந்தார்கள்; இனி எக்காலத்தில் அன்னாரைப் பார்க்க முடியும் என்று பதில் சொல்லியும் என் மனப்பதற்றம் தீரவில்லை. நானென்ன இம்மூலிகை மணி வாசிக்கும் அத்தனை பேர்களுக்கும் திகிலும் மன வருத்தமும் ஏற்படும். ஆனாலும் தங்களுக்கு மிகுந்த கஷ்டங்களை தந்து சென்றுவிட்டார்கள், தங்களின் தந்தை. அவர்களின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றேன்.

அன்பன்

P. சண்முகசுந்தரம்

சோமயாஜி ராவ் தஞ்சாவூர்

தங்கள் தந்தை திடீரென்று இறந்தது கண்டு நானும் என்னைச் சேர்ந்த மற்ற வாசக நண்பர்களும் அதிர்ச்சியுற்றோம். மூலிகை மன்னருக்கா சாவு என்று ஆச்சரியப்பட்டனர். அதிலும் நான் தங்கள் தந்தை மீது மிகவும் பிரியத்துடன் இருந்தவன். நான் உண்மை யிலேயே நம்பவில்லை. ஒரு பையன் 'ரேடியோவில் சொன்னார்கள் நான் கேட்டேன்' என்றான். என்ன இருந்தாலும் இது எதிர்பாராத முடிவு இது. இப்பொழுது நடக்கக் கூடாதது. நீண்ட நாட்கள் கழித்து நடக்கக் கூடியது. திருத்தணி முருகன் அவரை சீக்கிரமாக அழைத்துக் கொண்டான், எல்லாம் அவன் செயல்தான். மூலிகை மன்னரும் சித்தர் களை வழிபட்டவருமான அவருக்கா இந்த முடிவு என்று எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது.

தாங்கள் தங்கள் தந்தையைவிட ஒருபடி மேலே நின்று இதுவரைக் கண்டுபிடிக்காத இன்னும் பல மூலிகைகளைக் கண்டுபிடித்து நல்ல மருந்துகளைத் தயார் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்கு ஆராய்ச்சி செய்யுமாறு வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள

R. N. சோமயாஜி ராவ்

கி. சதாசிவம் 'கண்ணகி மகன்' வாழப்பாடி, சேலம்

தந்தையார் மறைந்த செய்தி அறிந்து திடுக்கிற்றேன். வான ஊர்தி என்மீது வீழ்ந்திருப்பினும் வருந்தியிருக்க மாட்டேன். இரவு முழுதும் என்னால் உறங்க முடியவில்லை.

அறுபது வயது முடியும் முன்னரே செயற்கரிய செய்த மாமனிதர் சிலர் இம் மண்ணிலிருந்து மறைந்துவிடுகின்றனர். தமிழகம் தழைக்க வேண்டும், தமிழ்க் கலைகள் செழிக்க வேண்டும், நமது மக்கள் நோயற்ற நல்வாழ்வு பெறவேண்டும் என்பதை உயிர்மூச்சாகக்கொண்ட மூலிகை மன்னர், முருகனின் செல்வர் இன்று மறைந்துவிட்டார்.

காட்சிக்கு 'எளியவர்; கன்னல் மொழிச் சிறாரோடும் களித்து விளை யாடும் குழந்தை மனத்தினர்; தவறு காணின் தட்டித் திருத்தும் நல்லாசிரியர் மூலிகை மன்னர். வாழ்வின் முதற்படியிலிருந்து தொடங்கி உயர்வின் உச்சியை அடைந்தவர். உழைப்பு, உழைப்பு, இறுதிவரை உழைப்பு. கால் நூற்றாண்டுக்குள் இவர் உழைத்த உழைப்பு தமிழ்க்கலைக்கும், மக்களுக்கும் ஒளியும், உயிரும் தந்தது. மந்திர சக்திவாய்ந்த தமது எழுத்துக்களால் தமிழ் மருத்துவக் கலைக்குப்

புத்துயிர் அளித்தார். மூலிகைச் செல்வங்களால் அணிகள் பல செய்து அன்னைக்கு இவர் சூட்டிய மணியாரங்கள் தாம் எத்தனை! காலம் இவர் வாழ்வை அழியாக் காவியமாக்கும்.

உலக நாடுகள் முன் குன்று போல் நிமிர்ந்து நிற்க வேண்டிய நவ இந்தியா மேனாட்டுக் கலைகளால், காமக் கதைகளால், திரைக் காட்சிகளால் தன் ஜீவ சக்தியை இழந்து நோய் நாடாய் காட்சியளிக்கிறது. பசும் பயிர்களைப் பாழ்படுத்தும் இத்தீமைகளைத் தள்ளுவோம்; இள ஞாயிறுகளாய், எழில் நிலவுகளாய் இளம் சமுதாயம் எழுகவென அறைகூவியது மூலிகை மணி. நமது கலைகள், நமது மொழிகள், நமது நாடு எனும் தேசியப் பண் மூலிகை மணியின் உயிர் கீதமானது.

படித்திட எடுத்தால் பக்கங்கள்தோறும் காதலைப் படைக்கும் பத்திரிகைகளுக்கிடையில், தெய்வபக்தி, தேசப்பற்று, தாய்மைக்குப் பெருமை தந்தது மூலிகை மணி.

'நம் நாட்டு மூலிகைகள்' இயற்கை நமக்களித்த வரங்கள். இறைவனின் கருணை, நம் நாட்டு மூலிகைகளுடன் ஒன்றி வாழ்ந்த மூலிகை மன்னர்க்கு இயற்கையும், இறைவனும் இறவாப் புகழைத் தந்துள்ளனர்.

ஏழை எளியவர் பால் கருணையைப் பொழிந்த தாயை, 'அப்பா' வென அழைத்த சோதரியர் பலர் தம் உடற் பிணியைத் தீர்க்க வேண்டியபோது, 'அஞ்சற்க மகளே' என அரவணைத்த தந்தையை, தன்னை நாடியவர்க்கெல்லாம் 'திருமுருகன் திருவருளும், ஆசியும் உண்டாகுக' என மனதார வாழ்த்திய இந்த அன்பு தெய்வத்தை இனி என்று காண்போம்?

கணமேனும் முருகனை மறவாத இந்தத் தமிழ்ப் பெரியாரின் திருப் பெயரும், புகழும் இம் மண்ணிலே பைந்தமிழும், பசுந்தளிரும் உள்ள வரை நிலைத்திருக்கும்.

'மூலிகை மணி' நமது இல்லமும், நாடும் ஒளிபெற அவர்கள் ஏற்றி வைத்த சுடர் விளக்கு. இவ்விளக்கினை மயங்காது, அணையாது காப்பது தமிழர் தம் தலையாய கடமையாகும்.

தமிழன்னை தந்த மாமணி மூலிகை மன்னர்க்கு என் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறேன். அவர் தம் நல்லுயிர் முருகன் திருவடியில் அமைதிபெறுவதாக.

அன்பு,

கி. சதாசிவம்



தொடக்க காலத்தில், ஓமியோபதி, சித்தமருத்துவ சங்கங்களை அமைத்து அதற்கென ஓயாது உழைத்தார்.

வேலூரில் 1960-இல், அவர் நடத்திய சித்த மருத்துவ சங்க மாநாட்டின் புகைப்படக் காட்சி. கீழிருந்து இரண்டாவது வரிசையில் இடதுபுறக் கோடியில் முதலில் ஆசிரியர் உட்கார்ந்திருக்கின்றார்.

தமிழகத்தின் சிறந்ததோர் மருத்துவர் மறைந்தார்

மூலிகை மணி ஆசிரியரும் சித்த மருத்துவத்திற்கு அநேக தொண்டுகள் செய்து அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வந்த உத்தமரை தமிழகம் இழந்துவிட்டது. தமிழகம் தந்த வேலூர் மருத்துவர் **ஏ. ஆர். கண்ணப்பர்** அவர்கள் தமது 59ஆம் வயதில், 1—9—79ம் தேதி மரணச் செய்தி கேட்டு தமிழக மருத்துவர்கள் தாங்கா துயரம் அடைந்தார்கள். அன்னாரின் ஆத்மா சாந்திபெற தமிழக ஹோமியோ, சித்த டாக்டர்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் R. S. V. ஜெயபால்ராஜ்.
ஆசிரியர்
ஹோமியோபதி தொண்டன்
(மாத இதழ்)

K. P. சந்திரசேகரன் கள்ளிப்பட்டி

தங்கள் தந்தையார் மூலிகை மணி ஆசிரியர் உயர் திரு. A. R. கண்ணப்பர் அவர்கள் இம் மண்ணுலக வாழ்வினை நீக்கி இறைவன் இருப்பிடம் சேர்ந்தமையை மூலிகை மணி பங்குனி-சித்திரை மாத இதழில் கண்டு பேரதிர்ச்சியடைந்தேன். தெரிந்தும் பயன் அறியாது இருந்துவந்த பல ஆயிரக் கணக்கானவர்களுக்கு மூலிகைகளின் குணுதி சயங்களைத் தெரிவித்து பயனடையச் செய்த சேவையை இந்த தமிழக மக்கள் போற்றியும் அவர்கள் தெரிவித்தபடிக்கு, மூலிகைகளை உபயோகித்து பலனடைவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அன்பன்

K. P. சந்திரசேகரன்

C. K. அப்துல்ரஹிம்சாயபு சித்தூர்கிராமம்

சித்தர்கள் மூலிகைகளைப் பற்றிய பாடல்களை பாடிவிட்டு சென்றுர்கள் கண்ணப்பர் அதை படம்பிடித்து யாவருக்கும் காட்டிவிட்டு அமரத்துவம் அடைந்தார். உங்கள் அனைவரையும் சித்த மருத்துவர்களாக ஆக்கிவிட்டார். உங்களை Ph. D.யாகவும் ஆக்கிவிட்டார். நீங்கள் இதை இன்னும் அதிக கவனத்துடன் நடத்தி அவர் ஆத்மா சாந்திபெறச் செய்வீர் என்று பிரார்த்திக்கிறேன். எத்தனை காலம் பிழைத்தாலும் ஒரு நாள் இத்தரை வாழ்வுகளை எல்லாம் விட்டு சென்றுதான் தீருவோம் எல்லோரும். வாழ்க அமரர் கண்ணப்பர்.

இப்படிக்கு

C. K. அப்துல்ரஹிம்சாயபு

இ. பொன்னுசாமி தேவர் விக்கிரமசிங்கபுரம்

மூலிகை மணி இதழை பார்த்தவுடன் ஒரு சில நிமிடங்கள் எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. அப்படியே ஸ்தம்பித்து உட்கார்ந்துவிட்டேன், எப்படிப்பட்ட ஒரு மருந்துப் பெட்டகத்தை இத்தாயகம் இழந்து விட்டது. இனி அப்படிப்பட்ட ஒரு மகான் வருவாரா? நிச்சயமாக மாட்டார். அவரின் பிரிவு என்னுல் தாள முடியவில்லை. மேலும் நேரில் காண முடியாத ஆத்மாவாகிவிட்டேன் நான்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என் மனமார்ந்த ஆழ்ந்த அனுதாபம்.

இப்படிக்கு

இ. பொன்னுசாமிதேவர்

டாக்டர் ஆர். கல்யாணசாமி மார்க்கம்பட்டி

தங்கள் தந்தை மரணம் என்னை மிகவும் வருத்தம் அடையச் செய்தது. அவர் மறைவு குறித்து 'குமுதம்' வாரஇதழ்மூலம் அறிந்தேன்.

மூலிகை மணி மூலம் தமிழகம் அடைந்து வந்த பெரும் வளர்ச்சியில் ஒரு இடையூறு ஏற்பட்டுள்ளது. அதைத் தாங்கள் நல்லமுறையில் நிறைவு செய்வீர்கள் என்று கருதி விடைபெறுகிறேன்.

நன்றி,

டாக்டர் கல்யாணசாமி

Dr. R. Swaminathan, R.M.P. Melapalaiyur. P.O.

நேற்றய தினம் 'குமுதத்தில்' பார்த்த செய்தியைக் கண்டதும் திடுக்கிட்டுப்போனேன். பெரியவர் ஸ்ரீ கண்ணப்பரின் திடீர் மறைவு சித்த வைத்தியதுறைக்கும், பாமரமக்களுக்கும் குடும்பத்தாருக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். 'தினமணி' 'மூலிகைமணி' வழியாய் பாமரமக்களெல்லாம் மறைந்து கிடந்த மருத்துவத்தை மலரச்செய்தார். அவர் பூதவுடல் மறைந்தாலும் புகழ் ஓங்கி வளர்கிறது. மிகுந்த துயரமுற்றிருக்கும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள்,

R. SWAMINATHAN.

S. Annamalai, Teacher, Thondamanatham P.O,

மூலிகைமணி ஆசிரியர் அவர்கள் இறைவனடி சேர்ந்தமையை அண்மையில் வெளிவந்த மூலிகைமணி இதழில் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். மூலிகையின் புகழை திக்கெட்டும் பறைசாற்றிய முரசம் ஓய்ந்து விட்டதை எண்ணி என் கண்கள் கலங்குகின்றன. வானுலகில் நோய் அதிகமாகிவிட்டதால் வானோர்க்கும் இத்தகு மருத்துவர் தேவைப்பட்டார் போலும். தந்தையைப் பிரிந்து வாடும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தார்க்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தங்கள்,

S. ANNAMALAI

எஸ். எஸ். குமாரசுவாமி

நெய்வேலி

அன்புடையீர்,

டாக்டர் கண்ணப்பர் அவர்கள் எதிர்பாராது பரமபதம் அடைந்தது கண்டு மிகவும் வருந்தினேன். ஆரம்ப முதல் அவருடைய கட்டுரைகளையும் வெளியீடுகளையும் வாசித்துவரும் நான் அவரை என்றும் மறக்க முடியாதவனுகிறேன். நோய் என்ருல் என்ன, மூலிகைகள் என்ருல் என்ன என்று தெரியாத நிலையிலிருந்த என்னைப்போலுள்ள அனேக மக்களுக்குப் புரியவைத்து நாட்டுக்குச் சேவை செய்தவரை மக்களும் நாடும் இழந்துவிட்டது பெரும் துர்பாக்கியமே. அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன். மற்றும் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள

எஸ். எஸ். குமாரசுவாமி

சி. வி. கோபால்

வேலூர்

அன்பு நண்பா,

நின் தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆராத் துயரமும் அடைந்தோம். சொல்லொண்ணு துயரம் நெஞ்சை அடைக்கிறது. ஈடுசெய்ய முடியாத பேரிழப்பை நீவிர் எப்படித்தான் தாங்கிக் கொள்ளப்போகின்றீர்களோ! பாவியானேன். இதயத்தில் தாங்க முடியாத துயரம் இருப்பதால் உங்களுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று கூட புரியவில்லை.

இறைவன் உங்களுக்கு இத்தகைய துன்பத்தினை அளித்திருக்கக் கூடாது. 'கல்லடி பட்டாலும் படலாம் கண்ணடி படக்கூடாது' என்பது பெரியோர் வாக்கு! அது உங்கள் வாழ்க்கையில் உண்மையாக இருக்கின்றது. எனவே நீவிர் மிக்க கவனத்துடன் இருக்கவும். கருணைக் கடவுள் கந்தன் உங்கள் உடன் இருப்பான். கவலையைப் போக்குவான். விரைவில் நேரில் வந்து காணுகின்றேன்.

உங்கள் அன்பு மறவா

சி. வி. கோபால்

இயற்கை நல்வாழ்வு சங்கம் உடுமலைப்பேட்டை


வானொலி, அலை ஓசை இதழ்மூலம் செய்தி அறிந்து அளவற்ற துயரம் அடைந்தோம். உலகம் மிகச் சிறந்த சித்த மருத்துவரை இழந்தது. ஈடுசெய்ய முடியாத இழப்பு. மருத்துவரின் குடும்பம் இதைத் தாங்கக் கூடிய இதய வலுவை கொடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள
உடுமலை நண்பர்கள்

எம் மூலிகையை? எங்கே தேடுவது?

குடத்தினுள் விளக்கென இருந்திட்ட
சித்த மருத்துவ மதனை
குன்றிலிட்ட தீபமென பாரெங்கும் பரப்பிய
வேலூர் மருத்துவரே-மூலிகை மாமணியே
உமது பிரிவால் ஏற்பட்ட நோய் தீர
எம் மூலிகையை, எங்கே தேடுவது?
கண்ணீர் நிரம்பிய விழிகளுடன்
கவலை தோய்ந்த உள்ளங்களுடன்
காலம் செய்துவிட்ட கொடுமையை
தாங்காது அழுகின்ற நெஞ்சங்களின்
துயரத்தை பங்கிட்டுக் கொள்கின்றோம்
ஆறுதல் கூறிக்கொள்கிறோம்
எங்களுக்கு நாங்களே—
அவர்விட்ட பணிதனை தொடர்ந்திடவே
எதிர்நோக்கி ஆதரவு தருகின்றோம்
ஆருதுய ருற்றிருக்கும்—அவர்தம்
இல்லத்தார்க்கு ஆறுதல் அளித்திடவே
இறையை வேண்டுகிறோம்
இருகரம் கூப்பியே!

இவன்,
M. S. பாக்கியராஜ் மற்றும் உறுப்பினர்கள்
மூலிகை மணி வாசகர் வட்டம்
கோவை-19.



('பள்ளிப் பருவத்திலேயே மூலிகை அறிவைப் புகட்ட வேண்டும்' என்பது அவரது ஆசை. அதற்காக, பள்ளிக்கூடங்களில் சென்று அவர் பள்ளிப்பிள்ளைகளுக்கு மூலிகை அறிவைப் பற்றி உரை நிகழ்த்துவார். வேலூருக்கருகே உள்ள ஒரு பள்ளியில் அவ்விதம் உரையாற்றும் காட்சி.)

பா. இறையரசன் எம்.ஏ., தஞ்சாவூர்

தங்கள் தந்தையார் மூலிகைமணி கண்ணப்பர் மறைவுச் செய்தி அறிந்து வருந்துகிறேன். தங்கட்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் மட்டு மல்லாமல் தமிழுலகிற்கே இழப்பாகும் அவர் மறைவு! அவர் ஆன்மா நிறைவுக்கு இறையடி பணிவோம்.

அன்பின்

பா- இறையரசன்

கே. ஆர். எம். எஸ்டேட் மன்னார்குடி

தங்கள் அருமைத் தந்தை 'கண்கொடுத்த கண்ணப்பர்' பரமபதம் அடைந்தார் என்னும் செய்தி அறிந்து வருந்தினேம். நூல் நிலைய வாசகர்களும் நாங்களும் உங்களுக்கு ஆறுதலும் திடனும் சொல்ல விரும்புகிறேம். திரு. கண்ணப்பர் ஆத்மா ஸ்ரீமந்நாராயணன் அருளால் சாந்தியடையும்.

தந்தை அடிச்சுவட்டில் அவர் செய்துவந்த பணியை தாங்கள் திறம்பட செய்யும் வல்லமை உங்களிடம் இருக்கிறது. தொடர்ந்து செய்யுங்கள்.

மானேஜர்

P. SAMPATH
Dept. of Plant Physiology
Madurai Kamaraj University
MADURAI

பேரிடி போல் ஓர் செய்தி இரண்டு நாட்களுக்கு முன்பு கேட்ட போது அதிர்ந்து போய்விட்டேன். தங்கள் தந்தையார் மறைவு கேட்டு அதிர்ச்சியும், மிக்க வருத்தமும் அடைந்தேன். தாங்கள் ஆஸ்திரேலியா சென்றிருப்பீர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்திலே இது எதிர்பாராத ஒரு துன்பமாக நம் எல்லோருக்கும் அமைந்துவிட்டது.

என் செய்வது எல்லாம் வல்ல இறைவன் நம்மிடமிருந்து நல்லவர்களை, நாம் மிக்க அன்புடன் நேசிப்பவர்களை பிரிப்பதை ஓர் விளையாட்டாக நிகழ்த்துகின்றார்.

தங்கள் தந்தையார் வாழ்வு சிறக்க அமைந்தது. நாடு போற்றும் நல்லவராக, 'குமுதத்தில்' 'அரசு' குறிப்பிட்டிருந்ததுபோல் "மூலிகைகளுக்கு கைகால்கள் இருந்தால் கண்ணப்பரைத் தலையில் தூக்கி வைத்து மகிழ்ச்சி கூத்தாடும்" அளவிற்கு மிக மிக செம்மையாக இவ்வுலகில் என்றும் தன் பெயர் நிலைக்கச் செய்தார். 'தோன்றின் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' என்ற குறளுக்கேற்ற வாழ்க்கையையும், நமக்கு ஏராளமான அனுபவ அறிவையும் ஈந்துவிட்டு மறைந்தார்.

அவர் இழப்பால் வாடும் சகோதர சகோதரிகட்கும், தாயாருக்கும், தங்கள் துணைவியாருக்கும் என் வருத்தத்தைக் கூறவும்.

மறைந்த திருவுள்ளத்தின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அவர் விட்டுச்சென்ற பணியினை தொடர்ந்து செவ்வனே செய்ய உறுதிபூண்டு செயல்படுவோம்.

அன்புடன்
P. சம்பத்

ரெ. சீனிவாசன் சொக்கலிங்கபுரம்

மதிப்பிற்குரிய ஐயா, தங்களின் தந்தையார் இறைவனடி சேர்ந்தமை அறிந்து பெருந்துயருற்றேன். மூலிகை உலகிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

இவண்,
ரெ. சீனிவாசன்

அமரர் கண்ணப்பருக்கு
தமிழக அரசு அளிக்கும் சிறப்பு அஞ்சலி

14-10-79 அன்று சென்னை ராயப்பேட்டை திரு.வி.க. மணி மண்டபத்தில்.

முதுபெரும் பேராசிரியர் **அ. மு. பரமசிவானந்தம்** அவர்கள் தலைமையில், மூலிகை மணி வாசகர்கள் நடத்திய புகழஞ்சலிக் கூட்டத்தில்,

அருள் மொழியரசு

திருமுருக. **கிருபானந்தவாரியார்** சுவாமிகள்,

பேராசிரியர்கள், வாசகர்கள், சித்த மருத்துவர்கள் நிறைந்திருந்த சான்றோர் அவையில்,

தமிழக அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு **R. சௌந்திரராசன்** பி.காம். அவர்கள்

அவையோரின் மகிழ்ச்சி நிறைந்த கரவொலிக்கிடையே, பின்கண்ட, அருள்நிறைந்த அறிவிப்பினை

'அமரர் கண்ணப்பருக்கு'

தமிழக அரசு செய்யும் சிறப்பஞ்சலியாகச் செய்தருளினர்.

இவ்வறிவிப்பினைச் செய்தருளிய அமைச்சர் பெருமகனுருக்கும், தமிழக அரசுக்கும், நெஞ்சு நிறைந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்,

மூலிகை மணி.



மாண்புமிகு அமைச்சர் சிறப்பஞ்சலி செலுத்துகின்றார்.

"இன்றைக்கு அரசு சார்பில் உருவாக்கப்படுகின்ற ஒரு மூலிகைப் பண்ணைக்குக் 'கண்ணப்பருடைய பெயர்' சூட்டப்படும் என்பதை இந்த மேடையின் வாயிலாக

நான்

எடுத்துச் சொல்லி,

திருவரங்கத்தில் உருவாக்கப்படுகின்ற

மூலிகைப் பண்ணை

மூலிகை மன்னர் கண்ணப்பர்


பெயராலே விளங்கும்"

என்பதையும் நான் இந்த நேரத்திலே இங்கே வெளியிட விரும்புகின்றேன்.

காரணம்,


"அவர்தான் இந்த மூலிகைகளை நம்முடைய கரங்களிலே இன்றைக்குத் தந்திருக்கின்றார்கள்."

அமரர் மூலிகை மன்னருக்கு சான்றோர் செலுத்திய புகழஞ்சலி



சென்னையிலுள்ள திரு. வி. க. மணி மண்டபத்தில் 14—10—79 ஞாயிறு அன்று முதுபெரும் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தலைமையில், பல்துறை சான்றோர் அமரர் மூலிகை மன்னருக்குப் புகழஞ்சலி செலுத்தினர். அதன் புகைப்படக் காட்சியையும், புகழஞ்சலிக் கருத்துரையையும் பின்வரும் பக்கங்களில் காணலாம்.

அமரர் மூலிகை மன்னரின் திருவுருவப் படத்தினை அவர்களின் குருநாதர், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தும் காட்சி:-




நேரிசை வெண்பா

கல்வி நலமுடைய கண்ணப்பர் நம்பியுயர்
பல்வண்ண மூலிகைப் பண்பதனை—நல்விதமாய்
மண்ணுலகம் உய்ய வழங்கினன் வாழியவே
விண்ணுலகம் போற்றும் வியந்து.

அன்பன்,


கிருபானந்தவாரி.

மாண்புமிகு தமிழக நல்வாழ்வுத் துறை அமைச்சர் திருச்சி ஆர். சௌந்திரராசன் பி. காம். அவர்கள் மூலிகை மன்னருக்கு அஞ்சலி செலுத்துகின்றார்:-



சித்த மருத்துவ உலகிற்குக் கிடைத்த 'ஒரு வாரியார், கண்ணப்பர்' என்று கூறலாம். வால்மீகி அளித்த இராமாயணத்தை, கம்பன் தமிழில் காவியமாக்கினான் என்றால் அதனைப் பட்டி தொட்டிகளில் மேடையேற்றிய பெருமை வாரியார் சுவாமிகளுக்கு மட்டுமே உண்டு. அதுபோல், எங்கோ, புதை குழியில், பரிபாஷையில் பதுங்கிக் கிடந்த மூலிகைச் செல்வங்களைக் கண்டு பிடித்து கடந்த 20 ஆண்டு காலமாக தமிழகமெங்கும் வாரி வழங்கிய வள்ளல் அமரர் கண்ணப்பர் அவர்களை, 'மூலிகை உலகில் ஒரு வாரியார்' என்று குறிப்பிடுவதில் தவறில்லை!

அமரர் கண்ணப்பரின் அருமை நண்பர் திரு. மு. பெருமாள் முதலியார் அவர்கள் அஞ்சலி செலுத்துகின்றார் :-



''குழந்தை போன்ற நெஞ்சம் உள்ளவர். சித்த மருத்துவம் தவிர, வேறெந்த மருத்துவமுறையையும் பின்பற்ற விரும்பாத பிடிவாத குணம் உடையவர் என்பதை என் அனுபவத்திலேயே உணர்ந்தேன். குருநாதர் வாரியார் சுவாமிகள் மீதும், தணிகை முருகனின் மீதும் அளவற்ற பக்தி கொண்டவர். சித்த மருத்துவ வளர்ச்சிக்கு அயராது தொண்டு செய்தது மட்டுமின்றி, மூலிகைகளுக்கு என்று முதன்முதலாக பத்திரிகை ஒன்றை வெளியிட்ட பெருமையை அடைந்தவர்.''

முதுபெரும் தமிழ்ப்பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் புகழஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து அஞ்சலி செலுத்துகின்றார் :-



'மூலிகை வளமே நாட்டு வளம்' என்று காலமெலாம் முழங்கி வந்தது மட்டுமின்றி, பலருடைய நோய்களைக் களைந்து நல்வாழ்வு நல்கி, அத்துறையில் தமது குடும்பத்தினரையும் ஈடுபடுத்தி அரும்பணி ஆற்றிய மூலிகைமணி கண்ணப்பரை, இவ்வளவு சீக்கிரம் இழந்தமைக்கு, ''தமிழகம் செய்த தவக் குறைவே'' காரணம்.

'தினமணி ரமணி' அவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்து கின்றார் :-




கண்ணப்பருடன் 15 ஆண்டுகள் ஆத்மார்த்தமாகப் பழகிய வன் நான். வெளிப்படையாகப் பேசும் குழந்தை மனம். அவருடைய வாழ்க்கை ஒரு Purposeful வாழ்க்கையாக அமைந்தது பெருமைப் படத் தக்கது. எதிர்காலத்தில் தோன் றப் போகும் ஒரு True Historian தான் கண்ணப்பரின் பணி யைப் பற்றி முழுமையாக Assess செய்யமுடியும். அவருக்குப் பின் அவர் பணியை ஆற்றவுள்ள வெங்கடேசனையும் நான் முழுமையாக அறிவேன். கண்ணப்பர் நினைத்த பணிகளை மிகச்சிறப்பாக ஆற்றும் திறனை வெங்கடேசன் பெற்றுள்ளான் அதனை எண்ணி ஆறுதலடையலாம்.

'சேவைக்கோர் அரசி' திருமதி ரெஜினு வின்செண்ட் அவர்கள், தன் குருநாதர் அமரர் கண்ணப்பர், தமக்களித்த மருத்துவ அறிவை நினைவுகூர்ந்து நெகிழ்ந்து உரையாற்றும் காட்சி:-




''எனக்கு மூலிகைகள் பற்றிய அறிவை அளித்த என் குருநாதர் டாக்டர் கண்ணப்பர் இவ்வளவு சீக்கிரம் மறைந்து விடுவார் என்று எதிர்பார்க்கவே இல்லை. அவர் கூறிய பல மூலிகைகளை, என் வீட்டிற்குவரும் வெளிநாட்டுப் பிரமுகர் களுக்கு உணவு வகையாகவே சமைத்து அளித்து, வயிற்றுக் கோளாறு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களைக் குணப்படுத் திய செய்திகளை அவர் கேட்டு, குலுங்கி ஆனந்தக் கண்ணீர் விட்டு, வீட்டிலுள்ளவர்களிடம் பெருமையாக என்னைப் பற்றிக் கூறி மகிழ்வார். இந்தக் காட்சி இன்னும் என் முன் காண் கிறேன்.''

காஞ்சிபுரம் டாக்டர் சிற்சபை அவர்கள், புகழுரை ஆற்றுதல் :-



20 ஆண்டுகாலமாகப் பழகிய நண்பர் கண்ணப்பர் மறைவு சித்த மருத்துவ உலகிற்கு பெரும் இழப்பாகும். இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் நானும் அவரும் சேர்ந்து அமைத்த 'மூலிகைக் கண்காட்சி' மிகச் சிறப்பான பயனைத் தந்தது. அவர் ஆற்றிய பணி, காலம் கடந்து நிற்கும். தன் மகனையும் இதே பணியில், மேலும் உலகெங்கும் பரப்ப—ஆங்கிலத்தில் இதழ் நடத்த திட்டமிட்டிருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கது. சித்த மருத்துவ உலகு பாராட்ட வேண்டிய அறிஞர் டாக்டர் கண்ணப்பர் என்பதில் ஐயமில்லை.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள், மூலிகை மன்னருடன் தனக்கேற்பட்ட அனுபவங்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்தல் :-



''மிகவும் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டவர், அமரர் கண்ணப்பர். மருத்துவத் துறையில் மிகச் சிறந்த சாதனைகளைப் புரிந்தது போல் தன் குடும்பத்தையும் பண்பட்ட முறையில் வளர்த்துள்ளார் என்பதைப் பல அனுபவங்களில் உணர்ந்துள்ளேன். திரு. G. D. நாயுடு போன்ற சான்றோர் களின் உள்ளத்தில் கண்ணப்பர் பெற்றிருந்த சிறப்பான இடத் தினை நேரடியாகக் கண்டவன் நான்.


'மூலிகை மருத்துவப் பணிக்கெனத் தன்னையே அர்ப்பணித் ததுமட்டுமின்றி, தனக்குப் பின்னும், அப்பணியைச் செம்மை யுற ஆற்றிட, தன் குடும்பத்தை நல்ல முறையில் உருவாக்கித் தந்துள்ளார். அவர் புகழ் என்றும் நிலைப்பதாக!

சித்தர் நெறி ஆய்வாளர் டாக்டர் இரா. மாணிக்கவாசகம் பிஎச்.டி, அவர்கள், அமரர் கண்ணப்பரின் அரிய மருத்துவ ஆற்றலை நினைந்து போற்றுகின்றார்.



''தமிழ் மருத்துவச் சித்தர் என்றே அவரைக் குறிப்பிடு வேன். பல்வேறுமுறை அவருடன் உரையாடும்போது பல பரிபாஷைக் குறிப்புகளை அவரிடமிருந்து பெற்று என் நூல் களில் பயன்படுத்தியுள்ளேன். சித்தர்கள் அழிவதில்லை, உருமாறுவார்கள். தனக்குப்பின் தன் தனயனை அவர் இத் துறையில் மேலும் வளருமாறு ஈடுபடுத்தியிருப்பது, அவர் பெருமைக்கு ஓர் அணிகலனாகும். கண்ணப்பர் மறையவில்லை. சித்தனாக உருமாறியுள்ளார்.''

'இந்திய மருத்துவ இயக்குனர்' துறையில் பாடநூற் புத்தகக் குழுவின் தனி அலுவலராகப் பணியாற்றி வரும் டாக்டர். சாமுவேல், M. D. (சித்தா) அவர்கள் அஞ்சலி செலுத்துகின்றார்.



''அமரர் கண்ணப்பருக்கு வாய்த்த பல 'ஏகலைவன்'களில் நானும் ஒருவன். அவர் எழுதியுள்ள 'நம் நாட்டு மூலிகைகள்' புத்தகம் எனக்கு அரிய பொக்கிஷம். பாளையங்கோட்டையில் சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு 'மூலிகை வகுப்பு' நடத்த பேருதவி புரிந்தவை இவர்தம் நூல்கள். ½ மணி நேரம்கூட நடத்த முடியாத 'மூலிகை வகுப்புகளை', இவர் நூல்களின் துணையால், இரண்டு மணி நேரம் நடத்தியுள்ளேன். அதற்காகவே இக்கூட்டத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

அமரர் கண்ணப்பரின் மூத்த மகன் க. வேங்கடேசன், குடும்பத்தார் சார்பில் துயரமே நிறைந்த கண்ணீருடன் அஞ்சலி உரையாற்றிய போது, அவையோர் கண்கள் பனித்தன.



‘‘தன் தனயனுக்குக்கூட சித்த மருத்துவ முறையைச் சொல்லமாட்டார்கள் சித்த மருத்துவர்கள்’’ என்ற குற்றச் சாட்டினைத் தகர்த்தெறியும் வகையில், எனக்கு மட்டுமின்றி, தமிழகமெங்கும் நூற்றுக்கணக்கான ‘மூலிகைச் செல்வங்களை’ப் பயிற்றுவித்து ஆயிரக்கணக்கான வாசகர்களை, எனக்கு நிலையான சொத்தாக்கி, இன்று எங்கள் தெய்வமாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கும் எங்கள் தந்தையார், எனக்குத்

தந்தையாக


நல்லாசிரியனாக

நண்பனாக

இருந்து அளித்த 'நல்வாழ்வினை' நினைந்து நினைந்து போற்றுகின்றேன்; இன்று அமரராகி 'வழிகாட்டியாக' இருந்து என்னையும் அவர் பணியில் அயராது அழைத்துச் செல்லும் நிலையை எண்ணி எண்ணி நெகிழ்கின்றேன். மகனாக, மாணவனாக, இதுநாள் வரை இருந்த நிலை மாறி, இன்று முதல் அவரை வழிபடும் பக்தனாக, தொண்டனாக மாறி,


'மூலிகை வளர்ப்போம்
உடல் நலம் காப்போம்'

எனும் முழக்கத்தினை உலகெங்கும் பரப்ப முயல்வேன், என்பதை 'என் குடும்ப அஞ்சலியாக' அவரின் தெய்வத்திருவடிகளில் காணிக்கையாக்குகின்றேன்.



புகழஞ்சலி செலுத்த வந்திருந்த
சான்றோர் பெருமக்களின் திருக்கூட்டம்.

கண்ணப்பரின் நூல் வெளியீடு



அமரர் கண்ணப்பர் எழுதிய
'புகழ்பெற்ற மூலிகைகள்'
எனும் நூலின் புதிய பதிப்பினை
நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திருச்சி ஆர். சௌந்திரராசன் பி.காம்.
அவர்கள் வெளியிட,
அருள்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
முதற் பிரதியினை பெற்றுக்கொள்கிறார்.

அமைச்சருக்கு சால்வை போர்த்துதல் :—



தமிழகமெங்கும் மாவட்டந்தோறும் 'மூலிகைப் பண்ணை' அமைக்க வேண்டும் என்பது அமரர் கண்ணப்பரின் ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றும் வகையில், மூலிகை மருத்துவத்தில் அளப்பரிய ஆர்வம் கொண்டுள்ள, 'முதல்வர் அளித்த நல்முத்து' மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் R. சௌந்தரராசன் அவர்கள்,

'ரூ. 46 லட்சம் செலவில், 'மூலிகைப் பண்ணை வாரியம்' அமைத்து அதன் கீழ் ஐந்து மாவட்டங்களில் 'மூலிகைப் பண்ணை' அமைக்கத் திட்டமிட்டுள்ளார்.'

மூலிகை மணி ஆசிரியர் திரு, க. வேங்கடேசன் அவர்கள் இந்த அறிவிப்பினை நெஞ்சார வரவேற்று, அதனைப் போற்றும் வகையில், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் திருக்கரத்தால், அமைச்சருக்கு சால்வை போர்த்தி பாராட்டும் காட்சி.

அமரர் கண்ணப்பருக்கு
இரங்கற்பா புகழஞ்சலி!

சித்தமருத்துவ சீர்மிகு குருவாய்—என்றும்
சிந்தைகுளிர நினைவினில் இருப்பாய்!

ஆண்டுகள் இருபது அயராது உழைத்து—நேத்திரப்
பூண்டுத்தைலத்தால் கண்கொடுத்த உத்தமனே!

மூலிகை பலகொண்டு நோய்தீர்த்தாய்—தேடி
பலவகை பட்டங்கள்தான் சேர்த்தாய்!

சரித்திரம் புகழும் பேர்கொண்டாய்—சித்த
மருத்துவக் காவலராய் உயர்பெற்ருய்!

நல்வாழ்வு நம்மக்கள் பெறுதற்கே—என்றும்
நின்வாழ்வு தியாகமதாய் ஆனதுவே!

'மூலிகை மணி' கண்ட மன்னவனே—எம்
மூச்சினில் என்றென்றும் கலந்திருப்பாய்!

எமைவிட்டு பிரிந்து நீ சென்ருலும்—கண்
இமைபோல புகழ்காப்போம், வாழியவே!

காலன்தான் உனைக்கொண்டு சென்ருலும்—காலம்
உள்ளவரை நின்பணி போற்றிடுவோம்!

—இயற்றியவர்: கவிஞர் இரா. தமிழன்பன், *சீர்காழி.*

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் திரு. க. வேங்கடேசன் எம்,ஏ.
22, திருமலைப்பிள்ளை வீதி, எண். 2
தி. நகர், சென்னை-600 017 தொலை பேசி: 442947
அச்சிட்டோர்: மூலிகைமணி அச்சகம், 9, கிளப் ரோட் கிழக்கு,
செனுய்நகர், சென்னை-600030.

மூலிகை மருத்துவ ஆலோசனை

ஆசிரியர் க. வேங்கடேசன் அவர்களைச் சந்திக்க

மூலிகை ஆராய்ச்சியாளரும், மூலிகை மணி ஆசிரியரு மான க. வேங்கடேசன் அவர்களிடம் மருத்துவ ஆலோசனை பெற நேரிலும், அஞ்சல் வழியிலும் தொடர்பு கொள்ளலாம்.

அஞ்சல் வழித் தொடர்பு கொள்வோர்,
நோயின் குறிகுணங்கள், நோய்நிலை, வயது, உடல் வலிமை,
தொழில், பழக்க வழக்கம்,

போன்ற குறிப்புகளை எழுதி 30 காசு அஞ்சல்தலை இணைத்து அனுப்பினால், 'மூலிகை மருத்துவ ஆலோசனை' இலவசமாக வழங்கப்பெறும்.

நேரில் வரும் அன்பர்கள் காலை 7 முதல் 11 மணி வரையிலும் கீழ்க்கண்ட முகவரியில் சந்தித்து ஆலோசனை பெறலாம்.

இரத்த மூலம் (Bleeding Piles), ஆஸ்த்துமா (Asthma), எரிகுன்மம் (Pepticulcer), வலிகுன்மம் (Gastric ulcer), வெண்மேகம் (Leucoderma), சர்ம நோய்கள் (Psoriosis), வெள்ளை, வெட்டை (Leucorria), மண்டைப் பீனிசம் (Synisitis), தலைவலி (Head ache) போன்ற நோய்கட்கும், இல்லற வாழ்வின் இனிய நல்வாழ்வுக்கும்,

அமரர் கண்ணப்பரின் மருத்துவ முறையுடன், தன் நேரடி ஆராய்ச்சி அனுபவ முறைகளையும் இணைத்து நலம் தரும் மூலிகை மருத்துவ ஆலோசனை வழங்குகின்றார். மேற்குறித்த நோயுடைய அன்பர்கள் அவரிடம் நேரிலும் அஞ்சல் வழியும் ஆலோசனை பெறலாம்.

முகவரி : கண்ணப்பர் மூலிகை ஆராய்ச்சி இல்லம்
திருமலைப்பிள்ளை வீதி எண்-2, தி. நகர், சென்னை-17.
தொலைபேசி : 442947. அ. பெ. எண் : 1406.

அட்டைப்பட விளக்கம்

முன்புறம் : 'மஞ்சள் கரிசலாங்கண்ணி'-விவரம் நம்நாட்டு மூலிகை கள் இரண்டாம் பாகத்தில் காணலாம்.

பின்புறம் : மூலிகைகளோடு மூலிகையாக ஒன்றிவிட்ட அமரர் கண்ணப்பரின் திருவுருவம், குமுதம் ஆசிரியர் கூறிய வாறு காட்சியளிக்கின்றது.

இவ்விதழில் வெளியாகியுள்ள வண்ண அட்டைப்படம், புகைப் படங்களை எடுத்துதவியவர்—'யோகா' ஓவியம் வண்ண அமைப்பு —'ஈஸ்வரி'

Regd. No. M 8354 Mooligai Mani

அமரர் கண்ணப்பர் புகழஞ்சலி மலர்



விலை ரூ. 3-00

"மூலிகைகளுக்குத் தலை இருந்தால்
கண்ணப்பரை
தலையில் தூக்கிக்கொண்டு ஆடும்"

—'அரசு' பதில்கள், 'குமுதம்' வார இதழ்-1976

Printed at Mooligai Mani Press, Shenoy Nagar, Madras-30.